விலை ரூபா: 15.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 17 செவ்வாய்க்கிழமை (02.08.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 226

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# இலங்கையின் குரலுக்கு செவிமடுத்து நீதிகிடைக்க வழி செய்யுங்கள்



## சர்வதேசத்திடம் அமைச்சர் பீரிஸ் வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கையின் குரலுக்கு செவிமடுங்கள். இலங்கைக்கு நீதி கிடைக்க வழி செய்யுங்கள் என சர்வதேச சமூகத்திடம், வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் வேண்டுகோள் விடுத்தார். 'மனிதாபிமான நடவடிக்கை உண்மைப் பகுப்பாய்வு 2006 மே 2009' என்ற அறிக்கை வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

இது தொடர்பில் அவர்மேலும் குறிப்பிட்டதாவது, எமக்கு யாரும் அழுத்தம் கொடுப்பதையோ எம்மை முடக்குவதையோ தீவிர நிலைப்பாடெடுக்க வலியுறுத்துவதையோ நாம் விரும்பவில்லை. எவரும் பொருளாதார தடையைக்காட்டி மிரட்டவேண்டிய தேவையில்லை. சிறப்பான வரலாறு கொண்ட பெருமைமிக்க நாடு இது. எனவே எமது மக்களுக்கு எது நலது என நாம் நினைக்கின்றோமோ அதை நாம் செய்வோம். இந்த நாட்டை அபிவிருத்தி செய்ய உதவுங்கள். எமது நாட்டை முன்னேற்ற (20ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதப் பட்டியலில் புலிகள்

## ஐரோப்பிய ஒன்றியத்திடம் இலங்கை மீண்டும் விண்ணப்பம்

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாத அமைப்புகள் பட்டியலில் தமிழீழ விடுதலைப் புலிகளை தொடர்ந்தும் உள்ளடக்குவதற்கு இலங்கை அரசாங்கம் மீண்டும் விண்ணப்பித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் 07.12.2001 ஆம் திகதிய ஒழுங்கு விதிக்கு அமைய பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலை அவ்வொன்றியம் மீளமைத்து வருகின்றது.

இதில் தமிழீழ விடுதலைப்புலிகளையும் உள்ளடக்குவதற்கு பிரஸல்ஸிலுள்ள இலங்கைத் தூதரகத்தினூடாக இலங்கை அரசாங்கம் விண்ணப்பித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அதன் உடன் இணைந்த அமைப்புகளுக்கும் எதிராக ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடுகள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை அவ் விண்ணப்பத்தில் இலங்கை அரசாங்கம் விபரித்துள்ளது.

2006ஆம் ஆண்டிலிருந்து தமிழீழ விடுதலைப்புலிகளை தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் ஐரோப்பிய ஒன்றியம் (20ஆம் பக்கம் பார்க்க)



கடந்த 23ஆம் திகதி இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல்களின்போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் தெரிவான பிரதானிகள் மற்றும் உப பிரதானிகள் சத்திய பிரமாணம் செய்துள்ளனர். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று பதவிப்பிரமாணங்கள் இடம்பெற்றன. மாநகரசபை ஒன்று 6, நகர சபைகள் மற்றும் 38 பிரதேச சபைகள் ஆளும் கட்சியினால் கைப்பற்றப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

## சனல் 4க்கு பதிலளிக்க புதிய வீடியோ வெளியீடு

(லண்டன்)

இலங்கையில் இடம்பெற்ற யுத்தகுற்றச் செயல்கள் தொடர்பில் சனல் 4 தொலைக்காட்சி ஒளிபரப்பிய ஆவணப்படத்திற்கு பதிலளிக்கும்வகையில்ஒரு ஆவணப்படமொன்றை இலங்கை வெளியிட்டுள்ளது. மனிதாபிமான நடவடிக்கை-உண்மைப்பகுப்பாய்வு என்ற தலைப்பிலான அறிக்கையுடன் ஆவணப்படத்தையும் பாதுகாப்புச் செயலாளர் நேற்று வெளியிட்டுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் சரணடைவது குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை

## பாதுகாப்புச் செயலர் காட்டம்

(கொழும்பு)

யுத்தகாலத்தில் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் சரணடைவது குறித்து யாரும் தனக்கு தெரிவிக்கவில்லையென பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்றுத் தெரிவித்தார்.

மனிதாபிமான மீட்புப்பணிகள் தொடர்பான தகவல்கள் அடங்கிய அறிக்கையை நேற்று கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் வெளியிட்டுவைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

181 பக்கங்களைக் கொண்டமைந்துள்ள மனிதாபிமான மீட்புப்பணிகள் தொடர்பான இந்த அறிக்கை வெளிநாட்டு தூதரகங்கள், கொழும்பு இராஜதந்திர அலுவலகங்கள் மற்றும் பாதுகாப்பு அமைச்சு போன்ற பல இடங்களில் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

தமிழீழ (20ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் 377 பட்டதாரிகள் நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையின் பதவிவெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப்பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் வெற்றிடங்கள் நிரப்பத்தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் முதல் கட்டமாக 377 பரீட்சார்த்திகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர் யாழ்ப்பாண மாவட்டத்தில் பெயர் குறிப்பிடப்பட்டவர்களுக்கு இந்நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 5ஆம் திகதி காலை 9.00 மணி முதல் குறிப்பிட்ட நேரங்களில் மாகாணப்

பெயர் விபரம் உள்ளே...

பொது நிர்வாகச் செயலகம், வடமாகாணம், 695 நாவலர்வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலும், (20ஆம் பக்கம் பார்க்க)

## சமல் ராஜபக்ஷவின் வருகைக்கு இந்திய மக்களவையில் எதிர்ப்பு

(புதுடில்லி)

இந்திய அரசின் அழைப்பின் பேரில் இலங்கை சபாநாயகர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறப்பு விருந்தினர்களாக இந்திய நாடாளுமன்ற மக்களவையில் கலந்து கொண்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து அ.தி.மு.க.உறுப்பினர்கள் கடும் கோஷங்களை எழுப்பியதால் பரபரப்பு ஏற்பட்டது.

மக்களவை கூடியதும் பேசிய சபாநாயகர் மீராகுமார் சிறப்பு விருந்தினராக வந்திருந்த இலங்கை நாடாளுமன்ற சபாநாயகர் சமல் ராஜபக்ஷ உள்ளிட்டவர்களை இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். மீராகுமாரின் வரவேற்புரையிடையே இடைமறித்த அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 158 ஓட்டங்களுடன் சுருண்டது இந்தியா; 2-வது டெஸ்ட்டிலும் இங்கிலாந்து வெற்றி

(நோட்டிங்காம்)

இந்திய அணியுடனான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி 319 ஓட்டங்களால் வெற்றியீட்டியுள்ளது.

இங்கிலாந்து-இந்திய அணிகள் மோதிய 2-வது டெஸ்ட் போட்டி நோட்டிங்காமில் நடந்தது. முதல் இன்னிங்சில் இங்கிலாந்து 221 ஓட்டங்களை எடுத்தது. அடுத்து ஆடிய இந்திய அணி டிராவிட்டின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் 288 ஓட்டங்களை எடுத்தது. 67 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இங்கிலாந்து அணி 2-வது இன்னிங்ஸைத் தொடங்கியது.

2-ம் நாள் ஆட்ட நேர முடிபில் ஒரு விக்கெட் இழப்புக்கு 24 ஓட்டங்களை எடுத்திருந்தது.


இந்நிலையில் நேற்று முன்தினம் 3-வது நாள் ஆட்டம் நடந்தது. சிறிசாந் வேகத்தில் அணித்தலைவர் ஸ்ரெரஸ் 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதன்பின் இயான் பெல், கெவின் பீற்றர்சன் இணைந்து பொறுப்பாகத் துடுப்பெடுத்தாடினர்.

இந்திய பந்து வீச்சைச் சிதறடித்த இவர்கள், மிக விரைவாக ஓட்டங்களைச் சேர்த்தனர். இதில் பெல், டெஸ்ட் அரங்கில் தனது 15-வது சதம் அடித்தார். இது இந்தியாவுக்கு எதிராக இவர் அடிக்கும் முதலாவது சதமாக அமைந்தது.

இந்த நேரத்தில் சிறிசாந்த் பந்தில் பீற்றர்சன் 63 ஓட்டங்களுக்கு வெளியேற, இந்திய வீரர்கள் நிம்மதி அடைந்தனர்.

அடுத்து வந்த இயான் மோர்கன் இணைந்தாட தனது அபார ஆட்டத்தை தொடர்ந்தார் இயான் பெல்.

137 ஓட்டங்களில் சர்ச்சைக்குரிய ரன் அவுட் வாய்ப்பில் இருந்து தப்பிய பெல், 159 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஒரு வழியாக யுவராஜ் சுழலில் சிக்கினார். அதிரடியாக ஆடிய மோர்கன் இங்கிலாந்தின் ஓட்ட எண்ணிக்கையை விரைவாக உயர்த்தினார்.



அரைச்சதம் கடந்த மோர்கன் 70 ஓட்டங்களில் பிரவீன் குமார் வேகத்தில் வீழ்ந்தார்.

அடுத்து டிராட் 2 ஓட்டங்களுடன் ஏமாற்றினார். கடைசி கட்டத்தில் மாட் [illegible], டிம் பிரஸ்னன் இணைந்து அசத்தலாக ஆடினர்.

ஆட்ட நேர முடிபில் இங்கிலாந்து அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 6 விக்கெட் இழப்புக்கு 441 ஓட்டங்கள் எடுத்திருந்தது. இதன் மூலம் 374 ஓட்டங்கள் முன்னிலை பெற்று வலுவான நிலையில் இருந்தது. அரைச்சதம் கடந்த பிரையர் 64 ஓட்டங்களுடனும், பிரஸ்னன் 47 ஓட்டங் களுடனும் ஆட்டமிழக்காமல் களத்திலிருந்தனர்.

இந்நிலையில் ஆட்டத்தின் 4-ம் நாளான நேற்றுத் தொடர்ந்து ஆடிய இங்கிலாந்து அணியின் பிரஸ்னன் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத் தினர்.

பிரஸ்னன் 90 ஓட்டங்களுடனும் ;பிரையர் 73 ஓட்டங்களுடனும் பிரவீன் குமாரின் பந்தில் ஆட்டமிழுந்தனர்.

பிரோட் அதிரடியாக ஆடிய போது 44 ஓட்டங்களை எடுத்த நிலையில் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

சுவானும் 3 ஓட்டத்துடன் ஆட்டமிழக்க இறுதியில் இங்கிலாந்து அணி 544 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதனையடுத்து 478 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்கை நோக்கி இந்திய அணி ஆடியது.

இந்திய அணியின் விக்கெட்டுகள் சீரான இடைவெளியில் மளமளவெனச் சரிந்தன. ஒரு கட்டத்தில் 55 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்து இந்திய அணி திணறியது. இந்நிலையில் டெண்டுல்கரும் ஹர்பஜன் சிங்கும் ஓரளவு நம்பிக்கையளித்த போதிலும் அவர்களும் ஆட்டமிழக்க இந்திய அணி 47.4 ஓவர்களில் 158 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இந்திய அணி சார்பில் சச்சின் டெண்டுல்கர் 86 பந்துகளில் 56 ஓட்டங்களையும் ஹர்பஜன் சிங் 44 பந்துகளில் 46 ஓட்டங்களையும் பிரவீன் குமார் 25 ஓட்டங்களையும் எடுத்தனர்.

வேறு எவரும் இரட்டை இலக்க ஓட்டங்களைப் பெறவில்லை. முகுந்த் 3 ஓட்டங்கள், டிராவிட் 6 ஓட்டங்கள், லக்ஸ்மன் 4 ஓட்டங்கள் ரெய்னா ஒரு ஓட்டம், யுவராஜ் 8 ஓட்டங்கள், தோனி பூச்சியம் என விரைவாக ஆட்டமிழந்தனர்.

இங்கிலாந்து பந்துவீச்சாளர் டிம் பிரஸ்னன் 48 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும், அன்டர்சன் 3 விக்கெட்டுக்களையும், பிரோட் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதன் மூலம் இங்கிலாந்து அணி 319 ஓட்டங்களால் அபார வெற்றியைப் பெற்றது.

4 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இங்கிலாந்து அணி தற்போது 2-0 என்ற விகிதத்தில் முன்னிலையில் உள்ளது.

## கனடாவிலிருந்து வந்தவர் சாவகச்சேரியில் சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டச்சு வீதியில் உள்ள வீடு ஒன்றிலிருந்து தூக்கில் தொங்கிய நிலையில் சடலம் ஒன்று நேற்றுத் திங்கட்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர்.

சாவகச்சேரி டச்சு வீதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான இரத்தினம் சிவகுமார் (வயது 32) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவர் அண்மையிலேயே கனடாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு தனது பிள்ளைகளைப் பார்ப்பதற்காக வந்தவர் என்று அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளதாக சாவகச்சேரிப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

அவரது சடலம் மருத்துவ பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவரது மரணம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ச-8,29)

## வ.மா.க.பணிப்பாளர் தொடர்ந்து பணியில்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தனது பணியை தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக வடக்கு மாகாணக் கல்வி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனுக்கு கட்டாய லீவு வழங்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளிவந்த போதிலும், அது தொடர்பில் எழுத்து மூலமான அறிவிப்புகள் எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)


### யாழ்ப்பாணம் மாநகரசபை

### நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் வருடாந்த மகோற்சவம் -2011

### வீதித்தடைகள், பாதைமாற்றம் மற்றும் வாகனத் தரிப்பிடங்கள் பற்றிய அறிவித்தல்

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு கீழ்க்குறிப்பிடப்படும் வீதிகள் 03.08.2011 ஆம் திகதி தொடக்கம் 30.08.2011 ஆம் திகதி வரை வாகனப் போக்குவரத்திற்காக மூடப்பட்டிருக்கும்.

1. வீதித்தடைகள்
- அரசடிச் சந்திக்கும் முத்திரைச்சந்தைக்கும் இடைப்படும் பருத்தித்துறை வீதியின் பகுதி,
- பிராமணக்கட்டுக்குளம் சந்தியிலிருந்து சங்கிலியன் வீதிச் சந்திக்கு இடைப்படும் கோயில் வீதியின் பகுதி.
- செட்டித்தெரு ஒழுங்கையிலிருந்து பருத்தித்துறை வீதி வரையான செட்டித்தெருவின் பகுதி.

2. பாதை மாற்றம்
- பேருந்துகள், சிற்றூர்திகள் மற்றும் சுமைகூடிய வாகனங்கள் ஆனைப்பந்திச் சந்தியிலிருந்து நாவலர் வீதி, கச்சேரி நல்லூர் வீதி, செம்மணி வீதி மற்றும் முத்திரைச் சந்தியூடாகச் செல்லுதல்.
- பருத்தித்துறை வீதிக்கும் நாவலர் வீதிக்கும் இடைப்பட்ட நல்லூர் குறுக்கு வீதிவழியாக பேருந்துகளும், சிற்றூர்திகளும் செல்வது முற்றாகத் தடை செய்யப்படும்.

3. வாகனத் தரிப்பிடங்கள்
- முத்திரைச் சந்தைப் பகுதியில் சங்கிலியன் சிலைக்கும் எதிர்ப்பக்கமாக பருத்தித்துறை வீதியில்,
- கந்தர்மடச் சந்திக்கு அப்பால் அரசடி வீதியில்,
- அம்மன் வீதி-பருத்தித்துறை வீதிச் சந்திக்கு அப்பால் பருத்தித்துறை வீதியிலும், வீரமாகாளி அம்மன் ஆலய வீதிகளிலும்,
- செம்மணி வீதியில் பூங்காவிற்கு அப்பால்,
- கோயில் வீதியில் சிவன் அம்மன் சந்திக்கு அப்பால்.

திருமதி யோ.பற்குணராஜா
மாநகர முதல்வர்,
யாழ்ப்பாணம்.

(சி-3899)



### சிவபார்வதி ஜோதிட நிலையம்

### பண்டித்-மஞ்சுநாத சுவாமி

தொ.பே. இல: 077 8949044

அன்பானவர்களே!

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள சுவாமி அவர்கள் வம்சாவளியாக காளி அம்மன் அருள் கொண்டு கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, தொழில், வியாபாரம், லட்சுமிகர விடயமான பொருத்தம் போன்ற விடயங்களையும், கணவன்-மனைவி ஒற்றுமையின்மை, கோர்ட் வழக்கு, உடல் நலமின்மை போன்றவற்றிற்கு பரிகாரம், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல், வெளியூர் பயணங்கள், கல்வி உத்தியோகம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், வாஸ்து சாஸ்திரம், எதிரிகள் கண்திருஷ்டி போன்ற எல்லாவித பிரச்சினைகளையும் எதிர்கால பலாபலன்களையும் தெரிவிப்பார்.

**சண்ஜெய உணவகம் (மேல்மாடி)**

414, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(HNB வங்கி அருகில், யாழ். பஸ் நிலையம் முன்பாக)

நேரம்:- காலை 7.00 மணி முதல் மாலை 7.30 மணி வரை

(5600) கட்டணம் ரூபா 101/-



### வேலைவாய்ப்பு

யாழ்.நகரில் திறக்கவிருக்கும் Innovage என்கிற தாய்லாண்ட் கொம்பனியின் கிளைக்கு ஆட்சேர்ப்பு. 6 மாத கால பயிற்சி நெறியுடன் எவ்வித பரீட்சையுமின்றி ரூ.35000/=உடன் வேலைவாய்ப்பு. முதலில் நேர்முகப் பரீட்சைக்கு வரும் 50 பேருக்கு மாத்திரமே முன்னுரிமை. பயிற்சிக் காலத்தின் போது ரூ.12000 சம்பளமும் தங்குமிட வசதி இலவசமாக வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0772151014, 0775566224, 0776219536

(5708)

# இன்று ஒரு தகவல்

## தானம் கொடுத்தவர் மனநிலை

அவர் ஒரு பெரிய குடும்பத்தில் பிறந்தவர்.

தம்முடைய சொத்துக்கள் எல்லாவற்றையும் வாரி வழங்கி விட்டு, தவம் செய்யும் பொருட்டு காட்டிற்குப் புறப்பட்டார்.

அந்தச் சமயத்தில் கடைசியாக ஒருவன் வந்து அவரிடம் கை நீட்டி, "ஐயா... எனக்கு ஏதாவது கொடுங்கள்!" என்று கேட்டான்.

அவர் கட்டியிருந்த வேட்டியைத் தவிர அவரிடம் அப்போது வேறு எதுவுமே இல்லை.

ஜரிகைக் கரை போட்ட எட்டு முழம் பட்டு வேட்டியை அவர் உடுத்தியிருந்தார்.

கடைசியாக அதைத்தான் கட்டிக்கொண்டு புறப்பட்டிருந்தார்.

அவர் தம் எதிரில் பரிதாபமாக நின்றுகொண்டிருந்தவரைப் பார்த்தார்.

அந்த எட்டு முழ வேட்டியை இரண்டாகக் கிழித்து, நான்கு முழத்தை அவனிடம் கொடுத்தார். மீதி நான்கு முழத்துணியைக் கட்டிக்கொண்டு காட்டிற்குச் சென்றார்.

இவன் என்ன செய்தான் தெரியுமா? கையில் கிடைத்த நான்கு முழ வேட்டியை எடுத்துக்கொண்டு கடை வீதிக்குச் சென்றான்.

அங்கு பழைய பட்டு வேட்டி, ஜரிகை போன்றவற்றை விலைக்கு வாங்கும் வியாபாரி ஒருவர் இருந்தார்.

இவன் அவரிடம் சென்று, "இதை விலைக்கு எடுத்துக் கொள்கிறீர்களா?" என்று வினவினான்.

இவன் வைத்திருந்த துணியை வியாபாரி ஆசையோடு வாங்கிப் பார்த்தார்.

"ஆகா! இது மிகவும் அருமையான வேட்டி... விலையுயர்ந்த ஜரிகை... இது உனக்கு எப்படி கிடைத்தது?" என்று கேட்டார்.

அவன் நடந்ததைக் கூறினான்.

உடனே வியாபாரி, "அப்படியானால் நீ ஒன்று செய்... இந்த வேட்டியின் இன்னொரு பாதியையும் அவரிடமிருந்து மெதுவாக வாங்கிக்கொண்டு வந்துவிடு... உனக்கு நிறைய பணம் தருகிறேன்" என்றார்.

இவன் கொஞ்சம் யோசித்துப் பார்த்து, கொஞ்சம் இருங்கள்... இதோ வந்து விடுகிறேன் என்று சொல்லிவிட்டு நேராகக் காட்டிற்கு விரைந்து சென்றான்.

வேட்டி கொடுத்தவர் எங்கே இருக்கிறார் என்று தேடிக் கண்டுபிடித்தான்.

அவர் காட்டில் ஓர் இடத்தில் தவக்கோலத்தில் இருந்தார்.

அவர் இடுப்பில் கட்டியிருந்த வேட்டியும் அவரை அறியாமலே நழுவிக் கீழே சரிந்து கிடந்தது. அது இவனுக்கு மிகவும் வசதியாகப் போயிற்று. இப்போது இவன் அவரைக் கேட்க வேண்டிய அவசியம்கூட இல்லை!

இவன் மெதுவாகச் சத்தம் போடாமல் அடிமேல் அடி வைத்து அவரை நெருங்கினான். அவர் கண்களை மூடிய படி நின்று கொண்டிருந்தார்.

இவன் மெதுவாகச் சென்று கீழே கிடந்த அந்தத் துணியை எடுத்துக் கொண்டு... சத்தம் போடாமல் திரும்பி நடந்தான்.

அவன் சிறிது தூரம் நடந்து ஓட ஆரம்பித்த சமயத்தில் அவன் காலில் கீழே கிடந்த ஒரு முள் 'நறுக்' என்று தைத்தது.

எனவே அவன் வலி தாங்க முடியாமல், "அம்மா!" என்று கத்தினான்.

அந்தச் சத்தம் கேட்டு கண்களை மூடி நின்று கொண்டிருந்தவரின் தவம் கலைந்தது.

அவர் மெல்ல கண்களைத் திறந்து பார்த்தார். தம் இடுப்பில் இருந்த வேட்டி அவன் கையில் இருப்பதைக் கண்டதும் அவர், "இந்த வேட்டி மீது நான் வைத்த பற்று அல்லவா இவனைத் திருடனாக ஆக்கிவிட்டது!" என்று நினைத்தார்.

அவருடைய இந்த மனநிலை எத்தகையது என்று நாம் கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

'நான் ஒரு பொருள் மீது வைத்த பற்று... இன்னொரு மனிதன் திருடன் ஆவதற்குக் காரணமாக ஆகிவிட்டதே!' என்று அவர் நினைத்தார்.

அப்படி நினைத்த அவர் யார் தெரியுமா?

அவர்தான் மகாவீரர்.

'இழந்துவிட்டேன், இழந்துவிட்டேன் என்று சொல்கி றாயே... நீ இங்கு இழப்பதற்கு உன்னுடன் என்ன எடுத்துக் கொண்டு வந்தாய்? நீ எதை உண்டாக்கினாய்...? அது அழிந்து விட்டது என்று சொல்வதற்கு?' என்பது அவரது சிந்தனை.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சகலரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வுத்திட்டத்திற்கு ஆதரவளிக்க தயார்

## ஐ.தே.க. தெரிவிப்பு

சகல இன மக்களினாலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வுத் திட்டமொன்றுக்கு தமது கட்சி பூரண ஆதரவளிக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசியல் தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்கும் முனைப்புக்களின் போது எதிர்க்கட்சிகளின் கருத்துக்களுக்கும் அரசாங்கம் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் அலிஸ்டர் பேட்டுடன் நடைபெற்ற சந்திப்பின் போது ரணில் விக்கிரம சிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது பௌதீக ஒருமைப்பாட்டை பாதுகாக்கும் வகையில் மக்கள் வாக்களித்துள்ளனர். ஆயினும் 13 ஆம் திருத்தச் சட்டத்தின் ஊடாக அரசியல் தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பதற்கு அரசாங்கம் இணங்கியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்கும் நோக்கில் அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு வர்த்தக சந்தை

இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் வழிகாட்டலில் நல்லூர் சிறிய, நடுத்தர கைத்தொழிலாளர் சங்கம், கைத்தொழிலாளர்களிற்கான சந்தைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் நல்லூர் உற்சவகாலத்தில் வர்த்தக சந்தை ஒன்றை நடத்தவுள்ளது.

இவ்வர்த்தக சந்தையில் அனைத்து சிறிய, நடுத்தர கைத்தொழிலாளர்களும் கலந்துகொண்டு தமது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த முடியும். ஆர்வமுள்ள கைத்தொழிலாளர்கள் மாவட்டக் காரியாலயம், கைத்தொழில் அபிவிருத்திச் சபை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கோ அல்லது 021 222 2421 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பினை ஏற்படுத்துமாறு யாழ். கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பதில் பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# பொருளியல் பாட கருத்தரங்கு

இவ்வாண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பொருளியல் பாட கருத்தரங்கு நாளை புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் பொருளியல் ஆசிரியர் வே.கருணாகரன் கருத்துரை வழங்குவார்.

பல்லூடக எறிகருவியின் மூலம் அண்மைக்கால பொருளாதார விடயங்கள், பரீட்சை எதிர்பார்ப்புக்கள் மற்றும் மாணவருக்கான பரீட்சை பற்றிய அறிவுரைகள் என்பன பற்றிய கருத்துரைகளும் வழங்கப்படவுள்ளன. பரீட்சைக்குத் தோற்றவுள்ள சகல மாணவர்களையும் இக்கருத்தரங்கில் பங்குபற்றி பயன்பெறுமாறு வித்தியாலய அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 75 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 60 | 60 |
| தக்காளி | 30 | 40 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 |
| கோவா | 40 | 40 | 60 |
| கரட் | 50 | 70 | 50 |
| பூசணி | 25 | 30 | 30 |
| புடோல் | 20 | 40 | 25 |
| வாழைக்காய் | 40 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 80 | 60 | 60 |
| பெரிய வெங்காயம் | 50 | 40 | 60 |
| பாகற்காய் | 80 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 50 | 50 | 60 |
| கருணைக் கிழங்கு | -- | 100 | 90 |
| பயற்றங்காய் | 110 | 90 | 180 |
| லீக்ஸ் | 50 | 40 | 50 |
| பீற்றூட் | 20 | 30 | 30 |
| கறிமிளகாய் | 50 | 50 | 60 |
| முருங்கைக்காய் | 70 | 100 | 70 |
| போஞ்சி | -- | 110 | -- |
| கத்தரிதம்புள்ள | -- | 20 | 15 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 10 |
| தேசிக்காய் | 40 | 40 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 35 | 35 |

# இராசி பலன்

*02.08.2011*
*(ஆடி 17, செவ்வாய்க்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு*
*திருதியை முன்னிரவு 7.03 மணிவரை*
*பூரம் பின்னிரவு 3.43 மணிவரை*
*இராகுகாலம் 3.03-4.33 மணிவரை*
*சுபநேரம் 10.33-12.03 மணிவரை*
*மூன்றாம் ஆடிச் செவ்வாய், ஆடிப்பூரம், சித்தாமிர்தம்.*

**மேடம்** சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், அங்காரக வழிபாடு ஆனந்தம் தரும், பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்து மகிழ்வீர்கள், சொத்துக்களால் ஆதாயம் கிடைக்கலாம்.

**இடபம்** செய் தொழிலால் முன்னேற்றமுண்டு, வாகன யோகத்தால் வளம் காணும் நாள், ஆச்சரியமான செய்திகள் வந்து சேரலாம், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் அதிகரிக்கும்.

**மிதுனம்** குடும்பத்தில் சிலரை திருப்திப்படுத்துவதற்காக சில பொறுப்புக்கள் எடுத்து நடத்த வேண்டியிருக்கும், உடன் பிறப்புக்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.

**கடகம்** தொலைதூரச் செய்திகள் மகிழ்ச்சியைத் தரும், நிகழ்காலத் தேவைகளை நிறைவு செய்வதில் அக்கறை காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, வருமானம் திருப்தி தரும்.

**சிங்கம்** அம்பிகை வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், மனக்குழப்பம் அகல நண்பர்கள் உறுதுணை புரிவர், திடீர் பயணங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**கன்னி** வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வதன் மூலம் அமைதியைப் பேணிக் கொள்ளலாம், காரிய அலைச்சல்களால் சஞ்சலங்கள் ஏற்படலாம்.

**துலாம்** பொருளாதார நிலை உயர்வடையும் நாள், மாலை நேரம் அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போட்ட திட்டங்கள் எளிதில் நிறைவேறும்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், எதிர்பார்த்த தொகை வந்து சேரலாம், விருந்தினர் வருகையுண்டு, பாதியில் நின்ற பணியை மீண்டும் தொடர்வீர்கள்.

**தனுசு** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதியைக் கொடுக்கும், தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**மகரம்** அம்பிகை வழிபாட்டால் மன அமைதியடைய வேண்டிய நாள், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது.

**கும்பம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், குடும்பத்தினருக்காக பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**மீனம்** நிர்வாகத் திறமை பளிச்சிடும் நாள், நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பழைய பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிப்பீர்கள்.

வளவன்

## சங்கிலியன் சிலை திறப்பு விழாவன்று

# பருத்தித்துறை வீதியூடாக பயணிப்போர் மாற்றுப் பாதையை பயன்படுத்த அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் ஏற்பாட்டில் சங்கிலியன் திருவுருவச் சிலை திறப்புவிழா நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளதால் அன்றைய தினம் காலை 6 மணியில் இருந்து 10 மணிவரை அவ்வீதியூடான வாகனப் போக்குவரத்து தடைசெய்யப்பட்டு மாற்று வழிப்பாதை ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி .யோ. பற்குணராசா அறிவித்துள்ளார்.

இதற்கமைய யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை வீதியூடாக செல்லும் சகல வாகனங்களும் நல்லூர் கோவில் வீதி (நல்லூர் பின் வீதி ஊடாகச் சென்று முடமாவடிச் சந்தியில் திரும்பி சட்டநாதர் வீதியூடாக பருத்தித்துறை வீதியையடைந்து பயணத்தைத் தொடருமாறும் அதேபோன்று பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணிக்கும் சகல வாகனங்களும் சட்டநாதர் வீதியூடாக முடமாவடிச் சந்தியை அடைந்து அங்கிருந்து கோவில் வீதியூடாக (நல்லூர் பின் வீதி ) பயணத்தைத் தொடருமாறும் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# அமைச்சர் டக்ளஸின் நிதியொதுக்கீட்டில் வீதி மின் விளக்குகள் பொருத்தும் பணி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட வீதிகளில் தெருவோர மின் விளக்குகள் பொருத்தும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது.

இப்பணி அமைச்சர் கே. என்.டக்ளஸ் தேவானந்தாவின் நிதி ஒதுக்கீட்டிலும் நல்லூர் பிரதேச ஈ.பி.டி.பி.அமைப்பாளரும் நல்லூர் பிரதேச சபை உறுப்பினருமான அம்பலம் இரவீந்திரதாசன் வழிகாட்டலிலும் இடம்பெறுகின்றது.

தற்போது மின்விளக்கு ஆடியபாதம் வீதி, கொக்குவில் சந்தி, நந்தாவில் அம்மன் கோவிலடி, குட்செட் வீதி, கோண்டாவில், கே.கே. எஸ்.வீதி, பூநாறி மரத்தடி, பாற்பண்ணை வீதி, முடமாவடி சந்தி, செங்குந்தா இந்துக் கல்லூரி வீதி, பூதவராயர் வீதி,முடமாவடி சந்தி, தலங்காவல் பிள்ளையார் கோவிலடி, கொக்குவில் இந்துக் கல்லூரி லேன், மணியர்பதி வீதி உடையார் லேன், கொக்குவில் பொற்பதி வீதி, கோண்டாவில் முத்தட்டு வீதி, மஞ்சத்தடி இணுவில், காரைக்கால் இணுவில் போன்ற இடங்களில் பொருத்தப்பட்டுள்ளன.

இதனால் அப்பகுதி மக்கள் மிகவும் பயன் பெற்று வருவதாக தெரிவிக்கின்றனர். (ஸ்ரீ)

# சிறப்பு சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணிக்கு பூசை முடிவுற்றதும் மகாபாரதம் எனும் தொடர் சொற்பொழிவு நடைபெறும்.

இச் சொற்பொழிவினை பண்டிதர் பொன் சுகந்தன் வழங்கவுள்ளார். (ஸ்ரீ-35)

# கால்நடை வைத்தியர் அலுவலகம் மூடப்பட்டுள்ளதால் மக்கள் சிரமம்

(காரைநகர்)

காரைநகர் பிரதேசத்தில் கால்நடை வைத்தியர் அலுவலகம் மூடப்பட்டுள்ளதால் கால் நடை வளர்ப்போர் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

காரைநகர் பிரதேசத்தில் கால்நடை வைத்திய உப அலுவலகம் வட்டுக்கோட்டை கால்நடை வைத்திய அலுவலக பிரிவின் கீழ் இயங்கி வருகின்றது.

வாரந்தோறும் ஒவ்வொரு வியாழக்கிழமையும் காரைநகர் கமநல நிலைய கட்டடத்திலேயே இயங்கி வந்தது.

கடந்த சில வாரங்களாக இவ்வலுவலகம் குறித்த தினத்தில் வைத்தியர் வராமையால் மூடப்பட்டுள்ளது.

இதனால் கால்நடை வளர்க்கும் பலர் கால்நடைகளுடன் வந்து காவல் நின்று திரும்பிச் செல்லும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே வாரத்தில் ஒரு நாள் இயங்கும் இவ் அலுவலகத்தினை கிரமமாக இயங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கால்நடை வளர்ப்போர் தெரிவிக்கின்றனர். (ஸ்ரீ-246)




# மோ.சைக்கிளால் விழுந்து படுகாயம்

(சாவகச்சேரி)

மோட்டார் சைக்கிளின் பின் ஆசனத்திலிருந்து சென்று கொண்டிருந்த பெண்ணொருவர் வீழ்ந்து படுகாயமடைந்துள்ளார். இச்சம்பவம் சாவகச்சேரி கச்சாய் வீதியில் நேற்றுமுன்தினம் காலை இடம் பெற்றுள்ளது. 65 வயதுடைய பொ.பிலோமினா என்பவரே காயமடைந்தவராவார். (ந-29)

# ஞானச்சுடர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையால் ஞானச்சுடர் ஆடிமாத இதழ் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் அனைத்தையும் அள்ளிக் கொடுக்கும் ஸ்ரீ ஆஞ்சநேய வழிபாடு, ஆன்மீகமும் சமயமும் பண்பாட்டு மையங்கள் , விழாக்களும் பண்டிகைகளும், துடக்கு என்றால் என்ன போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (ஸ்ரீ)

# தரம்-5 இற்குரிய சைவநெறி பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலய பாடசாலைகளில் கற்கும் தரம் 5 மாணவர்களுக்கான இரண்டாம் தவணைக்குரிய சைவநெறி பரீட்சை நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும்.

மேற்படி பரீட்சைக்கான வினாத்தாள் பொதிகளை அதிபர்கள் யாழ்.கல்வி வலயத்தில் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.கல்வி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# பாதை நடைபவனிக்கு ரூ.50 ஆயிரம் அன்பளிப்பு

(பருத்தித்துறை)

யாழ். போதனா வைத்தியசாலையில் சிறுவர்களுக்கான மூற்றுமுழுதான புற்றுநோய் பிரிவினை நிர்மாணிப்பதற்காக இலங்கையின் தென்பகுதியான தெய்வேந்திர முனையிலிருந்து கடந்த ஜூலை மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட மகத்தான நடைபயணம் கடந்த 27 ஆம் திகதி பருத்தித்துறை பிரதேச செயலகத்தை வந்தடைந்த போது 50 ஆயிரம் ரூபா நிதி அன்பளிப்பு செய்யப்பட்டது.

மேற்குறித்த பாதை நடை பவனிக்கு பருத்தித்துறை பிரதேச செயலக உத்தியோகத்தர்களாலே மேற்குறித்த நிதி வழங்கப்பட்டதாக பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆர். வரதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.(ஸ்ரீ-3)

# சடலங்களை பொறுப்பேற்க அறிவித்தல்

யாழ். போதனா வைத்தியசாலையில் மரணமான இருவரின் சடலங்கள் வைத்தியசாலையின் பிரேதஅறையில் வைக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

விடுதி 1 இல் சிகிச்சை பெற்று மங்கைநகர் மல்லாவியைச் சேர்ந்த எம். சின்னம்மா (வயது 58) என்பவர் கடந்த 26 ஆம் திகதி மரணமானார்.

அத்தோடு விடுதி 4 இல் சிகிச்சை பெற்று வந்த இணுவில் மேற்கு சுன்னாகத்தைச் சேர்ந்த பி.கங்கயதாசன் (வயது 65) என்பவர் கடந்த 27 ஆம் திகதி மரணமாகியுள்ளார். உரிமை கோராது வைக்கப்பட்டுள்ள இச்சடலங்களை உரித்துடையோர் 3 நாட்களுக்குள் பொறுப்பேற்றுக் கொள்ளும்படி பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-4)

# வீட்டு மதிலுடன் மோதி பஸ் பலத்த சேதம்

யாழ்ப்பாணத்திலிருந்து ஆழியவளை நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்று வீட்டு மதிலுடன் மோதி பலத்த சேதமடைந்துள்ளது.

இச் சம்பவம் கடந்த 29 ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு அரியாலை ஏ-9 வீதியில் மாம்பழச்சந்திக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, யாழ்ப்பாணத்திலிருந்து ஆழியவளை நோக்கி சுமார் 70 பயணிகளுடன் பயணித்துக் கொண்டிருந்த பேருந்தின் முன் பக்க சில்லின் அச்சு உடைந்து வாகனம் வீதியை விட்டு விலகியதால் அருகிலுள்ள மதிலுடன் மோதுண்டு சேதமடைந்துள்ளதுடன் மதிலும் உடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் தெய்வாதீனமாக பயணித்தவர்களுக்கு எதுவித உயிர் சேதமும் ஏற்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ -2-8)

# ஆடிப்பூரத்திருவிழா

(நவாலி)

நவாலியூர் அருள்மிகு களையோடை கண்ணகையம்மன் ஆலய ஆடிப்பூரத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் காலை 9 மணிக்கு விசேட அபிஷேகமும் பூசையும் நடைபெற்று தொடர்ந்து மாலை நிகழ்வுகளாக 4 மணிக்கு யாழ். மாவட்டத்தின் ஈழத்தின் தலைசிறந்த தவில் நாதஸ்வர வித்துவான்களின் கச்சேரி நடைபெறும்.

அத்தோடு இரவு 7 மணிக்கு வசந்த மண்டப பூசையும் 8 மணிக்கு அம்பாள் மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்டு அழகிய முத்து சப்பறத்தில் வீதியுலா வருவார். (ஸ்ரீ-4-26)

# கஞ்சா வைத்திருந்த நபருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமான முறையில் 105 கிராம் கஞ்சாவை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராசா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 10 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் தலா 2மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3)

# மது போதையில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த இருவருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

மது போதையில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் இரண்டு நபர்கள் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ ஆனந்தராஜா குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு இருவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் தலா ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3)

# ஸ்ரீமத் மயில்வாகனம் சுவாமிகளின் குருபூசை

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச் சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வு தொட ரில் எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் ஸ்ரீமத் மயில்வாகனம் சுவாமிகளின் 26 ஆவது குருபூசைத்தினம் கொண்டாடப்படவுள்ளது.

அத்துடன் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்ச்சியும் இடம்பெறும். (ஸ்ரீ-35)

# குறுகிய அரசியல் இலாபங்களுக்காக ஜே.வி.பி.கட்சி செயற்படுகின்றது

## அமைச்சர் விமல் வீரவன்ச குற்றச்சாட்டு



ஜே.வி.பி.கட்சி குறுகிய அரசியல் இலாபங்களுக்காக நாட்டுக்கு எதிராக செயற்பட்டு வருவதாக ஜே.வி.பி. கட்சியின் தலைவர் விமல் வீரவன்ச குற்றம் சுமத்தியுள்ளார்.

புலம்பெயர் தமிழர்களுடன் இணைந்து கொண்டு நாட்டுக்கு எதிராக ஜே.வி.பி குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு எதிராக யுத்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதில் புலம்பெயர் தமிழர்கள் முனைப்புக் காட்டி வருவதாகவும் அந்த முனைப்புக்களுக்கு ஜே.வி.பி. ஒத்துழைப்பு வழங்கும் வகையில் செயற்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த போதிலும் ஆயிரக்கணக்கான தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக ஜே.வி.பி.யினர் அண்மையில் குற்றம் சுமத்தியுள்ளனர். இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் வகையில் விமல் வீரவன்ச கருத்து வெளியிட்டுள்ளார்.

புனர்வாழ்வளிக்கப்பட்டு வரும் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களை தமிழ் அரசியல் கைதிகளாக வெளிக்காட்ட ஜே.வி.பி முயற்சித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கத்திற்கு அவதூறு ஏற்படுத்தும் முனைப்புக்களில் ஜே.வி.பி. தீவிரமாக இறங்கியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

## விலங்கு விசர்நோய் தடுப்பூசியேற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்த வண்ணார் பண்ணை பொது சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதில் நாளை புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை அன்னசத்திர லேன், நாவலர் வீதியிலும் காலை 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை மணிக்கூட்டுலேனிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி ஊசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

## சுகாதார அமைச்சர் இந்தியாவுக்கு பயணம்

(கொழும்பு)

அரச வைத்தியசாலைகளுக்குத் தேவையான மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்யும் முறைமையை வலுப்படுத்துவது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக சுகாதார அமைச்சர் இந்தியா செல்லவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கிறது.

இந்த விஜயத்தின் போது இந்திய சுகாதார அமைச்சர் மருந்து உற்பத்தியாளர் சங்க உறுப்பினர்கள் மற்றும் மருந்து விநியோகப் பிரிவின் பிரதிநிதிகள் ஆகியோரை அமைச்சர் சந்திக்கவுள்ளார்.

தரம் கூடிய மருந்து பொருட்கள் கொள்வனவு செய்தல், உரிய நேரத்தில் தேவைக்கேற்ப அளவு மருந்துகளை கொள்வனவு செய்வது தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-4)

## பாஸ் நடைமுறை காரணமாக மன்னார் மீனவர்கள் பாதிப்பு

(கொழும்பு)

மீனவர்களுக்கான விசேட பாஸ் நடைமுறை நீக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்து சுமார் மூன்று வாரங்களைக் கடந்துள்ள போதும் மன்னார் மாவட்டத்தில் இன்னும் பாஸ் நடைமுறை அமுலில் இருப்பதாக மீனவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் இருந்து கடலுக்குச் செல்லும் அனைத்து மீன் பிடித்துறை முகங்களுக்கு அருகாமையிலும் கடற்படையினருடைய சோதனைச் சாவடிகள் காணப்படுகின்றது.

மீனவர்கள் குறித்த சோதனைச்சாவடிக்கு சென்று கடற்படையினரிடம் தேசிய அடையாள அட்டை மற்றும் ஏனைய ஆவணங்களை சமர்ப்பித்தால் கடலுக்குள் செல்லுவதற்கான பாஸ் ஒன்றை வழங்குகின்றனர். அதனைக் கொண்டே கடலில் மீன்பிடிக்கச் செல்ல வேண்டும்.

குறித்த பாஸ் நடைமுறையினால் உரிய நேரத்திற்கு தொழிலுக்குச் சென்று கரை திரும்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர். கடற்றொழிலுக்கான இந்த பாஸை பெற்றுக் கொள்வதற்கு மீனவர்கள் ஒவ்வொருவரும் நீண்ட நாட்கள் பாதுகாப்புத் தரப்பினரை தேடி அலைந்து திரிவதாக தெரிவிக்கின்றனர். விண்ணப்பப் படிவம் ஒன்றில் சுமார் 10 இற்கும் மேற்பட்ட அதிகாரிகளிடம் கையொப்பத்தினை பெற்று பின்னரே புதிய பாஸ் வழங்கப்படுகின்றது.

ஆனால் தற்போது பல இடங்களில் தொழிலுக்குச் செல்லும் மீனவர்களுக்கு கடற்படையினரிடம் இருந்து புதிய பாஸ் இன்னும் வரவில்லை என்றும் இதனால் பல மாதக்கணக்காக தொழிலுக்குச் செல்ல முடியாத நிலையில் இருப்பதாகவும் இதனால் தமது குடும்பம் பட்டினிச்சாவை எதிர்நோக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் சிலர் தெரிவிக்கின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி மன்னார் மாவட்ட மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-2-4)

## கடற்றொழிலை நவீன முறையில் அபிவிருத்தி செய்யத் திட்டம்

(கொழும்பு)

இலங்கையின் கடற்றொழிலை நவீன முறையில் அபிவிருத்தி செய்ய திட்ட மிட்டுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

சாய்ந்தமருது முகத்துவார பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மீனவர் பல்தேவை கட்டடத்தினை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆழ்கடல் மீன்பிடியை அபிவிருத்தி செய்வதற்காக நவீன மீன்பிடி உபகரணங்களை பெற்றுக் கொடுக்கவுள்ளதாகவும் கடற்றொழிலுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரிப்பதன் மூலமாக கடற்றொழிலை அபிவிருத்தி செய்ய முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

2013 ஆம் ஆண்டு வடக்கு- கிழக்கு மாகாணங்களில் 15 மீன்பிடி துறைமுகங்களை அமைக்க திட்டமிட்டுள்ளதாகவும் விரைவில் ஒலுவில் துறைமுகத்தினை திறக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

## என்றிப் திட்டத்தின் கீழ் கல்மடுக்குளம் புனரமைப்பு

(கிளிநொச்சி)

என்றிப் திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் கிளிநொச்சி மாவட்ட கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கல்மடுக்குளம் துரித கதியில் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது.

கடந்த 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற யுத்தத்தினால் அணைக்கட்டுக்கள் உடைக்கப்பட்ட நிலையிலிருந்த மேற்குறித்த குளத்தால் அதனை அண்டிய பகுதிகளில் உள்ள விவசாயிகள் விவசாயத்தை மேற்கொள்ள முடியாத நிலை இருந்தது. கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்ட புனரமைப்பு வேலைகள் மழைக்காலத்தில் இடைநிறுத்தப்பட்டு மீளவும் கடந்த மேமாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டு துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதனால் அப்பகுதியில் பெரும் போக விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என அப்பகுதி விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-3)

## அமெரிக்க கடன் நெருக்கடியால் இலங்கைக்கும் பிரச்சினை

(கொழும்பு)

அமெரிக்க கடன் நெருக்கடி இலங்கையின் பொருளாதார ரீதியில் பல பிரச்சினைகளை தோற்றுவிப்பதாக ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முன்னாள் உப வேந்தரும் பொருளாதார விஞ்ஞானமும் தொடர்பான பேராசிரியருமான ஜகத் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அமெரிக்க சந்தையுடன் இலங்கை நேரடி தொடர்புகளை வைத்திருப்பதாகவும் இதில் கொள்கை ரீதியிலான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டிலுள்ள சில பொருட்களை அமெரிக்கா கொள்வனவு செய்வதுடன் அதற்கான வரியை இலங்கை அறவிடுவதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-4)

## சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருக்கும் நபர்களை கைது செய்யுமாறு பணிப்பு

(கொழும்பு)

சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருக்கும் நபர்களை கைது செய்வதற்கான சோதனை நடவடிக்கைகள் நேற்று முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புப் பிரிவின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் சட்டவிரோத ஆயுதங்களை கையளிப்பதற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் நிறைவடைந்துள்ளது. இந்நிலையிலேயே பாதுகாப்பு பிரிவு இந்த அறிவித்தலை விடுத்துள்ளது.

அவ்வாறு ஆயுதங்களை வைத்திருத்தல் மற்றும் கொண்டு செல்லுதல் தொடர்பில் கிடைக்கப்பெறும் தகவல்களுக்கு அமைய குறித்த நபர்களை பாகுபாடின்றி கைது செய்யுமாறு கிழக்கு பாதுகாப்பு படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் பொனிஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

அனுமதியற்ற ஆயுதங்களை ஒப்படைப்பதற்கு கடந்த மாதம் 30 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. இந்தக் காலப்பகுதியில் துப்பாக்கிகள், கைக்குண்டுகள், வெடிபொருட்கள் உட்பட பல்வேறு ஆயுதங்கள் பாதுகாப்புத் தரப்பினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-4)

## கிளிநொச்சி மாவட்டத்தில் வீட்டுத் தோட்டப் போட்டி

கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்களத்தினரால் இவ்வாண்டுக்கான வீட்டுத் தோட்டப் போட்டி எதிர்வரும் செப்டெம்பர் மாத நடுப் பகுதியில் கிளிநொச்சி மாவட்டத்தில் நடாத்தப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) அ.செல்வராஜா அறிவித்துள்ளார்.

மேற்குறித்த போட்டி கிராம வீட்டுத் தோட்டப் போட்டி, பாடசாலை வீட்டுத் தோட்டப் போட்டி, மாணவர் வீட்டுத் தோட்டப் போட்டி, அலுவலக வீட்டுத் தோட்டப் போட்டி, அலுவலர் வீட்டுத் தோட்டப் போட்டி என 5 வகையாக நடத்தப்படவுள்ளது.

இதில் ஒவ்வொரு வகையிலும் 3 பேர் வீதம் ஐந்து பிரிவிலும் 15 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு பணப்பரிசிலும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளது.

இப் போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் அப்பகுதி விவசாய போதனாசிரியரிடமோ அல்லது மாவட்ட தலைமை அலுவலகத்திடமோ தொலைபேசி ஊடாக தொடர்பு கொள்வதாயின் 021 2285726 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3)

# இரணைமடுக்குள நீர்விநியோக செயற்பாடுகள் இடைநிறுத்தம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இரணைமடு குளத்தின் வலதுகரை, இடதுகரை டி1, டி2, டி3 ஆகிய வாய்க்காலுக்கான நீர் விநியோக செயற்பாடுகள் நேற்று திங்கட்கிழமையுடன் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன திணைக்கள பணிப்பாளர் என்.சுதாகரன் அறிவித்துள்ளார்.

சிறுபோக பயிர்ச் செய்கையின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதற்கு அமைவாகவே மேற்குறித்த வாய்க்கால்கள் மூடப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட வாய்க்கால்களை விட மிகுதி வாய்க்கால்களால் நீர் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

(ஸ்ரீ-3)

# நாட்டின் நற்பெயரை பாதுகாக்க அரசாங்கம் தவறியுள்ளது

## ஐ.தே.க.தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் நற்பெயரை பாதுகாப்பதற்கு தற்போதைய அரசாங்கத்திற்கு முடியாமற் போயுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லஷ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

சனல் 4 இரண்டு வருடங்களுக்கு முன்னர் முதற்கட்ட காட்சிகளாக நான்கு அல்லது ஐந்து புகைப்படங்களை ஒளிபரப்பிய போது அதற்கெதிராக வழக்குத்தாக்கல் செய்யப் போவதாக அமைச்சர் மஹிந்த சமரசிங்க கூறினார். ஆனால் வழக்குத் தொடரப்பட்டதா என அவர் கேள்வி எழுப்பினார்.

அதன் பின்னர் பல காணொளிகள் ஒளிபரப்பப்பட்ட போதிலும் நாட்டின் நற்பெயரை பாதுகாப்பதற்கு தற்போதைய அரசாங்கத்திற்கு முடியாமற் போயுள்ளது.

இதேவேளை நிராயுதபாணிகளான மக்களின் உரிமைகளுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் அரசாங்கத்திற்கு எதிராகவே இத்தகைய ஆதாரமற்ற குற்றம் சுமத்தப்படுவதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

முழு உலகும் உணரும் வகையில் சனல் 4 தொலைக்காட்சிக்கு எதிராக மக்களால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்தாகவும் அதனைக் கண்டு மேலும் பித்துப்பிடித்த சனல் 4 மீண்டும் மாறுபட்ட ஆவணப்படமொன்றை சர்வதேச மட்டத்தில் வெளியிட்டுள்ளது.

நிராயுதபாணிகளான அப்பாவி மக்களின் உரிமைகளுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் அரசாங்கத்திற்கு எதிராகவே தொடர்ச்சியான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

(ஸ்ரீ-4)

# மன்னாரில் மீனவர்கள் மனிதசங்கிலி போராட்டம்

(கொழும்பு)

இலங்கை மீனவர்கள் எதிர்நோக்கிவரும் நெருக்கடிகள் தொடர்பில் தீர்வுகளை பெற்றுக்கொடுக்கக் கோரி அடுத்த வாரம் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ள தாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 8 ஆம் திகதி மன்னார் கரையோரப் பிரதேசத்தில் மனிதசங்கிலி போராட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக அனைத்திலங்கை மீனவ மக்கள் தொழிற்சங்க ஒன்றியத்தின் பேச்சாளர் டினேஸ் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதன்போது மீனவர்களின் நெருக்கடி நிலைகள் மற்றும் தொடரும் இந்திய கரையோர காவல்படையினரின் கைதுகள் குறித்து தமது எதிர்ப்புகளை மீனவர்கள் வெளியிடவுள்ளனர்.

இந்த மனித சங்கிலிப் போராட்டத்தில் 33 அமைப்புகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மீனவர்கள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது தவிர இந்திய சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்ட நிலையில் கவலைக்கிடமாக இருக்கும் மீனவர்களை விடுதலை செய்யவும் வலியுறுத்தப்படவுள்ளது.

இந்நிலையில் இராமேஸ்வரம் மீனவர்கள் 5 பேரை இலங்கை கடற்படையினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

எனினும் அவர்கள் சர்வதேச கடல் எல்லையில் மீன்பிடித்து கொண்டிருந்த போதே கைது செய்யப்பட்டதாக இந்திய தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் 5 மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் கைது செய்து தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

(ஸ்ரீ-4)

# தேசிய தாய்ப்பாலூட்டல் வாரம் நேற்று முதல் ஆரம்பம்

(கொழும்பு)

தேசிய தாய்ப்பாலூட்டல் வாரம் நேற்று முதலாம் திகதி ஆரம்பமானது. தாய்ப் பாலூட்டல் ஊக்குவிப்பு நடவடிக்கைகளை ஒரு மாதத்திற்குள் மாத்திரம் மட்டுப்படுத்தாமல் இம்மாதம் முழுவதும் அதனை செயற்படுத்துமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

தேசிய தாய்ப்பாலூட்டல் வாரத்தின் நிமித்தம் விசேட சுற்றிக்கையொன்றை சுகாதாரத் திணைக்களம் வெளியிட்டுள்ளது. இச்சுற்றறிக்கை மாகாண சுகாதாரப் பணிப்பாளர்களுக்கும் மருத்துவ அலுவலக அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தாய்ப்பாலூட்டல் குறித்து அதிகம் பேசுவோம் என்ற தொனிப் பொருளைக் கொண்ட இவ்வருட தேசிய தாய்ப்பாலூட்டல் வாரத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள் இச்சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தெற்காசிய நாடுகளில் குழந்தைகள் பிறந்த முதல் மணித்தியாலயத்திற்குள் 85 சதவீதம் தாய்ப்பால் ஊட்டப்படும் நாடாக இலங்கை விளங்குவது குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

# தமிழக அரசியல்வாதிகளை நாட்டிற்கு அழைத்து தெளிவுபடுத்த வேண்டும்

## பேராசிரியர் ரொஹான் குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழக அரசியல்வாதிகளை நாட்டிற்கு அழைத்து அவர்களுக்கு வடக்கு- கிழக்கு மாகாணங்களின் தற்போதைய நிலைமை தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டுமென பேராசிரியர் ரொஹான் குணவர்த்தன வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கு எதிராக பொருளாதார தடை விதிக்கப்பட வேண்டும் என தமிழக முதல்வர் மீண்டும் வலியுறுத்தியமை தொடர்பில் கருத்து வெளியிட்ட போதே பேராசிரியர் ரொஹான் குணவர்த்தன இதனை குறிப்பிட்டார்.

தமிழக அரசியல்வாதிகள் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் இலங்கை அரசாங்கம் அவர்கள் தொடர்பில் நட்புறவுடன் செயற்படும்.

தமிழக அரசியல்வாதிகள் மிகவும் முக்கியமான நபர்கள் அல்லவென குறிப்பிட்ட அவர் எம்.ஜி. ராமச்சந்திரன், மு.கருணாநிதி மற்றும் ஜெயலலிதா ஜெயராம் ஆகியோர் மூன்றாம் நிலைத் தலைவர்கள் எனவும் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும் மூன்றாம் நிலைத்தலைவர்கள் என அவர்களை இலங்கை அரசாங்கம் ஒதுக்கி வைக்க முடியாதெனவும் காரணம் தென்னிந்தியா இலங்கைக்கு மிகவும் அருகில் அமைந்துள்ள நாடு என்பதே இதற்கு காரணம்.

அவர்கள் எவ்வாறான தீய செயல்களை மேற்கொண்டிருந்தாலும் அவர்களுடன் சிறந்த உறவுகளைப் பேணுவது முக்கியமெனவும் புதுடில்லியுடன் பேணும் நட்புறவை சென்னை வரை விஸ்தரிக்க வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஸ்ரீ-4)



ஆறுகால்மடம் அறிவொளி ஞானக்குழந்தை இல்லப் பாலர் பாடசாலையின் விளையாட்டு போட்டி நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் கௌரவ விருந்தினராக கலந்துகொண்ட வண்ணை ஸ்ரீ வைத்திலிங்க வித்தியாலய அதிபர் புஸ்பவதி சண்முகராசா மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதை படத்தில் காணலாம்.

நல்லூரைத் தலைநகராகக் கொண்டு யாழ்ப்பாணம் ராஜதானியை
ஆட்சி செய்த கடைசி அரசனான சங்கிலி மன்னனின் புனரமைக்கப்பட்ட

உயிரோவிய உருவச் சிலை
திறப்பு விழா

தலைவர்:- கௌரவ யாழ் மாநகர முதல்வர்
திருமதி.யோகேஸ்வரி பற்குணராசா அவர்கள்

காலம்:- 03.08.2011 புதன்கிழமை காலை 7.00 மணி

இடம்:- முத்திரைச்சந்தி, நல்லூர்.

திரை நீக்கம் :- மாண்புமிகு கௌரவ டக்ளஸ் தேவானந்தா,
பா.உ, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும்
சிறுதொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர்.

இவ் வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு
அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.

மாநகர முதல்வர்,
உறுப்பினர்கள்,
மாநகர ஆணையாளர்,
உத்தியோகத்தர்கள்.

(சி-3898)

# சனல்-4 க்கு தகவல் வழங்கியோரின் விபரங்கள் வெளியிடப்பட வேண்டும்

## மேஜர் ஜெனரல் சவேந்திரசில்வா கோரிக்கை

(கொழும்பு)

பிரித்தானிய ஊடகங்கள் இலங்கை அரசுக்கு களங்கம் ஏற்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக ஐ.நா.வுக்கான இலங்கைப் பிரதி நிரந்தர வதிவிடப்பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திரசில்வா குற்றம் சாட்டியுள்ளார்.

பிரித்தானியாவில் உள்ள விடுதலைப் புலிகளின் செயற்பாட்டாளர்களின் உத்தரவுக்கு அமையவே பிரித்தானிய ஊடகங்கள் அவ்வாறு நடந்து கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

இராஜதந்திர ரீதியில் இலங்கை அரசு மீது நெருக்கடி கொடுப்பதற்காக விடுதலைப்புலிகளின் செயற்பாட்டாளர்களால் சனல்-4 தொலைக்காட்சி குத்தகைக்கு அமர்த்தப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கு மேலதிக நேர வேலைகளை செய்யும் சனல் 4 வலையமைப்பு தன்னிடம் பெறப்பட்ட செவ்வியை முழுமையாக ஒளிபரப்ப முடியுமா என்றும் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா சவால் விடுத்துள்ளார்.

அந்தச் செவ்வியை நாங்கள் பதிவு செய்வோம் என்றோ அல்லது இலங்கை வலையமைப்புக்கள் ஊடாக வெளியிடுவோம் என்றோ அவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை என்றும் தற்போது அது இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளர்.

பணியகம் செல்லும் வழியில் அவர்கள் தன்னைத் தொடர்ச்சியாக பின் தொடர்ந்து வந்ததால் அந்த இடத்தில் செவ்வியை ஒளிப் பதிவு செய்ய தயார் நிலையில் இருந்ததாகவும் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா கூறியுள்ளார்.

சரணடைவோரின் கதையை முடித்து விடுமாறு பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ எனக்கு உத்தரவிட்டதாக கூறிய அந்த இராணுவ அதிகாரியின் அடையாளத்தை வெளிப்படுத்துமாறும் சனல் 4 தொலைக் காட்சியின் வெளிவிவகார செய்தியாளர் ஜொனாதன் மில்லரிடம் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா சவால் விடுத்துள்ளார்.

மரபு வழி இராணுவப் பலத்தை இழந்துள்ள நிலையிலும் விடுதலைப்புலிகளின் குழுக்கள் தமது இலக்குகளை அடைவதற்கு பிரித்தானிய ஊடகங்கள் மேலதிக நேரத்தை ஒதுக்கி பணியாற்றுவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

சனல் 4 தொலைக்காட்சியின் தகவல்களை வைத்துக் கொண்டு போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறும் அனைத்துலகப் பொறிமுறை ஒன்றை உருவாக்க வேண்டும் என்று அழைப்பு விடுக்கும் நாடுகள் அவர்களுக்குத் தகவல் வழங்கியவர்களின் அடையாளத்தை வெளிப்படுத்துமாறு கோர வேண்டும் என்றும் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா கேட்டுக் கொண்டுள்ளார்.

அவர்கள் இலங்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறும் நீதிக்குப் புறம்பான படுகொலைகள், பாலியல் வல்லுறவுகள் மற்றும் ஏனைய குற்றங்கள், 40



ஆயிரம் பேரின் படுகொலை தொடர்பாக உண்மையிலேயே கரிசனை கொண்டிருந்தால் அனைத்துலக சமூகத்தின் முன்பாக அவர்கள் தமக்கு தகவல் வழங்கியவர்களின் விபரங்களை வெளியிட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

முகம் தெரியாதவர்களின் போர்க்குற்றச் சாட்டுக்களுக்கு தம்மால் பொறுப்புக்கூற முடியாது என்றும் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)




## மாணவர்களின் கல்வியைப் பாழாக்கும் கட்டுப்பாடற்ற ஒலி பெருக்கிப் பாவனை

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள அளவெட்டி கிராமத்தில் கட்டுப்பாடற்ற ஒலிபெருக்கி பாவனையால் மாணவராகிய நாம் படிக்க முடியாது திணறுகின்றோம்.

இக்கிராமத்தில் ஒன்றுக்கொன்று ஏறத்தாழ 100 மீற்றர் இடைவெளியில் சிறுசிறு கிராமியக் கோவில்கள் பல உள்ளன. இவை தற்போது வெளிநாட்டில் வசிப்பவர்களின் நிதியுதவியுடன் திருத்தப்பட்டு கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக்கோவில்களுக்கு சொந்தமாக ஒலிபெருக்கிகளையும் அன்பளிப்புச் செய்துள்ளனர்.

இதனால் ஒலிபெருக்கிப் பாவனை கட்டுப்பாடற்ற வகையில் மற்றவர்களுக்கு துன்பம் விளைவிக்கும் வகையில் உயர் ஒலி அளவில் ஒலிபரப்பப்படுகிறது. இதனால் மாணவரும் ஏனையோரும் மிகவும் பாதிப்படைந்துள்ளனர்.

ஒலிபெருக்கிப் பாவனையால் மாணவரினதும் ஏனையோரினதும் பொது நலன் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. க.பொ.த.(உயர்தரம்) பரீட்சைக் காலமாயினும் சரி க.பொ.த.(சாதாரணம்) பரீட்சைக் காலமாயினும் சரி 5 ஆம் தரபுலமைப்பரிசில் பரீட்சைக் காலமாயினும் சரி இக்கோவிலில் ஒலி பெருக்கிப்பாவனை கட்டுப்படுத்தப்படுவதில்லை.

கோவில் வளவில் இருந்து 200,300 மீற்றர் தூரத்தில் உள்ள மரங்களில் ஒலிபெருக்கியை கட்டி உரத்த சத்தத்தில் பாடவிடுவதால் மாணவராகிய நாம் பாடங்களை கிரகித்து கற்க முடிவதில்லை. மன அழுத்தத்திற்கு உட்படுகின்றோம்.

தாம் விரும்பிய நேரங்களில் எல்லாம் கட்டுப்பாடற்ற வகையில் ஒலி பெருக்கியை பயன்படுத்துகின்றனர். சில இந்துக்களின் விசேட தினங்களில் அனைத்துக் கோவில்களிலும் எதிர் எதிராக ஒலிபெருக்கிகளை கட்டி உரத்த தொனியில் பாடவிட்டு தமது வக்கிர உணர்வுகளை வெளிப்படுத்துகின்றனர்.இதனால் அனைவரும் பாதிக்கப்படுகின்றனர்.

கோவில்களை அமைதியான வழிபாட்டுத் தலங்களாகவன்றி அமைதியைக் குலைக்கும் இடங்களாக மாற்றி வருகின்றனர்.

தலைக்கவசம் இடாது மோட்டார் சைக்கிளோட்டுவோரை பிடிக்கும் பொலிஸார் கட்டுமீறிய ஒலிபெருக்கிப் பாவனையை கண்டுகொள்ளாது விட்டுள்ளமை கவலைதரும் விடயமாகும். மாணவர் கல்வியைப் பாழாக்கும் செயற்பாட்டுக்கு ஆதரவளிப்பதாக அமைகிறது.

எனவே எமது கல்வி, பரீட்சைகள், அமைதியான சூழலில் நடைபெற கட்டுப்பாடற்ற ஒலிபெருக்கிப் பாவனையைக் கட்டுப்படுத்த தடைசெய்ய உடன்நடவடிக்கை எடுத்து உதவுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

பாதிக்கப்பட்ட மாணவர்கள்.

## அரசகாணிகள் தொடர்பான வழக்குகளை மாகாண மேல்நீதிமன்றங்களில் விசாரிக்கலாம்

### மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவிப்பு

(கொழும்பு)

மாகாண மேல் நீதிமன்றங்களில் அரச காணிப் பிணக்குகள் தொடர்பாக வழக்குகளை விசாரணை செய்ய முடியும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது. 13 ஆம் திருத்தச் சட்டத்திற்கு அமைவாக இந்தத் தீர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண மேல் நீதிமன்றில் அரச காணிப் பிணக்குகள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட முடியாது என தென் மாகாண மேல் நீதிமன்ற நீதிவான் தீர்ப்பு வழங்கியிருந்தார்.

இந்தத் தீர்ப்பிற்கு எதிராக செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது மாகாண மேல் நீதிமன்றங்களில் அரச காணிப் பிணக்குகள் தொடர்பில் விசாரணை நடத்த முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

13 ஆம் திருத்தச் சட்ட மூலத்தில் மாகாணசபைகளுக்கு காணி அதிகாரங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் சட்டத்திற்கு அமைவாக மாகாண நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்ய முடியும் எனவும் மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

தென் மாகாண காணி ஆணையாளருக்கும் பிரதேச செயலாளருக்கும் எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தது. (ஸ்ரீ-2-4)

## பூநகரி ப.நோ.கூ.சங்கத்தில் கிளைக் குழுத் தேர்தல்

(பூநகரி)

பூநகரி ஜெயபுரத்தில் இயங்கிவரும் பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 18 கிளைக்குழு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான கிளைக்குழுத் தேர்தல் 18 நிலையங்களில் எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவியாளர் வி.கே. அருந்தவநாதன் அறிவித்துள்ளார்.

அத்தோடு ஒவ்வொரு நிலையங்களிலும் தேர்தலை நடத்துவதற்கான தவிசாளர்கள் நியமிக்கப்பட்டு அவர்களின் பெயர்கள் கிளை நிலையங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இதில் வாக்களிக்கத் தகைமையுடைய வாக்காளர் பெயர் பட்டியலும் அந்தந்தக் கிளைகளில் பார்வையிட முடியுமென ஆணையாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு சகல அங்கத்தவர்களுக்கும் தனிப்பட்ட முறையில் அவர்களது முகவரிக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. (ஸ்ரீ-84)

## தனிநாயகம் அடிகளாரின் நினைவுப் பேருரை

(மன்னார்)

மன்னார் மறை மாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையத்தின் கலையருவி ஏற்பாட்டில் உலகத் தமிழறிஞர் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் 98ஆவது பிறந்த தின நினைவுப் பேருரை நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணிக்கு மன்னார் நகர மண்டபத்தில் அருட்பணி மையத்தின் இயக்குநரும் மன்னா பத்திரிகை ஆசிரியரும் மன்னார் தமிழ்ச் சங்கத் தலைவருமான அருட்திரு தமிழ்நேசன் அடிகளாரின் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்விற்கு மன்னார் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

தென்னிந்தியத் திருச்சபையின் யாழ். ஆதீன முன்னாள் பேராயரும் யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னாள் அதிபரும் தந்தை செல்வா அறக்கட்டளைக் குழுவின் தலைவருமான கலாநிதி எஸ்.ஜெபநேசன் நினைவுப் பேருரையினை நிகழ்த்தவுள்ளார்.

(ஸ்ரீ-2)

# இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு சனல்-4 க்கு அரசாங்கம் அழைப்பு

லண்டனைத் தளமாக கொண்டுள்ள சர்ச்சைக்குரிய சனல்-4 தொலைக்காட்சி நிறுவனத்துக்கு இலங்கைக்கு வந்து களநிலைமைகளை நேரில் பார்வையிடுமாறு இலங்கை அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான பிரதிவதிவிடப் பிரதிநிதி சவேந்திர சில்வா சனல் 4 ஊடகவியலாளர் ஜொனதன் மில்லருக்கு இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

லண்டனில் அமைந்துள்ள சனல் 4 ஊடக நிறுவனத்தின் தலைமைக் காரியாலயத்திற்கும் ஊடகவியலாளர் ஜொனதன் மில்லருக்கும் இந்த அழைப்பினை விடுத்துள்ளதாக சவேந்திரசில்வா குறிப்பிட்டுள்ளார்.

சனல் 4 ஊடகவியலாளர் மில்லர் தம்மை சந்தித்ததனை தொடர்ந்து பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் தாம் ஆலோசனை கோரியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்புச் செயலாளரின் ஆலோசனைக்கு அமைய ஜொனதன் மில்லருக்கும் சனல் 4 ஊடக நிறுவனத்திற்கும் தாம் அழைப்பு விடுத்ததாக குறிப்பிட்டுள்ளார். எனினும் தமது அழைப்பு தொடர்பில் இதுவரையில் சனல் 4 ஊடகம் எவ்வித பதிலையும் அளிக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு சனல்4 நிறுவனம் தமது பிரதிநிதிகளை இலங்கைக்கு அனுப்பிவைத்தால் அவர்கள் செய்தி சேகரிப்பதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இலங்கைப் போரின் போது இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிரான போர்க் குற்றங்கள் தொடர்பான தகவல்களை சனல் 4 தொலைக்காட்சி நிறுவனமே தொடர்ந்தும் வெளியிட்டு வருகின்றது.

இலங்கையின் கொலைக்களங்கள் என்ற அதன் ஆவணப்படம் பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியதுடன் ஜெனீவாவில் நடைபெற்ற ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரிலும் காண்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# மஹோற்சவம்

(புன்னாலைக்கட்டுவன்)

உரும்பிராய் அருள்மிகு காமாட்சி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு சப்பறத்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ஸ்ரீ-78)

# நல்லிணக்க ஆணைக்குழு பதிவுசெய்த சாட்சியங்களில் 85 வீதமானவை ஆய்வு

கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழு பதிவு செய்துள்ள சாட்சியங்களில் 85 வீதமானவை ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

மேலும் எதிர்வரும் நவம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அரசாங்கத்துக்கு சமர்ப்பிக்கப்படவுள்ள இறுதி அறிக்கையை வரைவதற்கான பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று நல்லிணக்க ஆணைக்குழுவின் ஊடக அதிகாரி லக்ஷ்மன் விக்ரமசிங்க தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் தற்போதைய செயற்பாடுகள் எந்தமட்டத்தில் உள்ளன என்பது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் இவ்விடயம் குறித்து மேலும் குறிப்படுகையில்,

கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழு கடந்த காலங்களில் விசாரணை அமர்வுகளின்மூலம் பதிவு செய்த சாட்சியங்களில் 85 வீதமானவற்றை ஆய்வுசெய்து முடித்துவிட்டது.

மேலும் 15 வீதமான சாட்சியங்கள் ஆய்வு செய்யப்படவேண்டியுள்ளன. அவற்றை ஆய்வு செய்து முடித்ததும் நேரடியாக அறிக்கை தயாரிக்கும் பணியில் ஈடுபடுவோம். எனினும் தற்போதைய நிலைமையில் நாங்கள் வெளியிடவுள்ள இறுதி அறிக்கையின் முதற்கட்ட வரைபை தயாரிக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நல்லிணக்க ஆணைக்குழு எதிர்வரும் நவம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் தனது அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்று ஏற்பாடாகியுள்ளது. தற்போதைய நிலைமையில் அந்த திகதிக்குள் எம்மால் அறிக்கையை வெளியிட முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை சாட்சியங்களை ஆய்வு செய்யும் போது தெளிவின்மை ஏற்படும் போது குறித்த சாட்சியத்தை வழங்கியவரை தொடர்புகொண்டு தெளிவுபடுத்தலை பெற்றுக் கொள்கின்றோம் என்றார்.

கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழு கடந்த காலங்களில் கொழும்பிலும் வெளிமாவட்டங்களிலும் சாட்சியங்களை பதிவு செய்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ஸ்ரீ-2)

# சஜித் பிரேமதாசவின் யோசனை குறித்து செயற்குழுக் கூட்டத்தில் ஆராய தீர்மானம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் இணைப் பிரதி தலைவரான கரு ஜயசூரியவை கட்சியின் தலைமைப் பொறுப்பிற்கு தெரிவு செய்ய வேண்டுமென்று சஜித் பிரேமதாசவினால் முன்வைத்துள்ள யோசனை செயற்குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளது.

இந்த யோசனை குறித்து செயற்குழுக் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்படும் என சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.எதிர்வரும் 17 ஆம் திகதி அடுத்த செயற் குழுக்கூட்டம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

செயற்குழுவில் பரிந்துரை செய்யப்படும் நபர் கட்சியின் பொதுக்கூட்டத்தில் நடத்தப்படும் வாக்கெடுப்பின் மூலம் தலைமைப் பொறுப்பிற்கு தெரிவு செய்யப்படுவார் என கட்சியின் புதிய யாப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கட்சி பிளவடைவதனை தடுப்பதற்காக தாம் தலைமைத்துவ போட்டியிலிருந்து விலகிக் கொண்டதாக சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கட்சியின் எதிர்கால நலனை கருத்திற்கொண்டு தலைமைப் பதவிக்கு போட்டியிடுவதில்லை. கட்சித் தலைமையில் மாற்றம் ஏற்படுத்தப்படவேண்டும் என்பதே பெரும்பான்மையினரின் ஏகோபித்த கருத்தாக அமைந்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவர் கரு ஜயசூரியவை கட்சியின் தலைவராக்குவதற்கு ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான தரப்பினரும் விருப்பம் வெளியிட்டுள்ளனர்.

மேல்மாகாண சபை உறுப்பினர் மைத்திரி குணரட்ன இவர்களில் ஒருவராவார். தம்முடன் கட்சியின் பல சட்டத்தரணிகள் கரு ஜயசூரியவுக்கு ஆதரவு வழங்க தயாராக உள்ளதாக மைத்திரி குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச கடந்த வாரம் கருஜயசூரிய கட்சியின் தலைவராக செயற்பட விருப்பம் வெளியிட்டுள்ளதாக கூறினார்.

இதனையடுத்து லண்டனில் இருந்த கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தாம் கட்சியை ஒற்றுமைப்படுத்துவதற்காக கரு ஜயசூரியவை நியமித்துள்ளதாக தெரிவித்தார். இந்த நிலையில் கரு ஜயசூரியவின் இந்திய பயணமும் சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது. (ஸ்ரீ)

# பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை குறைக்கப்பட்டால் சட்ட நடவடிக்கை

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை குறைக்கப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழ்த் தேசியக் கட்டமைப்பு அறிவித்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கான பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைக்கப்படவுள்ளதாக தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய அண்மையில் அறிவித்திருந்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை குறைப்பு தொடர்பில் தேர்தல் ஆணையாளருடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் அதேவேளை சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

சனத்தொகை பரம்பலின் அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும் என தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் யுத்தம் காரணமாக பலர் வடக்கை விட்டு வெளியேறியுள்ளதாகவும் இதனால் வாக்காளர் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

எனவே பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையை குறைப்பது பொருத்தமாகாது என சுட்டிக்காட்டியுள்ளனர். (ஸ்ரீ-2)

# ஐ.தே.க. தலைமைத்துவ பிரச்சினை குறித்து மாகாண சபை உறுப்பினர்கள் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ பிரச்சினை குறித்து மாகாண சபை உறுப்பினர்கள் பேச்சுவார்த்தை நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

கட்சி தலைமைத்துவம் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வு காணும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படஉள்ளதாக தென் மாகாண சபை ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவி வரும் பிரச்சினைக்குத் தீர்வாக பிரதித் தலைவர் கரு ஜயசூரியவை கட்சித் தலைவராக நியமிக்கப்பட வேண்டுமென சில மாகாண சபைகளில் தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளதாகத் குறிப்பிடப்படுகின்றது.

மத்திய, தென் மற்றும் மேல் மாகாண சபைகளில் அங்கம் வகிக்கும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் தலைமத்துவப் பிரச்சினை குறித்து முனைப்புடன் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கட்சித் தலைமையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக மேல் மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் மஞ்சுசிறி அரங்கல தெரிவித்துள்ளார்.

இதேவேளை கட்சித் தலைமை தொடர்பான பிரச்சினைக்கு துரித கதியில் தீர்வு காணப்பட வேண்டுமென மத்திய மாகாண சபை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஸ்ரீ-2)

# சூழ்நிலை காரணமாகவே தமிழர்கள் பிரிவினைவாத கொள்கையைப் பின்பற்றினர்

## ஜே.வி.பி.தெரிவிப்பு

பிரிவினைவாத கொள்கையைப் பின்பற்றியமைக்காக தமிழர்களை குறைகூற முடியாது. ஏனெனில் அத்தகைய கொள்கையைப் பின்பற்றுவதற்கான சூழ்நிலை உருவாக்கப்பட்டது எனவும் ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க கூறியுள்ளார்.

எனினும் சரி பிழைகள் குறித்து கலந்துரையாடுவதற்கான தருணம் வந்துள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.


கம்பஹாவில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற சகோதரத்துவ தின விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஜே.வி.பி இனவாதத்தை தழுவியுள்ளதாக அண்மைக்காலத்தில் பலர் தவறான அபிப்பிராயத்தை பரப்பியுள்ளனர். சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய 3 மொழிகளையும் உத்தியோகபூர்வ மொழிகளாக்க வேண்டும் என ஜே.வி.பியே வலியுறுத்தியது. ஏனைய கட்சிகள் 3 மொழிகளையும் உத்தியோகபூர்வமொழியாக்கத் தயாரில்லாததால் இனவாதத்தைப் பின்பற்றின எனவும் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

தமது கட்சியின் சிங்களப் பெயர் ஜனதா விமுக்தி பெரமுன (மக்கள் விடுதலை முன்னணி) என்ற போதிலும் சில தமிழ்,முஸ்லிம் கட்சிகள் அதை இனவாத கட்சியாக காட்டுவதற்காக வேண்டுமென்றே ஜனதா விமுக்தி பெரமுன (தேசிய விடுதலை முன்னணி) எனக் குறிப்பிடுகின்றனர் எனவும் அவர் கூறினார்.

வடக்கு கிழக்கில் யுத்தம் நடந்து கொண்டிருந்த காலத்தில் கடந்த 23 ஆம் திகதியை சகோதரத்துவ தினமாக அனுஷ்டிப்பதற்கு ஜே.வி.பி. தீர்மானித்ததாக அக்கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரட்னாயக்க கூறினார். (ஸ்ரீ-2)

# மனதை பிரயோகித்தல்



**ஆன்மீகம் 07**

இதை முறைப்படுத்த பல விடயங்கள் கையாளப்பட்டுள்ளன. எல்லாவிதமான முறைகளும் பயிற்சிகளும் கொண்டு வரப்பட்டன. உங்களில் சிறிய அளவில் திருத்தங்கள் செய்யவும், இருப்பதைவிட சிறிது கூடுதல் திறமையுள்ளவராக உங்களை உருவாக்கவும் நிறைய உபாயங்கள் உள்ளன. ஆனால் உண்மையில் உங்கள் மனதைக் கட்டுப்படுத்தாமல் பயன்படுத்த வேண்டுமானால், அதன் சக்தியை பிரயோகிக்க விரும்பினால் உங்கள் அறிவு எதனுடனும் அடையாளப்படாமல் இருக்கவேண்டும். அதன் பின்னர் உங்கள் புரிதல் தெளிவு பெறுவதன் மூலம் இயல்பாகவே மனம் தன்னை ஒழுங்கு படுத்திக் கொள்ளும், மனதை வேறு யாரும் ஒழுங்குபடுத்தத் தேவையில்லை. இயல்பாகவே நல்ல முறையில் அது ஒழுங்குபடுத்தப்பட்ட ஒன்றுதான். புரிதல் சிதைவுபட்டுள்ளதால் மனதின் செயற்பாடும் வெளிப்பாடும் சிதைவுபட்டுள்ளது.

ஒரு நாள் கிருஷ்ணதேவராயருக்கு முடிதிருத்தும் பணி நடந்து கொண்டிருந்தது. அரண்மனை நாவிதர் முடிதிருத்திக் கொண்டிருந்தார். அங்கே ஒரு காகம் வந்தமர்ந்து கா... கா... என்று கரையத் துவங்கியது. நாவிதர் முடிதிருத்துவதை நிறுத்திவிட்டு காகத்தின் கரைதலைக் கவனிக்க ஆரம்பித்தார். அதைக் கண்ட கிருஷ்ணதேவராயர், "காகம் கூறுவதைப் புரிந்துகொள்ள முடிவதைப்போல கவனிக்கிறாயே? என்ன அது?" என்று கேட்டார். நாவிதர், "சிறிது பொறுங்கள் அரசே! அது ஏதோ செய்தியுடன் வந்துள்ளது" என்று கூறி வெகு நேரமாக கூர்ந்து கவனித்தார். பிறகு தலையைப் பலமாக உலுக்கினார். கிருஷ்ணதேவராயர் மிகவும் ஆர்வத்துடன், "உனக்கு காகம் பேசுவது புரிகிறதா? அது என்ன சொல்கிறது?" என்று கேட்டார். நாவிதர், "அரசே, சொர்க்கத்திலிருந்து தங்கள் முன்னோர்களின் தூதுவனாக இந்தக் காகம் வந்திருக்கிறது. அங்கே அவர்களை சந்தோஷப்படுத்துவதற்கும் யாருமில்லை. அவர்களின் தேவைகள் கவனிக்கப்படுகின்றன. ஆனால் அவர்களை மகிழ்விக்க யாருமில்லை. எனவே உங்களிடம் உதவி கேட்பதற்காக இந்தக் காகத்தை தூதுவனாக அனுப்பி உள்ளனர். எனவே அவர்களை மகிழ்விப்பதற்கு இங்கிருந்து எவரையாவது அனுப்ப வேண்டும். தங்களின் முன்னோர்களை மகிழ்ச்சியில்லாத நிலையில் அப்படியே விட்டுவிட முடியாது" என்று கூறினார். கிருஷ்ணதேவராயர் மிகவும் உணர்ச்சிவசப்பட்டார், "என் முன்னோர்கள் கவனிப்பின்றியும், மகிழ்வற்றும், சலிப்பாகவும், துன்பத்திலும் இருப்பதா? அவர்களை மகிழ்விக்கக் கூடியதை செய்யவேண்டும். எனவே சிறப்பாக பாடுபவர்கள், நாட்டியமாடுபவர்கள் என்று யாரெல்லாம் உள்ளனர்" என்று கேட்டார். அவர்களும், "அரசே! தங்களுக்காக பாடவும், நடனமாடவும் எங்களுக்கு விருப்பம். நாங்கள் சொர்க்கத்திற்குச் சென்று தங்களின் முன்னோர்களுக்கு சேவை செய்ய சம்மதிக்கிறோம்" என்றனர். என்றாலும் பின்னர், "தங்கள் முன்னோர்களுக்கு சிறப்பானதை அனுப்ப வேண்டும்... ஒரு பாடகரால் அவர்களை எவ்வளவு காலம் மகிழ்விக்க முடியும்... இரண்டு நாட்கள் பாடலைக் கேட்டால் சலித்துவிடும். நாட்டியமும் அப்படித் தான். எப்போதும் அவர்களை மகிழ்வீக்குமாறு ஒருவரை அனுப்ப வேண்டும். அதற்குத் தெனாலியைவிட வேறு யார் இருக்கிறார்கள்? அவருடைய அறிவினால் தங்கள் முன்னோர்களை எப்போதுமே மகிழ்விப்பார். அவர்தான் சரி!" என்றனர். தெனாலியை விட்டால் யாருமில்லை என்பதை கிருஷ்ணதேவராயரும் ஏற்றுக்கொண்டார். தெனாலியைப் பிரிய அரசருக்கு மனமில்லை என்றாலும், தன் முன்னோர்களுக்காக தெனாலியை அனுப்புவோம் என்றே கூறிவிட்டார்.

தெனாலி அழைத்து வரப்பட்டார். தான் சொர்க்கத்திற்குச் செல்ல வேண்டிய தேவையை அறிந்து கொண்டார். உடனே செயலில் இறங்கினார், அரசரிடம் "மேன்மை தாங்கிய அரசே! உங்கள் விருப்பப்படி நான் சொர்க்கம் செல்வது எனக்கு கௌரவமான ஒன்று. எப்படிச் செல்வது என்ற முழு விடயமும். எனக்குத் தெரியும்" என்றார். ஒருவரைச் சொர்க்கத்திற்கு அனுப்ப வேண்டிய வழிமுறையை காகம் நாவிதருக்குத் தெரிவித்த தாகக் கூறினார். அதாவது சொர்க்கத்திற்குச் செல்ல வேண்டிய மனிதனை தெற்குத்திசை நோக்கி அமரவைக்க வேண்டும். அவனைச் சுற்றி சந்தனக் கட்டைகள், கற்பூரம் ஆகியவற்றை நெய்யோடு சேர்த்துக் குவிக்க வேண்டும். அந்தக் குவியல் முழு வளர்ச்சியடைந்த யானையின் உயரத்திற்கும் கூடுதலாக இருக்க வேண்டும். பின்பு சந்தனக் கட்டை, கற்பூரம், சுத்தமான நெய் ஆகியவற்றை அதன் குவியலுக்கு நடுவில் அமர வைத்துள்ள மனிதனுடன் சேர்த்து நெருப்பிட வேண்டும். மூன்று நாட்கள் எரியவிட்ட பிறகு, அந்த மனிதன் ஆவியாகி சொர்க்கத்திற்குச் சென்று முன்னோர்களுக்கு சேவை செய்வார். இதைக் கேட்ட தெனாலிராமன், "இதுதான் சரியான முறை, மிகச் சிறந்த வழி. நான் சென்று உங்கள் முன்னோர்களுக்கு சேவை செய்கிறேன். ஆனால் ஒரு விண்ணப்பம். நான் அங்கு செல்லும் முன் உடலையும், மனதையும் புனிதமாக்கிக் கொள்ள வேண்டும்.

என் தோஷங்கள் எல்லாவற்றையும் நீக்கிவிட விரும்புகிறேன். முப்பது நாட்கள் மட்டும் அவகாசம்" தாருங்கள் என்றார்.

(தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# என் படைப்புக்குள் ஒளிந்துகொண்டிருக்கும் நான்

**05**

கதைக் களமான சவுதாமன்ஸிலிருந்து வெளியேற்றப்பட்ட சாய்வு நாற்காலி அந்த குடும்ப பொருளாதார கௌரவத்தின் குறியீடாகும். ஒடுக்கப்பட்ட மக்களின் பொருளாதார எழுச்சியைத் தாங்கிக் கொள்ள முடியாத ஆதிக்க வர்க்கத்தின் எரிச்சல், நாவலின் இறுதியில் காட்டப்படுகின்றது. சவுதா மன்ஸில் மாட்டுத் தொழுவத்தில் சாணி அள்ளிக் கொண்டிருந்த காளியின் மகன், சவுதா மன்ஸிலில் கிடந்த சாய்வு நாற்காலியை வளைகுடா பணத்தால் விலைக்கு வாங்கினான். அதில் காளி கால் மேல் கால்போட்டு சாய்ந்து கிடப்பதைப் பார்த்ததும் மனம் பொறுக்காமல் தலை கிறங்கி தரையில் விழப்போகும் முஸ்தபாக் கண்ணை சுரண்டல் பேர்வழியான 'இஸ்ராயில்' தோளில் தாங்கி கடற்கரை மணலில் படுக்கப்போட்டான். அந்நேரம் அவன் அவரிடம் சொல்கிறான். "காலம் சைக்கிள் விலைபோல் சுற்றி வரும்." காலத்தின் சுழற்சிதான் இந்த நாவலின் மையக் கருத்து.

சந்நியாசியிடமிருந்து, சாய்வு நாற்காலி அரச குடும்பத்திடமும் பிறகு அது நிலப் பிரபுக்களிடமும் அவர்களிடமிருந்து இறுதியாக இந்த மண்ணின் சொந்தக்காரர்களான தாழ்த்தப்பட்ட மக்களிடமும் சென்றடையும் காலச் சுழற்சியை நாவல் காட்டுகிறது.

ஐந்தாவது நாவல் அஞ்சு வண்ணம் தெரு 'மாத்தியமம்' மலையாள நாளிதழின் ஆண்டு மலரில் குறுநாவலாக வெளியானது. அதில் சொல்லவிடுபட்ட சில விடயங்களைச் சொல்வதற்காக எனக்கு நேரடி பரிச்சயமான வாழ்ந்திருந்த சில கதை மாந்தர்களை இணைத்து விரிவாக எழுதி, தமிழ் இலக்கிய புரவலராய் இருந்து வரும் அல்ஹாஜ் எ.வி.எம். ஜாபர்தீன் அவர்களுடைய 'சம நிலைச் சமுதாயம்' மாத இதழில் 'தைக்கா பள்ளி மினாராக்கள்' எனும் தலைப்பில் தொடராக வெளிவந்தது.

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

பள்ளிவாசல்களை விட, வீடுகளின் உயரம் அதிகமானால் அந்த வீடுகளில் வாழ்க்கை இருக்காது என்ற மூட நம்பிக்கையை உடைத்துக் காட்டுகிற புதினமிது. அது மட்டுமல்ல இன்றைய முஸ்லீம் சமுதாயத்தின் கட்டுப்பாட்டையும் வலிமையையும் குன்ற வைக்கின்ற வகையில் மதத்திற்குள் பிரிவை உருவாக்கிய சில சுயநலப் போலி மதவாதிகளின் தலைமையிலான குழுவதத்தால் சமுதாயத்திற்குள் காணப்படும் உள் பூசல்களை, குழப்பங்களை, பிளவுகளை உள்ளிருந்து பார்த்து சொல்லப்படும் எதார்த்தவாத நாவலாகும் இது. கல்லூரிப் படிப்பின்போது சிறிது காலம் தங்கிவந்த ஒரு தெருவின் கதை. இதில் வரும் மம்மதும்மாவும் மைதீன் பிச்சை மோதீனும் எனக்கு பரிச்சயமானவர்கள். தெரு மக்கள் ஏறிட்டுப் பார்க்காமல் பாழடைந்து கிடந்த தைக்காப்பள்ளி வாசலில் தினமும் ஐவேளை பாங்குச் சொல்லி விளக்கு வெட்டம் காட்டி உயிரூட்டி வந்தவர் மைதீன் பிச்சை மோதீன். தெருவிலுள்ள ஒரே முனிசிபல் தண்ணீர் குழாயை சொந்தமாக்கி தெருவை அடக்கி ஆண்டு தெருவின் ஜீவ சலனமாக இருந்து, தெருவை சொந்தக் குரல் முழக்கத்தால் தெருவின் இருப்பை காட்டியவள் மம்மதும்மா. ஏவப்பட்ட ஜின்னுகளால் கட்டப்பட்ட தைக்காப்பள்ளி வளாகத்தில் நூற்றாண்டு காலமாக உறங்காமல் விழித்துக் கொண்டிருக்கும் அடக்கம் செய்யப்பட்ட தாயால்தான் மழை பெய்வதும் புயல் அடிப்பதும் நோய்க் கிருமிகள் தெருவுக்குள் நுழையாமல் தடுப்பதும், தைக்காப்பள்ளிச் சுவரோடு சேர்ந்து தைக்காப் பள்ளியை விட உயரமானது சாஹினா மன்ஸில். அதில் தான் தாத்தா (அக்கா)வும் மச்சானும் வாழ்ந்து வருவது. வாப்பா, தாத்தாவின் வீட்டுக்கு வந்து போய் இருப்பார். தெருவின் கதை சொல்வது ஒரு மூன்றாவது நபர். அந்த மூன்றாவது நபர் நானே தான்.

இஸ்லாமிய தமிழ்க் காப்பியங்களுள் பழமையான காப்பியமாக அறியப்படும் ஆலிப்புலவர் இயற்றிய மிகுராஜ் மாலையிலுள்ள சில வரிகள் இதில் எடுத்துக் காட்டப்படுகின்றன. ஆலிப்புலவரின் பின் வாரிசுகள் அந்த மாலையைப் பாடி நடக்கின்றனர். வாசிக்கப்படாமல் மறைந்துவரும் நம் இலக்கியச் செல்வங்களை நினைவூட்டுவதற்காகத்தான் அந்த வரிகள்.

(தொடரும்)

**தோப்பில் முஹம்மது மீரான்**
**தமிழ் நாடு**

# இன்சுலின் சிகிச்சை முறைகள்

05



## தெரிந்து கொள்ள சில தகவல்கள்

✷ இன்சுலினை போட்டுக் கொண்டால் நீரிழிவு நோய் குணமாகிவிடும் என நினைக்கிறார்கள். நீரிழிவு நோய் ஒரு முறை வந்து விட்டால் அதை முற்றிலும் குணமாக்குவதற்கு மருந்து மாத்திரை இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.அதை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளவே இதுவரை மருந்து மாத்திரைகள் உள்ளன.

✷ இன்சுலினை யார் யார் எத்தனை முறை போட்டுக் கொள்வது என்ற சந்தேகம் பலருக்கு இருக்கும். நீரிழிவு நோய் ஆரம்ப கட்டத்தில் இருந்தால் தினமும் ஒரு வேளை இன்சுலின் போட்டுக்கொண்டால் போதும். அதன் பின்னர் இரு வேளைகள் போட வேண்டியிருக்கும். அதிக உடல் பருமன் உள்ளவர்கள் தினமும் மூன்று வேளைகள் கூட போட வேண்டியிருக்கும். யார் யாருக்கு எத்தனை முறை இன்சுலின் போட்டுக் கொள்ள வேண்டும் என்பதை மருத்துவரே தீர்மானிப்பார்.

✷ இன்சுலின் மாத்திரை இருந்தால் பரவாயில்லையே என நினைப்பவர்கள் உண்டு. இரண்டாம் வகை நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு மாத்திரைகள் உள்ளன. இவை கணையத்தைத் தூண்டி இன்சுலினை சுரக்கச் செய்கின்றன. கணையம் முற்றிலும் பழுதுபட்டிருந்தால் மாத்திரைகள் பலன்தராது.தவிர மாத்திரை வடிவில் இன்சுலின் எடுத்துக் கொள்ளும் போது அது இரைப்பை இரத்தம் போன்ற இடங்களில் இரசாயன மாற்றங்களுக்கு ஆட்பட்டு வீரியம் குறைந்ததாகிவிடும். இரத்தத்தில் கலந்து பலன் கொடுப்பதற்கு கூடுதல் நேரமாகும்.

✷ எவ்வளவு இன்சுலின் போட்டுக் கொள்வது என்பது தெரியாவிட்டால் உங்கள் எடை உடலிலுள்ள கொழுப்புத் தசைகளின் அளவு மாற்றம், அவற்றின் தன்மை எவ்வளவு நேரம் உடற்பயிற்சி செய்கிறீர்கள், எவ்வளவு உழைக்கிறீர்கள், உணர்ச்சி வசப்படும் தன்மை ,அடிக்கடி மன உளைச்சல் மற்றும் கவலைகளால் பாதிக்கப்படுகிறீர்களா என்பதையெல்லாம் மருத்துவர் மூலமாக சரியான நோய்த்தகவல் அடிப்படையில் அறிந்து பயன்படுத்த வேண்டும்.

✷ இன்சுலினை யூனிட் அளவில் அழைப்பார்கள். மிகச்சிறிய அளவிலான சுத்த இன்சுலின் என்பது பொருள்.

✷ கடைகளில் இன்சுலினை வாங்கும் பொழுது அதன் அடர்த்தி,அது நீண்ட காலம் செயற்படக்கூடியதா? குறுகிய காலம் மட்டுமே செயற்படக்கூடியதா? தயாரிக்கும் கம்பனி, அது முடிவுறும் திகதி ஆகியவற்றை கவனிக்கவேண்டும். காலாவதியான மருந்து மாத்திரைகளால் உடல் நலம் கெடநேரிடும்.

✷ இன்சுலினை அதிகமாகப் போட்டுக் கொண்டால் உடனடியாக மயக்கம் வந்து விடும். இன்சுலின் மயக்கம் ஏற்படுகிறது என்றால் உடல் வியர்த்தல், கைகால் உதறல், பார்வைகள் இரண்டிரண்டாகத் தெரிதல், தலைவலி, எரிச்சல், நினைவிழப்பு போன்றவை வரும். இத்தகைய சூழல் ஏற்படும் முன்னரே சிறிது சீனியை வாயில் போட்டுக்கொள்வது நல்லது,இன்சுலினை வாங்கிப்பயன்படுத்தும் முன்னரே மருத்துவரை அணுகி சரியான அளவை தெரிந்து கொள்ள வேண்டும்.

✷ நீங்கள் பயன்படுத்தும் இன்சுலின் அளவு உங்கள் உணவு மற்றும் உடற்பயிற்சிகளின் அளவு, சிறுநீரில் வெளிப்படும் சர்க்கரையின் அளவு ஆகியவற்றை பொறுத்து அமைவதால் எப்போதும் போல ஒரே அளவான இன்சுலின் போட்டுக் கொள்ளக் கூடாது.

✷ இரத்த சர்க்கரை அளவு கூடாமலும், குறையாமலும் பார்ப்பது அவசியம்.

✷ இன்சுலின் காரணமாக மயக்கம் வரும் தன்மை உடையவர்கள் மது அருந்தும் பழக்கத்தை கைவிட வேண்டும். மதுவின் போதையால் மயக்கத்தை உணர இயலாமல் போகும் மரணத்திற்கு வழிவகுக்கும்.

✷ கைவசம் நீரிழிவு நோயாளர் என்பதற்கான அடையாள அட்டையை வைத்திருப்பது நல்லது.


✷ இன்சுலின் போட்டுக் கொள்வது அல்லது அதன் பயன்பாடு பற்றிய எந்தவொரு தகவலையும் மருத்துவரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டு அதனை முறையாகப் பின்பற்ற வேண்டும். (முற்றும்)

பேராசிரியர்
டாக்டர் டி.காமராஜ்.
M.D.,P.G.D.C.G.,D.M.R.,
சென்னை.




# ஆஸ்துமா அவஸ்தை

01



**அலர்ஜி என்பது எதனால் ஏற்படுகின்றது. இன்றைய நாட்களில் அலர்ஜி ஆபத்து அதிகமாக இருக்கக் காரணம் என்ன?**

அலர்ஜி என்பது கிரேக்கச் சொல். அலலாஸ் என்றால் மாறுபட்ட. எர்கான் என்றால் செயல். இரண்டும் சேர்ந்து அலர்ஜி என்ற சொல்லானது. தமிழில் அலர்ஜி ஒவ்வாமை எனப்படும்.

உடலுக்கு ஒத்துக் கொள்ளாததே ஒவ்வாமை ஆகும். சுற்றுப்புறத்தாக்கம் அதிகரித்து விட்டது தான் இன்றைய நாட்களில் ஆஸ்துமாபாதிப்புஅதிகமாக இருக்கக்காரணம்.

**ஆஸ்துமா என்பதுவும் ஒரு வகை அலர்ஜி தானா? இது ஏன் ஏற்படுகிறது.?**

சிரமப்பட்டு மூச்சுவிடுதல் அல்லது மூச்சுத் திணறலைத்தான் ஆஸ்துமா என்கிறோம். ஈளை,திகைப்பு, திகறடி, மந்தம், அளுமாந்தம், உப்புசநோய், கணச்சூடு, இசிவு நோய், இரைப்பு நோய்,இளைப்பு நோய், மந்தாரகாசம், சுவாசகாசம், சுவாசத் தொய்வு, ஈளை ஈரம் எனத் தமிழில் பல பெயர்களில் இந்நோய் குறிக்கப்படுகிறது. ஆஸ்துமா நோய்த் தாக்கத்திற்கு அலர்ஜியும் ஒரு முக்கிய காரணம்.

**அலர்ஜி எனப்படும் ஒவ்வாமை நோய்கள் என்னென்ன?**

✷ தோல் தொடர்பான ஒவ்வாமை. உதாரணம்– தொடுநோய், அழற்சி நோய், கரப்பான்.

✷ மூச்சுப்பாதை தொடர்பான ஒவ்வாமை நோய்கள் (உ-ம்) அலர்ஜிக் சைனசைட்டீஸ், ஆஸ்துமா, தூசு ஒவ்வாமை, காளான் ஒவ்வாமை, ஈசினோ பீலியா.

✷ உணவு வகை ஒவ்வாமை நோய்கள் (உ-ம்) மீன், கோழி, முட்டை, பால், கோதுமை ஒத்துக்கொள்ளாமை.

✷ மருந்துகளால் வரும் ஒவ்வாமை நோய்கள்(உ-ம்) பென்சிலின், சல்பா, அஸ்பிரின், ஐபுபுரூபன்.

✷ பூச்சிகளால் வரும் ஒவ்வாமை(உ-ம்) கரப்பான், பாச்சான், கொசு, வீட்டு கட்டெறும்புகள்.


✷ கண்களில் வரும் ஒவ்வாமை(உ-ம்) குறுகிய விழிவெண்படலஅழற்சி, காய்ச்சல் கண்நோய், கண் அழற்சி நோய்.

✷ காதுகளில் வரும் ஒவ்வாமை (உ-ம்) ஒட்டும் தோல் அழற்சி நோய்,நடுச்செவி அழற்சிநோய், மினியர்ஸ் நோய். இந்த ஒவ்வாமை அனைத்தையும் குணப்படுத்திவிடலாம்.

**இவற்றைத் தவிர வேறு ஏதேனும் அலர்ஜி நோய்கள் இருக்கிறதா?**

ஒவ்வாமையினால் சிலருக்கு மூளையும், நரம்பு மண்டலமும் கூட பாதிக்கப்பட்டு, தலைவலி, மனஅழுத்தம், அளவிற்கு அதிகமான சுறுசுறுப்பு, ஒரு மாதிரியான பரபரப்பான மனநிலை, மூட்டு வாதம் போன்ற நோய் அறிகுறிகளும் உண்டாகின்றன. தூக்கமின்மை, படுக்கையில் காரணமின்றி சிறுநீர் கழித்தல், சிறுநீர்ப்பை தொந்தரவுகள் போன்றவையும் சிலருக்கு ஒவ்வாமையினால் ஏற்படும் ஏனைய அறிகுறிகளாகும்.

**அலர்ஜிக் சைனசைட்டீஸ் ஆஸ்துமா போன்றவை தொற்றும் நோய்களா? மற்றவர்களுக்கு பரவுமா?**




இவை கண்டிப்பாகத் தொற்றுநோய் அல்ல. சிலருக்குக் குளிர்காலத்தில் அதிகமாகவும், சிலருக்கு கோடைகாலத்தில் அதிகமாவும் வந்து தொல்லைக்குள்ளாக்கும். இப்படி மாறி வரும் குளிர், கோடைகாலங்களுக்கு அலர்ஜிக் சைனசைட்டீஸ் ஆஸ்துமா நோய்களின் முக்கிய அறிகுறிகளான தலைவலி, மூக்கடைப்பு, ஓயாத தும்மல், கண் சிவத்தல், மூக்கரிப்பு, மூக்கொழுகல், நெஞ்சுகனத்தல், மூச்சுமுட்டுதல் மற்றும் ஆஸ்துமா இழுப்பு போன்றவற்றிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

**அலர்ஜிக் சைனசைட்டீஸ் ஆஸ்துமா பற்றி சிறிது விளக்குங்கள் ?**

சில ஒவ்வாமை இயல்புடையவர்களுக்கு கடும் வெயில் தொடங்கும் நாட்களான இளவேனிற் காலத்திலும் (மார்ச்,ஏப்ரல், மே) இத்துன்பங்கள் தொடங்கி, நாளாவட்டத்தில் அதிகமாகும். இலங்கையை பொறுத்தவரை ஒக்டோபர் முதல் பெப்ரவரிவரை

ஒருவகை அலர்ஜிக் சைனசைட்டீஸ், ஆஸ்துமா பிரிவினரையும் மார்ச் முதல் மே முடியும் வரை அடுத்த பிரிவினரை கணிசமான அளவில் அலர்ஜி ஆஸ்துமா பாதிக்கும். காற்றின் ஈரப்பதம் அதிகமாகும் போதும் சைனசைட்டீஸ், அலர்ஜி ஆஸ்துமா துன்பங்களும் பலருக்கு அதிகமாகும்.

**அலர்ஜி ஆஸ்துமாவிற்கு அல்லோ பங்சர் சிகிச்சையால் குணப்படுத்தலாம் என்கிறீர்கள். அது என்ன அல்லோ பங்சர்?**

அல்லோ என்றால் அல்லோபதி எனப்படும் ஆங்கில மருத்துவத்தின் முதல் மூன்று எழுத்தும், பங்சர் என்ற அகுபங்சர் எனப்படுகிற சீன நாட்டு மருத்துவ முறையின் கடைசி நான்கு எழுத்தும் சேர்ந்ததாகும். இவ்விரண்டுமேலை நாட்டு, கீழை நாட்டு மருத்துவ முறைகளை இணைத்து உச்சி முதல் உள்ளங்கால் வரை குழந்தை முதல் பெரியோருக்கு வரும் குறிப்பிட்ட பல வகை நோய்களுக்கு நிரந்தர நிவாரணம் கொடுக்கும் வகையில் செய்யும் நவீன சிகிச்சை இது. என்னால் பல ஆண்டுகளுக்கு முன்பு அறிமுகப்படுத்தப்பட்டது இந்த மருத்துவ அணுகு முறை. பலவகை அல்லோபதி, அக்குபஞ்சர் மருத்துவர்களாலும் ஆர்வமுடன் வெற்றிகரமாகவும் பின்பற்றப்பட்டும் வருகிறது. இது இம்மருத்துவமுறைக்கு இந்த நூற்றாண்டில் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

**அல்லோபங்சர் நவீனசிகிச்சை முறையில் நோய்களை எப்படிக் கண்டுபிடிக்கிறீர்கள்?**

உடல் உறுப்புக்களில் நோய் தொடங்குவதை அறிய அக்குப்பஞ்சர் சிகிச்சையில் பலவிதமான முறைகள் உண்டென்றாலும் ஓரிரு நிமிடங்களிலேயே பார்த்து நோய்க்கான காரணத்தை அறுதியிட்டுக் கூறும் அக்குபஞ்சர் நாடிப் பரிசோதனை மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

அக்குபஞ்சர் மருத்துவத்தில் உள்ள ஏனைய நோய் அறியும் பரிசோதனைகளான காது மடல் பரிசோதனை, நாக்குப் பரிசோதனை, சக்தி நாளப் பரிசோதனைகள் போன்ற இன்னும் பல பரிசோதனைகளுடன் தேவைப்படுபவர்களுக்கு குறிப்பாக 40 வயதைக் கடந்தவர்களுக்கு அல்லோபதியின் அடிப்படைப் பரிசோதனைகளான இரத்த அழுத்தம், நீரிழிவு, சிறுநீர்சோதனை போன்ற இன்னும் பல தேவையான பரிசோதனை இணைத்து நோயைத் துல்லியமாகக் கண்டறியும் அல்லோபங்சர் சிகிச்சயை மேற்கொள்ளும் போது வந்த நோய்கள் உடனடியாக குணமடைவதுடன்சிறிது காலத்திற்குப் பின்பு திரும்பவும் அதே நோய்கள் வராமலேயே போய்விடும். இத்தகைய நவீன அணுகுமுறையைக்கேள்விப்பட்டுஅறிந்த பெருவாரியான நோயாளிகள் நம் மருத்துவமனையை அன்றாடம் நாடி வருகின்றார்கள்.காரணம்இந்தஅணுகு முறையின் மூலம் விரைவிலேயே முழு குணமும் கிடைப்பது தான்.

ஆஸ்துமா சிகிச்சை நிபுணர்
டாக்டர் கே.ஏ.மோகன்தாஸ் MD.,DCH.,
சென்னை-84

**கோடை காலங்களில் வரும் அலர்ஜி அஸ்துமா பற்றி சொல்லுங்கள்?**

வெயிற் காலங்களில் அலர்ஜிசைன சைட்டீஸ் ஆஸ்துமா தோன்றுவதற்கு முக் கிய காரணம். சூரிய வெப்பத்தால் பூமியின் மீதுள்ள தூசிகளும் தும்புகளும் காற்றோடு கலந்து எமது மூச்சுக்காற்றோடு சேர்ந்து நுரையீரலுக்குள் சென்றுவிடுவது மிக முக்கிய காரணமாகும்.கோடைகாலத்தில் அலர்ஜி உள்ளவர்கள் குளிர்நீர். ஐஸ்கிரீம் மற்றும் நுரையீரலுக்கு கெடுதல் செய்யக்கூடியபொருட்களைத் தவிர்க்க வேண்டும். (முற்றும்)

# பிரமிட் கட்டமைப்புக்களைப் போன்ற தடை செய்யப்பட்ட திட்டங்கள் உங்களை அழிவடையச் செய்யும்

## பிரமிட் கட்டமைப்பைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டத்தில் பங்குபற்றுதல் சட்ட விரோதமானதாகும்

**பிரமிட் தன்மையைக் கொண்ட திட்டங்கள் வங்கி தொழில் சட்டத்தின் 83C பிரிவின் கீழ் சட்ட விரோதமானதாகும். மேலும், சில கொடுப்பனவுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் என்பன வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் பணத்தைத் தூயதாக்கல் தடைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படலாம்.**

**இப்படியான திட்டங்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆரம்பித்தல், வழங்குதல், ஏற்பாடு செய்தல், விளம்பரப்படுத்தல், கொண்டு நடத்துதல், நிதியிடுதல், நிர்வகித்தல் அல்லது நெறிப்படுத்துதல் என்பனவும் சட்ட விரோத செயல்களாகும்.**

### "தடைசெய்யப்பட்ட திட்டம்" என்பது யாது ?

- தடைசெய்யப்பட்ட திட்டம் என்பது அதில் பங்குபற்றுபவர்கள் பணத்தினை அல்லது பணப் பெறுமதியினைச் செலுத்துவதற்கு அல்லது பங்களிப்புச் செய்வதற்கு வேண்டிக்கொள்ளப் படுவதுடன் அதில் பெறப்படும் நன்மைகள், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் 83C பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி
    1. திட்டத்தில் பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லுதல், அல்லது
    2. பங்குபற்றுபவர்களினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் அதிகரித்துச் செல்லுதல் என்பவற்றில் பெருமளவில் தங்கியிருக்கும் ஓர் கட்டமைப்பாகும்.
- இதன் அடிப்படையில் திட்டத்தில் புதிய பங்குபற்றுபவர்கள் இணைந்து கொள்வதற்கு முற்பணமாக ஓர் கட்டணத்தைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றனர். மேலதிக பங்குபற்றுபவர்களின் மூலமாகவும் அதேநேரம் தற்போதுள்ள பங்குபற்றுபவர்களினால் கொண்டு வரப்படும் புதிய பங்குபற்றுபவர்கள் மூலமாகவும் தான் இலாபங்கள் (பணம் அல்லது ஏனைய சலுகைகள்) கிடைக்கும் என பங்குபற்றுபவர்களுக்கு பின்னர் உறுதியளிக்கப்படுகின்றது. எனினும், இத்திட்டங்களானது பெருமளவில் பொருட்கள் அல்லது சேவைகளினை விற்பனை செய்யும் திட்டங்களாக போலியான முறையில் காணப்படுகின்றன.

### தடைசெய்யப்பட்ட திட்டங்களை வேறுபடுத்திக் காண்பதற்கான அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:



1. திட்டத்தின் இயல்பு - இத்திட்டத்தில் இணைந்து கொள்வதற்கு திட்டத்தின் ஊக்குவிப்பாளர்கள் புதிய பங்குபற்றுபவர்களை பொருட்கள் அல்லது சேவைகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் பணத்தினை முதலீடு செய்வதற்கு வேண்டுகிறார்கள் என்பதுடன் பின்னர் அப்பொருட்கள் அல்லது சேவைகளை விற்பனை செய்வதன் மூலம் இத்திட்டத்திற்கு மேலதிக பங்குபற்றுபவர்களைக் கொண்டு வருமாறும் வேண்டப்படுகின்றனர்.
2. வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான சந்தைப்படுத்தல் இயலுமை - சந்தையில் இப்பொருட்கள் அல்லது சேவைகளுக்கு பலமான கேள்வி இல்லாதிருப்பதுடன் ஊக்குவிப்பாளர்களினூடாக மட்டுமே இவை கிடைக்கக் கூடியதாகவும் இருக்கின்றன.
3. உயர் நுழைவுக் கட்டணம் - இத்திட்டத்தில் சேர்வதற்கான நுழைவுக் கட்டணம் பெரும்பாலும் உயர்வாகவே இருக்கின்றது. இது ஊக்குவிப்பாளர்களினால் வழங்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விலையினூடான கட்டணமாக விதிக்கப்படலாம்.
4. இரண்டாந்தரச் சந்தையும் விற்பனைக்குப் பிந்திய சேவையும் - இப்பொருட்களுக்கு இரண்டாந்தரச் சந்தை இல்லாதிருப்பதுடன், விற்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விற்பனைக்குப் பிந்திய சேவைகளுக்கான உத்தரவாதம் ஊக்குவிப்பாளர்களினால் ஒரு போதும் வழங்கப்படுவதில்லை.
5. நிதி வருமானங்கள் - பங்குபற்றுபவர்களால் விற்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான தரகு அவர்களுக்கு வழமையாக வழங்கப்படுவதில்லை. ஆனால் அதிகூடிய வருமானங்களைப் பெற்றுக் கொள்வதானால் புதிய பங்குபற்றுபவர்களை சேர்த்துக் கொள்ளுதல் வேண்டுமென்று அறிவுரை வழங்கப்படுகின்றது. ஒரு பங்குபற்றுபவரின் நிதி வருமானங்கள் அவரினால் கொண்டு வரப்படும் புதிய ஆட்சேர்ப்புக்களின் எண்ணிக்கையிலேயே தங்கியிருக்கின்றது.
6. மீண்டும் வாங்கும் கொள்கை - வாங்கிய பொருட்கள் மீள் விற்பனைக்குரிய தன்மையினைக் கொண்டிருப்பினும் ஊக்குவிப்பாளர்கள் இத்திட்டத்திலிருந்து விலகிய பங்குபற்றுபவர்களின் எஞ்சியிருக்கும் இருப்புக்களை மீண்டும் வாங்கும் கொள்கை ஒன்றைக் கொண்டிருப்பதில்லை.
7. பொருட்களின் விற்பனையில் கவனம் செலுத்துதல் - இறுதி நுகர்வோருக்கு பொருட்கள் அல்லது சேவைகளை சில்லறையாக விற்பனை செய்யும் நோக்கம் இத்திட்டத்தில் சிறிதளவாகவே காணப்படுகின்றது.
8. திட்டத்தைப் பற்றிய தகவல்கள் - பொதுவாக ஊக்குவிப்புப் பிரசுரங்கள் அல்லது ஊக்குவிப்பாளர்கள் திட்டத்தின் கம்பனி பற்றிய வதிவிடம், வீதி, விலாசம், அல்லது தொலைபேசி இலக்கம் என்பவற்றை வெளிப்படுத்துவதில்லை.
9. நம்பமுடியாத வருமானங்கள் பற்றிய தவறான உறுதிகள் - ஊக்குவிப்புப் பிரசுரங்கள் அல்லது ஊக்குவிப்பாளர் நம்பமுடியாத வருமானங்கள் (உ-ம் "சட்டரீதியாக மாதாந்தம் ரூ.100,000 இனைப் பெறுதல்") அல்லது "வளமானதும் சந்தோசமானதுமான வாழ்க்கை", "இலகுவாக புதிய ஆட்களை சேர்த்துக் கொள்ளமுடியும்" போன்ற நன்மைகளைப் பெறமுடியும் என உறுதிகளை அளிக்கின்றனர்.
10. இணையுமாறு நிர்பந்தித்து ஊக்குவித்தல் - வழமையாக ஊக்குவிப்பாளர்கள் புதிய பங்குபற்றுபவர்களை கம்பனி அல்லது பொருட்கள்/ சேவைகள் பற்றிய போதியளவு விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்கு இடமளிக்காமல் ஒப்பந்தங்களுக்குள் நுழைவதற்கு நிர்ப்பந்திக்கிறார்கள்.
11. பயிற்சிகளும் விற்பனை உதவிகளும் - ஊக்குவிப்பாளர் விற்பனை மற்றும் ஆட்சேர்ப்பு தொடர்பான பொருத்தமான முன்னெடுத்துச் செல்லும் பயிற்சிச் சந்தர்ப்பங்களை அவனுடைய/ அவளுடைய புதிய பங்குபற்றுபவர்களிற்கு வழங்குவதில்லை.
12. திட்டத்தின் எதிர்காலம் - திட்டத்தின் அடிமட்டத்திலிருக்கும் புதிய பங்குபற்றுபவர்கள் புதிய ஆட்சேர்ப்புக்களைச் செய்யமுடியாத நிலை எழும்போது அவர்கள் தமது முதலீட்டை இழக்க வேண்டி நேரிடும் என்பதுடன் அத்திட்டம் முறிவடையும் நிலையையும் அடையும்.
13. செயற்பாட்டுப் பிரதேசங்கள் - செயற்பாட்டுப் பிரதேசங்கள், பிரிவு அல்லது செயற்களம் தொடர்பான நியாயமான ஓர் திட்டத்தை கொண்டில்லாதிருப்பதுடன், ஊக்குவிப்பாளர்கள் பொதுவாக எந்தவொரு நியாயமான அல்லது பகுத்தறிவான வரையறைகள் இல்லாமல் அதிகரித்த ஆட்சேர்ப்புக்களுக்கு ஊக்கமளிக்கிறார்கள்.

### குற்றவாளிகளுக்கு சட்டத்தின்கீழ் அளிக்கப்படும் தண்டனை மிகவும் கடினமானதாகும்.

மேற்குறிப்பிட்ட செயல்கள் மூலம் ஏதாவது ஒரு நபர் இப்படியான தடைசெய்யப்பட்ட திட்டத்தில் பங்குபற்றிய குற்றவாளியாகக் கண்டு பிடிக்கப்பட்டால் அவர் பின்வருவனவற்றிற்கு உட்படுவார்.

- மூன்று வருடங்களுக்குக் குறையாத சிறைத் தண்டனை அல்லது
- ஒரு மில்லியன் ரூபாவுக்குக் குறையாத அபராதம் அல்லது
- சிறைத் தண்டனை மற்றும் அபராதம்

மற்றைய ஒரு நபருக்கு இழப்பு அல்லது தீமையை உண்டுபண்ணும் விதத்தில் குற்றங்களானது சுய விருப்பத்துடன் அல்லது தெரிந்து கொண்டு புரியப்பட்டிருந்தால் அதற்கான தண்டனை

- மூன்று வருடங்களுக்கு குறையாத மற்றும் ஐந்து வருடங்களுக்கு மேற்படாத கடூழியச் சிறைத் தண்டனை மற்றும்
- இரண்டு மில்லியன் ரூபா அபராதம் அல்லது திட்டத்தில் பற்குபற்றுபவர்களிடம் இருந்து பெறப்பட்ட இலங்கை நாணயத்தின் முழுத் தொகையின் இருமடங்கு என்பவற்றில் ஆகக் கூடிய தொகையைக் கொண்ட அபராதம்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

மேலதிக விசாரணைகளுக்கு

தொலைபேசி: 2477100, 2477105, 2477120, 2477129
தொலைநகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk

CENTRAL BANK OF SRI LANKA
60 growth& stability
1950 - 2010

# நவீன எண் சோதிடம்



## எவ்வளவு சுகமாக வாழவேண்டுமோ அவ்வளவு சுகமாக வாழ்வர் 08

**உடல் எண் 1 உயிர் எண் 6**

1,10,19,28 போன்ற தேதிகளில் பிறந்து தேதி, மாதம், வருடம் ஆகிய வற்றைக் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 6 வந்தால் சூரியன், சுக்கிரன் போன்ற ஆதிக்கத்தில் பிறந்த வராவர். சூரியன் இவர்களுக்கு நேர்மை, நல்ல பெயர், நல்ல நண்பர்களைச் சேர்க்கும். இந்த உலகத்தில் பிறந்த நாம் எல்லா சுகபோக பாக்கியங்களையும் அனுபவிக்க வேண்டும் என்று சுக்கிரன் இழுத்துச்செல்லும். நல்ல அழகுடனும், கவர்ச்சியான நடை, உடை பாவனையுடனும் காட்சியளிக்கும் இவர்களில் பலர் வசதியுள்ளவர்களே. இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு இருக்கும் மிடுக்கான தோற்றமும், பேச்சாற்றலும் மற்ற 1 எண்காரர்களுக்கு இருக்காது.

எவ்வளவு சுகமாக வாழவேண்டுமோ அவ்வளவு சுக வாழ்க்கையையும் அடைவர். பெயர் குரு ஆதிக்கமாகிய 3 எண்களிலிருந்தால், பெண்களாலோ குழந்தைகளாலோ மனக்கவலை உண்டாகும். பெயர் பொருத்தமானதாக அமைந்திருந்தால் எந்தக்குறையும் இருக்காது. வாகனப் பிரியரான இவர்கள், தான் பயன்படுத்தும் வாகனங்களை அழகுபடுத்தி வைத்திருப்பார்கள். வாசனைத்திரவியங்கள் மோகமும், இயற்கைக் காட்சிகளை இரசிக்கும் இரசனையும் தூர தேசப்பயணங்களும் இவர்கள் மனதிற்குப் பிடித்தவையே. எப்பொழுதும் தூய்மையாகக் காட்சியளிக்கும் இவர்கள் அலட்டிக் கொள்ள மாட்டார்கள்.

அதிகம் சிரமப்படாமல் சம்பாதிப்பர். எந்த மொழியில் பேசினா

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

லும் அழகாகவும் சுத்தமாகவும் சுருக்கமாகவும் பேசுவர். இவர்களில் சிலர் உயர்ந்த உத்தியோகத்திலும் சிலர் சிறிய உத்தியோகத்திலும் இருக்கின்றனர். சிலர் மனைவியின் பெயரில் தொழில் ஆரம்பிப்பர். ஆடம்பரப் பிரியரான இவர்கள் பகட்டு சம்பந்தமான தொழில் செய்வர். நகைகள் மின்சாரம் சம்பந்தமான பொருட்கள் வாகனம் இன்னும் பல விதமான பொருட்கள் மூலம் முன்னேற்றம் பெறுவர்.

எந்த ஆடையை அணிந்தாலும் கவர்ச்சியான தோற்றம் அளிக்கும் இவர்கள் காதல் விடயத்தில் கவனமாக இருப்பது நல்லது. அப்படிக் கவனக்குறைவாக இருந்தால் வீணான கெட்ட பெயர் ஏற்படும். பொதுவாக இவர்களுக்கு சூரியன் ஆதிக்கத்தில் உள்ள நல்ல எண்களில் பெயரை அமைத்துக் கொண்டால் கெட்டவை விலகிச் செல்லும். ஆரம்பத்திலே நன்றாகப் பெயர் அமைந்தவர்களுக்குபெண்களால் வரவும் பெண்களினால் உயர்வும் உண்டாகும்.

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்குப் பெயர் நன்றாக அமைந்து விட்டால், வெளிநாட்டுப்பயணம், உல்லாச சுற்றுப்பயணங்கள், சுகமான வாழ்க்கை, பெரிய வீடு, வாகன வசதி போன்றவைகள் அமையும். இவர்கள் எல்லோரிடமும் பழக்கம் வைத்துக்கொள்ள மாட்டார்கள். குறிப்பிட்ட நல்ல நண்பர்கள் வைத் திருப்பார்கள். தனக்கு வருமானம் இல்லாத எந்தக்காரியத்திலும் இறங்க மாட்டார்கள். இவர்கள் சில நேரங்களில் மிடுக்கான குரலோடு பேசிக் கடுமையாக நடந்து கொள்ளுவர். ஏன் இவ்வாறு நடந்து கொண்டோம் என்று தனிமையில் வருந்துவர்.

வயது கூடினாலும் இவர்களது கவர்ச்சி குறையாது. சந்தோஷமாகவும் உல்லாசமாகவும் வாழ ஆசைப்படுவர். வயதாகி கண்ணாடி அணியும் போதுகூட அழகான பிரேம் தான் அணிவர். வீட்டிற்குப் பெயின்ற் செய்து தூய்மையாக வைத்துக் கொள்வர். பலவிதமான ஆசனங்களையும் ஆடம்பரப் பொருட்களையும் வைத்து வீட்டை அலங்கரிப்பர்.

பழைய வாகனங்களை வாங்கிச் செலவுசெய்து கவர்ச்சியானதாக மாற்றிவிடுவர். மலைப்பிரதேசங்களுக்குச் செல்லுவதென்றால் மிக்க மகிழ்ச்சியடைவர். உயர்ந்த நிலையில் இருந்தும்கூட உணர்ச்சிவசப்பட்டு தகுதி குறைவான பெண்களுடன் பழகி பின் வேதனை அடைகின்றனர். ஆனால், பெயர் பொருத்தமானதாக அமைந்து விட்டால் இவ்வாறு நடப்பதில்லை. பொதுவாக இந்த எண்ணிக்கைக் காரர்கள் இவ்வுலகில் அனுபவிக்கப் பிறந்தவராவர். அப்படி இவர்களுக்குச் சிக்கல் இருக்குமேயானால் பெயரை **பெயர் எண்பலனைப் பார்த்து** மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும்.

**தொழில்**

கன்ட்ராக்ட், ஆடம்பரப் பொருள் சம்பந்தமான தொழில், இரும்பும் நெருப்பும் சம்பந்தமான தொழில், ஆபரண சம்பந்தமான தொழில் போன்றவை இவர்களுக்கு நன்மையைத்தரும். பிறந்த தேதிக்குப் பொருத்தமானதாக தொழிலின் பெயரை அமைத்துக்கொண்டால் சிறப்பாக இருக்கும்.

**நோய்**

பொதுவாக இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு இரத்தக் கொதிப்பு, உடலுறவு சம்பந்தமான நோய், நீர் சம்பந்தப்பட்ட வியாதிகள் வரலாம். ஆனால், பிறந்த தேதிக்குப் பொருத்தமானதாகப் பெயரை அமைத்துக் கொண்டால் நோய்கள் அதிகம் வருவதில்லை.

**பெயர் அமைக்கும் முறை**

இந்த எண்களின் ஆதிக்கத்தில் பிறந்தவர்களுக்கு சூரியன் ஆதிக்கமான 19,37,46,64,82 போன்ற எண்களிலும் சுக்கிர ஆதிக்கமான 15,33,42,60,69 போன்ற எண்களிலும் பெயரையும் வியாபார விலாசங்களையும் அமைத்துக் கொள்ள வேண்டும்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண்-1,6

யோகமான தேதிகள்-1,10,19, 28; 6,15,24; 9,18,27,

யோகமான மோதிரக்கல்- கனகபுஷ்பராகம், மாணிக்கம், மரகதம்

யோகமான நிறம் - மஞ்சள், வெளிர் நீலம், பச்சை

ஆகாத தேதிகள் -3,12,21, 30; 8,17,26


ஆகாத நிறம்- கறுப்பு, அராஞ்சு, கத்தரிப்பூ நிறம்

* * *

## பெயர் எண்களின் பலன்

**25 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயரில் அமைத்துக் கொண்டால் ஆரம்ப வாழ்க்கை பயங்கரமான சோதனைக்குள்ளாக நேரிடும். அமைதியும் அருளும் மக்கள் ஆதரவும் கொண் டவர்கள் தனது பிற்கால வாழ்க்கையில் வருந்துவர். முற்கால வாழ்க்கையில் கிடைத்த நல்ல வாய்ப்புக்களை பயன்படுத்தாது பின்னால் வருத்தப்படுவதால் இந்த எண் சிறந்ததாக இல்லை.



**27 எண் பலன்**

இந்த எண்களில் சந்திரன் என்ற 2 உம் கேது என்ற 7உம் சேர்ந்திருப்பதால் மிகச் சிறந்த பலனை அளிக்கும் என்பது உறுதி. இவர்களது விடாமுயற்சியாலும் பெரும் பெற்ற இவர்கள் போராடியே வாழ்க்கையை நடத்துவர். சோகம் நிறைந்த பல கட்டங்களைக் கடக்க வேண்டிவரும். தன்னை ஒரு சிறந்த தலைவனாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் வாழ்வர். உலகப்புகழ், கீர்த்தி உண்டாகும். நேர்மை, நீதி, ஒழுக்கம் போன்ற நேர்மையான பாதைகளை வகுத்துக்கொண்டு வாழ்க்கையை நடத்துவர். எழுத்தாளராகவும், பேச்சாளராகவும், மதத்தலைவராகவும் உலகை உயர்த்த முற்படுவர். எல்லாவிதமான சோதனைகளையும் தாங்கிக் கொண்டு, போராடி பெரும் புகழை அடைவர். ஆனால், சுய வாழ்க்கையில் திருப்தியான நிலை இருக்காது. பிறந்த தேதி 2,11,20,29 ஆக இருந்தால் எல்லா வசதிகளும் பெற்று வாழ்வர்.

**26எண் பலன்**

இந்த எண்களில் சந்திரனும், சுக்கிரனும் ஒன்று சேர்ந்து சனியாகிய 8 வருவதால் இவர்களது வாழ்க்கை ஆடம்பரமும் ஆர்ப்பாட்டமும் கொண்டதாகிவிடும். இந்த எண்ணிக்கையில் பெயர் உழைப்பாலும் புகழ், அந்தஸ்து, செல்வம் ஆகியவை உயர்வதோடு அதிகாரமுள்ள பதவியையும் அடைவர். தன் நாட்டிற்காகவும் தன்னைச் சார்ந்தவர்களுக்காகவும் ஓடோடி உழைப்பர். தீய செயலில் இறங்குவதற்கு இவர்கள் மனம் இடம் தராது. நாம் செய்கின்ற செயலில். பலன் அடைகின்றோமா? நம்மைச் சார்ந்தவர்கள் பலன் அடைகின்றனரா? என்று கணக்கிட்டுத்தான் செயல்படுவர். இவர்களுக்கு ஆண்டவனுடைய அருள் உண்டு. ஆனால் 2,11,எ20,29,7,16,25 போன்ற தேதியில் பிறந்தவர்கள்

எண் கணித நிபுணர்
கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT

கண்டிப்பாக இந்த எண்ணில் பெயரை அமைத்துக் கொள்ளக் கூடாது. அவ்வாறு அமைத்துக் கொண்டால் வீணான சிக்கலிலும் தேவையில்லாத காரியங்களிலும் இறங்கித் தொல்லையுறுவர்.

(தொடரும்)

# சர்வதேச கப்பல் போக்குவரத்தின் வழித்தடப் பாதுகாப்பு அதிகரிப்பு

## கடற்படைப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் மேற்கு மற்றும் தெற்கு கடற்பிராந்தியத்தில் அமைந்துள்ள சர்வதேச கப்பல் போக்குவரத்து வழித்தடப் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுல சூரிய தெரிவித்துள்ளார்.

மேற்படி கப்பல் மார்க்கத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் பொருட்டு குறித்த கடற் பிரதேசங்களில் இரண்டு கப்பல்கள் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. கடற்படைச் சிப்பாய்களும் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

பெருமளவிலான சர்வதேச வர்த்தக கப்பல்கள் மேற்கு மற்றும் தெற்கு பிராந்தியத்தில் அமைந்துள்ள சர்வதேச கப்பல் பயண மார்க்கத்தினூடாகப் பயணங்களை மேற்கொள்கின்றன.

இதன் பொருட்டே அதிகபட்ச பாதுகாப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சோமாலியக் கடற்கொள்ளையர்களைக் கருத்திற் கொண்டே கடற்படை இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது எனக் கூறப்படுவதில் எவ்வித உண்மையுமில்லை. (ஸ்ரீ-2)

# இலங்கையில் கடந்த இருவருடங்களில் ஆயிரத்து 700 பேர் கடத்தப்பட்டுள்ளனர்

## பொலிஸ் அறிக்கையில் தகவல்

இலங்கையில் கடந்த இரு வருடங்களில் ஆயிரத்து 700 பேர் கடத்தப்பட்டதாக பொலிஸ் திணைக்களத்தால் புதிதாக தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட காரணங்களால் கடத்தப்பட்டவர்களும் இந்த எண்ணிக்கையில் அடங்குகின்றனர்.

இந்த அறிக்கையின் படி பெரும்பாலானோர் கப்பம் கோருவதற்காக கடத்தப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

2009 ஆம் ஆண்டில் 926 பேர் கடத்தப்பட்டுள்ளதாகவும் கடந்த வருடம் 774 பேர் கடத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

202 சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட வேண்டியுள்ளதாகவும் 275 சம்பவங்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அல்லது அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-4)

# பொதுமன்னிப்புக் காலத்தில் 5 ஆயுதங்களே ஒப்படைப்பு

கிழக்கு மாகாணத்தில் சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைப்பதற்காக ஒதுக்கப்பட்ட பொதுமன்னிப்புக் காலத்தில் ஐந்து ஆயுதங்கள் மட்டுமே ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருப்போர் ஆயுதங்களை ஒப்படைப்பதற்காக ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. இரண்டு நபர்கள் மட்டுமே தங்களது ஆயுதங்களை குறித்த காலத்தில் ஒப்படைத்துள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

புதிய ரி 56 ரக துப்பாக்கி ஒன்றையும் வெளிநாட்டு குண்டு ஒன்றையும் மட்டக்களப்பைச் சேர்ந்த நபர் ஒருவர் இராணுவத்திடம் ஒப்படைத்துள்ளார். மற்றுமொரு நபர் மறைத்து வைத்திருந்த ஆயுதங்கள் பற்றி தொலைபேசி மூலம் தகவல் வழங்கியதாகவும் ஆயுதங்களை படையினர் மீட்டெடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருக்கும் நபர்களை கைது செய்வதற்கு நீதிமன்றின் உத்தரவு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் நாட்களில் கிழக்கு மாகாணம் முழுவதிலும் சட்டவிரோத ஆயுதங்களை தேடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

சட்டவிரோத ஆயுதங்களைப் பயன்படுத்தி கொலை மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# முன்னாள் போராளிகளில் ஒரு பகுதியினர் விரைவில் விடுவிக்கப்படவுள்ளனர்

## புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் 2 ஆயிரத்து 960 பேருக்கு தற்போது புனர்வாழ்வளிக்கப்பட்டு வருவதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

வவுனியா, யாழ்ப்பாணம், பொலனறுவை ஆகிய பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள நான்கு நிலையங்களில் இந்த புனர்வாழ்வு நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.

புனர்வாழ்வளிக்கப்படுவோரில் 20 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்ட முன்னாள் போராளிகளே அதிகம் அடங்குகின்றனர் எனவும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.

இவர்களில் ஒரு பகுதியினரை இம்மாதம் உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தேசித்துள்ளதாக மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# போலி ஆவணங்களை கொண்டு வாகனங்கள் இறக்குமதி

## மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் குற்றச்சாட்டு

இலங்கையில் பலம் பொருந்தியவர்கள் போலி ஆவணங்களை சமர்ப்பித்து வாகன இறக்குமதியில் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறித்த ஆவணங்கள் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் பி.டி.எல். தர்மபால தெரிவித்துள்ளார்.

மோசடியின் அடிப்படையில் இலங்கைக்கு கடந்த 6 மாதங்களுக்குள் 6 சொகுசு வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் கடந்த வருடத்தில் 23 சொகுசு வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. கடந்த வருடத்தில் மாத்திரம் 40 ஆயிரம் வாகனங்கள் இலங்கையில் பதிவு செய்யப்பட்டன.

இவை தொடர்பிலான 18 இலட்சம் ஆவணக் கோவைகளை தமது திணைக்களம் உரிய கட்டட வசதிகள் இல்லாத நிலையில் பாதுகாத்து வைத்துள்ளதாக ஆணையாளர் குறிப்பிட்டார்.

போலியான ஆவணத்தின் கீழ் வாகனங்கள் இறக்குமதி செய்யப்படுவதால் அரசாங்கத்துக்கு கடந்த வருடத்தின் இரண்டாம் காலாண்டில் மாத்திரம் 4.3 பில்லியன் ரூபாய்கள் நட்டம் ஏற்பட்டதாகவும் ஆணையாளர் கூறினார். (ஸ்ரீ-2)




★ *1610*-ஹென்றி ஹட்சன் தனது கடற் பயணத்தின் போது இன்றைய ஹட்சன் குடாவை அடைந்தார்.

★ *1790*-ஐக்கிய அமெரிக்காவில் முதற் தடவையாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இடம்பெற்றது.

★ *1798*-பிரெஞ்சுப் புரட்சிப் போர்கள்: நைல் நதிப் போரில் பிரித்தானியா வெற்றி பெற்றது.

★ *1870*-உலகின் முதலாவது சுரங்க தொடரூந்து சேவை லண்டனில் ஆரம்பிக்கப்பட்டது.

★ *1903*-ஒட்டோமான் பேரரசுக்கு எதிராக மசிடோனியர்களின் கிளர்ச்சி தோல்வியில் முடிந்தது.

★ *1914*-ஜேர்மனியப் படையினர் லக்சம்பேர்க்கை முற்றுகையிட்டன.

★ *1916*-முதலாம் உலகப் போர்: லியனார்டோடாவின்சி என்ற இத்தாலியப் போர்க் கப்பல் அவுஸ்திரேலியாவினால் மூழ்கடிக்கப்பட்டது.

★ *1918*-முதலாம் உலகப் போரை அடுத்து சைபீரியாவுக்கு தனது படைகளை அனுப்பப் போவதாக ஜப்பான் அறிவித்தது.

★ *1931*-இராணுவ வேலைகளை நிராகரிக்குமாறு அறிவியலாளர்களுக்கு ஐன்ஸ்டைன் அழைப்பு விடுத்தார்.

★ *1932*-பொசித்திரன் (இலத்திரனின் எதிர்த்துணிக்கை) கார்ல் ஆண்டர்சன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

★ *1934*-அடொல்ஃப் ஹிட்லர் ஜேர்மனியின் ஜனாதிபதியானார்.

★ *1939*-அணு ஆயுதத்தை தயாரிக்க அறிவுறுத்துமாறு ஐன்ஸ்டைன், லியோ சிலார்ட் ஆகியோர் அமெரிக்க ஜனாதிபதி பிராங்கிளின் ரூஸ்வெல்ட்டிற்குக் கடிதம் எழுதினார்கள்.

★ *1943*-போலந்தில் திரெபிலிங்கா வதை முகாமில் நாசிகளுக்கு எதிராகக் கிளர்ச்சி இடம்பெற்றது.

★ *1945*-இரண்டாம் உலகப் போர்: தோல்வியடைந்த ஜேர்மனியின் எதிர்காலம் குறித்து விவாதித்த நட்பு அணி நாடுகளின் பொட்ஸ்டாம் மாநாடு நிறைவடைந்தது.

★ *1968*-பிலிப்பைன்சில் கசிகுரான் என்ற இடத்தில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் சிக்கி 270 பேர் உயிரிழந்தனர்.

★ *1973*-மான் தீவில் கேளிக்கை நிகழ்ச்சி ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் 51 பேர் கொல்லப்பட்டனர்.

★ *1980*-இத்தாலிய தொடரூந்து நிலையத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 85 பேர் கொல்லப்பட்டனர்.

★ *1989*- யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் பெண்கள், குழந்தைகள் உட்பட 63 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

★ *1990*-ஈராக் குவைத்தின் மீது படையெடுத்தது.

**பிறப்பு**

★ *1926*-ஜோர்ஜ் ஹப்பாஷ், பாலஸ்தீனத் தலைவர் (இ.2008)

**இறப்புக்கள்**

★ *1860*-சேர் ஹென்றி வோர்ட், இலங்கையின் முன்னாள் பிரித்தானிய ஆளுநர் (பி.1796)

★ *1892*-டாக்டர் பொன்ஜீன், கொழும்பின் முதலாவது ஆயர்

★ *1922*-அலெக்சாண்டர் கிரஹம் பெல், தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் (பி.1847)

★ *1923*-வோரன் ஹார்டிங், ஐக்கிய அமெரிக்காவின் 29 ஆவது குடியரசுத் தலைவர் (பி.1865)



**1913-உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தை நிறுவிய தனிநாயகம் அடிகளாரின் பிறந்த தினம் இன்றாகும். (இ.1980)**

# தமிழகம் முழுவதும் தி.மு.க ஆர்ப்பாட்டம் சென்னையில் மு.க ஸ்டாலின் கைதானார்



(சென்னை)

தி.மு.க.வினர் மீது பொய் வழக்கு போடும் தமிழக அரசை கண்டிக்கும் வகையில் தமிழகம் முழுவதும் நேற்று தி.மு.க சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்நடத்தப்பட்டது. இதில் கலந்து கொண்ட முன்னாள் அமைச்சர்கள், எம். எல் ஏக்கள் மற்றும் ஆயிரக்கணக்கான தி.மு. க. தொண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னையில் முன்னாள் துணை முதல்வரும் தி.மு.க பொருளாளருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. இதில் கலந்து கொண்ட ஸ்டாலின் உட்பட தி.மு.க.வினர் அனைவரும் கைது செய்யப்பட்டனர்.

கரூரில் தி.மு.க மாவட்ட பொறுப்பாளர் நன்னியூர் ராஜேந்திரன், எம்.எல் ஏ பழனிச் சாமி ஆகியோர் தலைமையில் நடந்த ஆர்ப் பாட்டத்தில் சுமார் 2 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டனர்.

திருவாரூர் மாவட்டத்தில் முன்னாள் அமைச்சர் அழகு திருநாவுக்கரசு தலைமையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 3 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டனர். தஞ்சாவூரில் முன்னாள் அமைச்சர் கோ.சி.மணி தலைமையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டனர்.மேலும் திருச்சியில் முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 3ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டனர். தூத்துக்குடியில் மாவட்ட செயலாளர் பெரியசாமி தலைமையிலும் வேலூர் மாவட்டத்தில் முன்னாள் அமைச்சர்கள் துரைமுருகன், கீதாஜீவன் ஆகியோர் தலைமையிலும் ஆர்ப்பாட்டங் கள் நடைபெற்று ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர்.

திருப்பூரில் முன்னாள் அமைச்சர் சாமிநாதன் தலைமையிலும் ஆர்ப்பாட்டம் நடந்தது. இதில் கலந்து கொண்ட மேயர் செல்வராஜ், முன்னாள் அமைச்சர் கோவிந்தசாமி உட்பட ஆயிரத்திற்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டனர். (ஸ்ரீ-4)

## கருணாநிதி வீட்டுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்த சிறுவன் கைது

சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள 108 அம்புலன்ஸ் சேவை மைய அலுவலகத்துக்கு கடந்த வியாழக்கிழமை ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அதில் பேசியவன் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் கோபாலபுரம் வீட்டில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருப்பதாகவும் சிறிது நேரத்தில் வெடிக்கும் என்றும் கூறிவிட்டு தொலைபேசியை துண்டித்து விட்டான்.இதனால் பரபரப்படைந்த ஊழியர்கள் பொலிசுக்கு தகவல் கொடுத்தனர். உடனடியாக வெடிகுண்டு நிபுணர்கள் கருணாநிதியின் வீட்டில் சோதனை நடத்தினார்கள். அங்கு வெடிகுண்டு எதுவும் சிக்கவில்லை. வெறும் புரளி என்று தெரியவந்தது.

பொலிஸார் இதுபற்றி வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினார்கள். இதில் தொலை பேசியில் பேசியது திருவண்ணாமலையை சேர்ந்த 5 ஆம் வகுப்பு மாணவன் என்பது தெரிய வந்தது. பொலிஸார் அவனை கைது செய்து புரசைவாக்கம் கெல்லீஸ் சிறுவர் சீர்திருத்த பள்ளியில் அடைத்தனர்.(ஸ்ரீ-4)

# காங்கிரஸ் கட்சியினருக்கு இன்னமும் வேண்டும்

## என்கிறார் கருணாநிதி

(சென்னை)

ராஜாவின் குற்றச்சாட்டுக்கு பிரதமரும் சோனியாவும் விளக்கம் அளிக்க வேண்டுமென ஜெயலலிதா தீர்மானம் நிறைவேற்றுகிறார். ஜெயலலிதா உறவுக்காக வாய்க்கு வந்தவாறு உளறிக்கொண்டிருக்கும் காங்கிரஸ் நண்பர்களுக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும் என கருணாநிதி கூறியுள்ளார்.

இவ்விடயம் குறித்து தி.மு.க தலைவர் கருணாநிதி நேற்று முன்தினம் வெளியிட்ட கேள்வி , பதில் அறிக்கை வருமாறு,

**பழிவாங்கும் நோக்கோடு யாரையும் கைது செய்யவில்லை என ஜெயலலிதா கூறியிருக்கிறாரே?**

தூங்கிக் கொண்டிருந்த அன்பழகன் எம்.எல்.ஏ.வை அதிகாலையில் தூக்கி வந்து எட்டு பிரிவுகளில் வழக்கு பதிந்துள்ளனர்.

பொலிஸ் நிலையத்திற்கு கையெழுத்திட வந்த வீரபாண்டி ஆறுமுகத்தை, இன்னொருவர் புகார் கொடுத்திருக்கிறார் என கைது செய்துள்ளனர். திருவாரூரில் விபத்தில் மாணவர் இறந்ததற்கு, மாவட்டச் செயலர் தான் காரணம் என வழக்கு பதிந்து, பிரசாரத்திற்கு ஸ்டாலினோடு சென்ற நேரத்தில், வழி மறித்து அவரை கைது செய்துள்ளனர். இதையெல்லாம் பார்த்தாலே, 'ஜெயலலிதாவின் பழிவாங்கும் நடவடிக்கை தெரியும்.

**ராஜா கூறிய குற்றச்சாட்டுக்கு பிரதமர், சோனியா பதிலளிக்க வேண்டுமென ஜெய லலிதா கேட்டிருக்கிறாரே?**

தேர்தலுக்கு முன், ராஜா மீது காங்கிரஸ் தலைவரும், பிரதமரும் நடவடிக்கை எடுத்து, அவரை அமைச்சர் பதவியிலிருந்து நீக்க வேண்டும். அப்படிச் செய்தால், அ.தி.மு.க நிபந்தனையற்ற ஆதரவு தரும் என்று ஜெயலலிதா சொன்னார். இதே ஜெயலலிதாதான், ராஜா குற்றச்சாட்டுக்கு பிரதமரும், சோனியாவும் பதிலளிக்க வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றுகிறார். ஜெயலலிதா உறவுக்காக தவமிருந்து, வாய்க்கு வந்தபடி இப்போது உளறிக் கொண்டிருக்கும் ஒரு சில காங்கிரஸ் கட்சி நண்பர்களுக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும். (ஸ்ரீ-4)

# பாரதச் செய்திகள்

# 2ஜி அலைக்கற்றை விவகாரம் குறித்து நாடாளுமன்றம் விவாதிக்க முடியாது

## பிரதமர் மன்மோகன் தெரிவிப்பு

2ஜி முறைகேடு தொடர்பான வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளதால் அது பற்றி நாடாளுமன்றத்தில் விவாதிக்க முடியாது என்று பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்தார்.

மக்களவை மழைக்கால கூட்டத் தொடர் நேற்று நடைபெற்றது. இதையொட்டி அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை மக்களவைத் தலைவர் மீராகுமார் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கூட்டியிருந்தார். அக்கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதமர் மன்மோகன் சிங்கிடம் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதில் அளித்தபோது, 2 ஜி முறைகேடு புகார் தொடர்பாக நாடாளுமன்ற கூட்டத் தொடரில் விவாதிக்க முடியாது. அந்தப் பிரச்சினை தற்போது நீதிமன்ற விசாரணையில் உள்ளது. இது தொடர்பாக நீதிமன்றம் எடுக்கும் முடிவை அனைவரும் ஏற்க வேண்டும்.

லோக்பால் மசோதாவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துவிட்டதால் அது சட்டமாகி விடாது. அவ்வாறு அமைச்சரவை ஒப்புதல் அளித்த மசோதா மக்களவையில் தாக்கல் செய்யப்படும். அதன் விதியை மக்களவையே தீர்மானிக்கும். ஜனநாயக நாட்டில் மக்களவை இறையாண்மை உள்ள உயர்ந்த அமைப்பு. எனவே மக்களவை எடுக்கும் முடிவை அனைவரும் ஏற்றுக்கொண்டு மக்களவை தனது கடமையை செய்ய ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். அப்போது மட்டுமே மக்களவை தனது கடமையை நிறைவேற்ற முடியும்.



தெலுங்கானா பிரச்சினையில் எல்லோரும் ஒப்புக் கொள்ளும் வகையில் சுமுகத்தீர்வு ஏற்படும். இதன்மூலம் அந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை 2 ஜி உரிமம் வழங்குவது தொடர்பான தீர்மானம் பிரதமர் மன்மோகன் சிங், உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் ஆகியோருக்கு தெரிந்தே எடுக்கப்பட்டது. அவர்கள் அதற்கு ஒப்புதல் அளித்தனர். என்று அண்மையில் சி.பி.ஐ சிறப்பு நீதிமன்றத்தில் ராசா தெரிவித்திருந்தார்.

இதையடுத்து ராசாவின் இந்த வாக்குமூலத்தை மக்களவையில் கிளப்ப பா.ஜ.க திட்டமிட்டுள்ளது. மேலும் ராசாவின் இந்த வாக்குமூலத்துக்கு பிரதமர்,காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி பதிலளிக்க வேண்டும் என அ.தி.மு.கவும் குரல் எழுப்பியுள்ளது. எனவே மக்களவை கூட்டத் தொடரில் ராசாவின் வாதம் பெரிய புயலைக்கிளப்பும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஸ்ரீ-4)

# ஊழல் குற்றச்சாட்டுக்களால் இந்தியாவுக்கு களங்கம்

## அமைச்சர் கபில் சிபல் தெரிவிப்பு

ஊழல் குற்றச்சாட்டுகளால் இந்தியாவுக்கு களங்கம் ஏற்பட்டுவிட்டது என்று மத்திய தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைத் தொடர்புத் துறை அமைச்சர் கபில்சிபல் தெரிவித்தார்.

இதனால் இந்தியாவிற்குவரும் வெளிநாட்டு முதலீடு பெரும் அளவில் குறைந்துவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

டில்லியில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த கபில்சிபல் இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

2ஜி அலைக்கற்றை முறைகேடு, கொமன் வெல்த் விளையாட்டுப் போட்டி திட்டமுறைகேடு ஆகிய புகார்களால் இந்தியாவிற்கு பெரிய அளவில் களங்கம் ஏற்பட்டுவிட்டது. இதனால் இந்தியாவில் வெளிநாட்டு முதலீடு வெகுவாக குறைந்து விட்டது.

ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள உலக வெளியீடு அறிக்கையின்படி 2009 ஆம் ஆண்டு இந்தியாவில் வெளிநாட்டு நேரடி முதலீடு ரூபா ஒரு இலட்சத்து 59 ஆயிரத்து 362கோடியாகும். ஆனால் இது நடப்பு நிதியாண்டில் ஒரு இலட்சத்து 10 ஆயிரத்து 668 கோடியாக குறைந்து விட்டது. இந்த வகையில் வெளிநாட்டு நேரடி முதலீடு பட்டி யலில் இந்தியா 14 ஆவது இடத்துக்கு தள் ளப்பட்டுள்ளது. இந்த நிலைமைக்கு நாமே காரணம்.

முறைகேடு புகார்களால் உறுதியற்ற தன்மை நிலவுவதால் வெளிநாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் முதலீடு செய்ய தயக்கம் காட்டி வருகின்றன. ஆனால் இது தற்காலிகமானதுதான். இந்தியாவில் பல்வேறு தொழில்களில் முதலீடு செய்ய வெளிநாட்டு நிறுவனங்கள் ஆர்வமாக உள்ளன. அவை நிலைமையை உன்னிப்பாக கவனித்து வருகின்றன.

எனவே விரைவில் எப்போதும்போல வெளிநாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் முதலீடு செய்ய முன்வரும். இது தொடர்பாக பல நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் என்னுடன் பேசி வருகின்றனர். தற்போதைய நிலைமையால் புதிய நிறுவனங்களுக்கு கடன் அளிக்கவும் வங்கிகள் தயக்கம் காட்டி வருகின்றன. இந்த நிலைமை விரைவில் சீராகும் என்றார் . (ஸ்ரீ-4)

# அமெரிக்காவில் மற்றொரு பல்கலையும் விசா மோசடி

## இந்திய மாணவர்களுக்கு எச்சரிக்கை

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் இந்திய மாணவர்களை ஏமாற்றிய டிரிவேலி பல்கலையைப் போல மற்றொரு பல்கலையும் விசா மோசடியில் சிக்கியுள்ளது. இது குறித்து அமெரிக்கா வெளியிட்டுள்ள அறிக்கையில், விசா மோசடி செய்வோர் மற்றும் போலி ஆவணங்களைத் தயாரிப்போரது நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. எனவே இந்திய மாணவர்கள் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் சான்பிரான்சிஸ்கோ நகரில் செயற்பட்டு வந்த டிரிவேலி பல்கலைக்கழகத்தில் இந்தியாவில் ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள் படிப்பதற்காக சேர்ந்தனர். ஆனால் கடந்த சில மாதங்களுக்கு முன் அந்த பல்கலை விசா மோசடியில் ஈடுபட்டது தெரிய வந்தது. இதையடுத்து நடந்த விசாரணையில் இந்திய மாணவர்களை அப்பல்கலை ஏமாற்றியது கண்டுபிடிக்கப்பட்டது.

இது பற்றிய விசாரணை இன்னும் முடிவடையாத நிலையில் வோஷிங்டன் புறநகர் பகுதியில் விர்ஜினியா மாகாணத்தின் அன்னாண்டல் என்ற பகுதியை தலைமையிடமாகக் கொண்டு செயற்பட்டு வந்த வடக்கு விர்ஜினியா பல்கலைக்கழகம் விசா மோசடியில் சிக்கியுள்ளது. (ஸ்ரீ-4)

# சீனாவில் புகுந்து பாகிஸ்தான் தீவிரவாதிகள் தாக்குதல்

## 20 பேர் பலி



(பீஜிங்)

சீனாவின் ஷின்ஜியாங் மாகாணம் பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பு காஷ்மீர் எல்லையில் உள்ளது. இங்கு பாகிஸ்தானின் கிழக்கு துர்கிஸ்தான் இஸ்லாமிய இயக்கம் என்ற தீவிரவாதத்தை அமைப்பு பயிற்சி முகாம்களை அமைத்துள்ளது.

அங்கு பயிற்சி பெறும் தீவிரவாதிகள் ஷின்ஜியாங் மாகாணத்தில் உள்ள காஷ்கார் என்ற இடத்தில் புகுந்து பொது மக்கள் மீது தாக்குதல் நடத்தினார்கள். இந்த தாக்குதல் 2 நாட்கள் நடந்தது. அதில் 20 பேர் பலியாகினர்.

இது குறித்து சீன அரசு விசாரணை நடத்தியது. அதில் சீனாவுக்குள் தீவிரவாதிகள் வெடி பொருட்கள் மற்றும் ஆயுதங்களுடன் நுழைந்தது தெரியவந்தது. இச்சம்பவத்துக்கு சீனா கண்டனம் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-4)

# சிரியாவில் இராணுவத்தினரின் தாக்குதலில் 95 பேர் பலி

(நிகோசியா)

சிரியாவில் சர்வாதிகார ஆட்சி நடத்தி வரும் ஜனாதிபதி பஷார் அல் அசாத் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி கடந்த சில மாதங்களாக போராட்டம் நடைபெற்று வருகிறது.

இதன் தொடர்ச்சியாக நேற்றுமுன்தினம் ஹமா நகரில் போராட்டம் நடத்தியவர்கள் மீது நவீன துப்பாக்கி, டாங்கர்களைக் கொண்டு இராணுவம் கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தியது.

இதில் 95 பேர் பலியானதாக மனித உரிமை அமைப்பினர் தெரிவித்துள்ளனர். மேலும் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

பொதுமக்கள் போர்வையில் தீவிரவாத செயலில் ஈடுபட்டவர்கள் மீது; தாக்குதல் நடத்தப்பட்டதாக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அப்பாவி மக்கள் மீது இராணுவம் தாக்குதல் நடத்தியதாக அப்பகுதி வாழ் மக்கள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-4)

# உலகின் 2ஆவது அதியுயரமான சூரிய சக்திக் கோபுரம் அமைப்பு


உலகின் 2 ஆவது அதிஉயரமான சூரிய சக்திக் கோபுரம் அரிசோனா பாலைவனத்தில் நிறுவப்படவுள்ளது. இது சுமார் 2 ஆயிரத்து 600 அடி உயரமான புகைபோக்கியுடன் கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் சுமார் 200 மெகாவோட் மின்சாரத்தினை உற்பத்தி செய்ய முடியும்.

மேலும் இதன்மூலம் சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் வீடுகளுக்கு தேவையான மின்சாரத்தினை உருவாக்க முடியும் எனவும் விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இத்திட்டமானது என் விரோமிஷன் என்ற நிறுவனத்தினால் அமைக்கப்படவுள்ளது. இதனைக் கட்டி முடிப்பதற்கு 700 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளது. மேலும் இதன் மூலம் ஆயிரத்து 500 புதிய வேலைவாய்ப்புக்கள் உருவாகுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சூரியசக்தி, விசையாழிகள் மற்றும் உயரமான புகைபோக்கி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படவுள்ளது. இத்திட்டமானது சூழலை பாதிக்காத செயற்றிறன் வாய்ந்த சக்தி மூலம் என இதனை உருவாக்கவுள்ள நிறுவத்தினர் பெருமையுடன் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-4)





# வியட்நாமில் பீரங்கி குண்டு வெடித்து இருவர் உயிரிழப்பு

ஆசிய நாடான வியட்நாமில் பீரங்கிக் குண்டு வெடித்ததில் கடந்த சனிக்கிழமை இருவர் உயிரிழந்தனர். ஒருவர் படுகாயமடைந்தார். மத்திய குவாங்கய் மாகாணத்தில் வியட்நாம் போரின் போது பயன்படுத்தப்பட்ட வெடிக்காதகுண்டு ஒன்றை மூவர் கண்டெடுத்துள்ளனர். அந்தக் குண்டின் மருந்துக்கு மேல் உள்ள வெண்கலத் தகடை அகற்றி விற்பதற்காக குண்டின் மீது கனமான பொருளை வைத்து அடித்துள்ளனர்.

அப்போது குண்டு வெடித்துச் சிதறியுள்ளது. இதில் மூவரும் தூக்கி வீசப்பட்டனர். இருவர் சம்பவ இடத்திலேயே இறந்தனர். ஒருவரின் கால் துண்டானதோடு பலத்த காயம் அடைந்தார். அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.


இருப்பினும் அவரது நிலைமை கவலைக்கிட மாகவுள்ளதாக மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவுக்கும் வியட்நாமுக்கும் இடையே நடந்த போரில் சக்தி வாய்ந்த வெடி பொருட்களும் ஆயுதங்களும் பயன்படுத்தப் பட்டன. இதன் போது மத்திய குவாங்கய் மாகாணத்தில் ஆங்காங்கே நிலத் தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த குண்டுகள் இன்னும் அப்படியே உள்ளன. அவற்றின் பாதிப்புக்களே இவை என வியட்நாம் அரசு தெரிவித்-துள்ளது. (ஸ்ரீ-4)



ஆபிரிக்க நாடுகளான சோமாலியா, எதியோப்பியா,கென்யாவில் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. உலகின் மிகப்பெரிய அகதிகள் நிவாரண முகாமான கென்யாவில் உள்ள தாதப் முகாமில் ஒரு குழந்தை தனது பசியை நீக்க மண் சாப்பிடும் பரிதாப நிலையைப் படத்தில் காணலாம்.

# 12 மணி நேரம் வீடியோகேம் விளையாடிய இளைஞர் இரத்தம் உறைந்து பரிதாப மரணம்



இங்கிலாந்தை சேர்ந்த கிறிஷ் ஸ்டேனிபோர்த் (வயது 20) என்ற இளைஞனுக்கு வீடியோ கேம் விளையாடுவதில் அலாதி பிரியம். அதில் ஈடுபட்டால் தன்னையே மறந்து விடுவார். நேரம் போவது தெரியாமல் மணிக் கணக்கில் விளையாடுவார்.

அதுபோன்று சமீபத்தில் வெளியான மரதன் விளையாட்டு சம்பந்தப்பட்டவீடியோ கேம் விளையாடினார். அதைத் தொடர்ந்து விளையாடினார். பரபரப்பும் திரிலும் தொற்றிக் கொள்ளவே 12 மணி நேரம் இடைவிடாமல் விளையாடினர். அப்போது திடீரென மயங்கி விழுந்தார். உடனே அவரை மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு தீவிர சிகிச்சை அளித்தும் அவர் பலனின்றி இறந்தார். தொடர்ந்து விளையாடியதால் மூளையின் செயற்பாடு அதில் தீவிரமாக இருந்ததால் நரம்புகளில் இரத்தம் உறைவு ஏற்பட்டது. அதனால் அவர் இறந்ததாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து அந்த வீடியோ கேம் தயாரித்த தனியார் நிறுவனத்தின் மீது குற்றம் சாட்டப்பட்டது. ஆனால் அதை இறந்த கிறிஷின் தந்தை டேவிட் மறுத்துள்ளார். வீடியோ கேம் நிறுவனத்தை நான் குற்றம் சுமத்தமாட்டேன். விளையாட்டை ரசிக்காமல் தீவிரமாக அதில் தொடர்ந்து ஈடுபடுவது விளையாடுபவர்கள் செய்யும் தவறாகும். எனது மகன் போன்று இதை தொடர்ந்து விளையாடினால் அது ஆபத்தில் தான் முடியும் என்றார்.

வீடியோகேம் தயாரிப்பு நிறுவனத்தினர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இது போன்ற விளையாட்டின் மூலம் கல்வி அறிவை பரப்பி வருகின்றோம். ஆனால் விளையாடுபவர்கள் இதற்கென ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்க வேண்டும். தொடர்ந்து அதில் மூழ்கி விடக்கூடாது என விளக்கம் அளித்துள்ளனர். (ஸ்ரீ-4)

# சீனாவில் கடும் சூறாவளி; 2 இலட்சம் பேர் வெளியேற்றம்

சீனாவின் தெற்குப் பகுதியில் வீசும் கடும் சூறாவளி காரணமாக 2 இலட்சம் மக்கள் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தப் பட்டுள்ளனர்.

ஹைனனாஸ் பகுதியில் வீசும் நாக்-டென் சூறாவளி காரணமாக இப்பகுதியில் வசிக்கும் 2 இலட்சம் மக்கள் வீடுகளிலிருந்து வேறு இடங்களில் பத்திரமாக குடியமர்த்தப் பட்டுள்ளதாக வெள்ளத்தடுப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

சூறாவளியுடன் கடுமையான மழையும் பெய்து வருகிறது. இதில் ஒருவர் உயிரிழந்தார். 148 வீடுகள் சேதமடைந்தன. குயாங்ஸி ஸியாங் மாகாணங்களில் கனமழை பெய்த போதிலும் மக்கள் பாதிக்கப்படவில்லை என்று ஸின்ஹுவா செய்தி நிறுவனம் தெரிவிக்கிறது.

இதனால் கடலோரப் பகுதிகளில் கன மழை பெய்யும் என்பதோடு வியட்நாமின் வடக்குப் பகுதியிலும் கனமழை இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு சீனாவை எட்டு சூறாவளி புயல் தாக்கியுள்ளது. இதில் நாக்-டென் சூறாவளி மிகவும் வலிமையானதாகும். இந்தச் சூறாவளியின் கடுமையால் பிலிப்பைன்ஸில் 31 பேர் உயிரிழந்தனர். (ஸ்ரீ-2)



# விழிப்பாயிருங்கள் !

**பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியினால் அனுமதியளிக்கப்பட்ட நிறுவனங்கள்**

(31.07.2011 இல் உள்ளவாறு, அகரவரிசைப்படி)

## உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

1. அமானா பாங்க் லிமிடெட்
2. அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி
3. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
4. இந்தியன் பாங்க்
5. இலங்கை வங்கி
6. எம்சிபி பாங்க் லிமிடெட்
7. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
8. கபீப் பாங்க் லிமிடெட்
9. கொமர்சல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
10. சம்பத் பாங்க் பிஎல்சி
11. சிற்றி பாங்க் என்ஏ
12. செலான் பாங்க் பிஎல்சி
13. டீஎவ்சீசீ வர்தன பாங்க் லிமிடெட்
14. டொயிச் பாங்க் ஏஜி
15. நெசனல் டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
16. நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
17. கொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்
18. பப்ளிக் பாங்க் பெர்காட்
19. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
20. மக்கள் வங்கி
21. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி
22. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா
23. ஸ்ராண்டட் சார்ட்டட் பாங்க்

## உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

1. அரச ஈட்டு முதலீட்டு வங்கி
2. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
3. எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
4. சணச டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்
5. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
6. டிஎவ்சீசீ பாங்க்
7. தேசிய சேமிப்பு வங்கி
8. பிரதேசிய சன்வர்த்தன பாங்க்
9. லங்காபுத்திர டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்

## பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்

1. அபான்ஸ் பினான்சியல் சேர்விசஸ் லிமிடெட்
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. அசோசியேட்ரட் மோட்டார் பினான்ஸ் கம்பனி லிமிடெட்
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5. இன்டஸ்றியல் பினான்ஸ் லிமிடெட் (*)
6. எதிரிசிங்க ரஸ்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
7. எல்பீ பினான்ஸ் பிஎல்சி
8. ஏசியன் பினான்ஸ் லிமிடெட்
9. ஏசியா கொமர்ஸ் லிமிடெட்
10. ஏஎம்டபிள்யூ கபிட்டல் லீசிங் லிமிடெட்
11. ஏசியா அசெற் பினான்ஸ் லிமிடெட்
12. கப்பிட்டல் அலயன்ஸ் பினான்ஸ் லிமிடெட்
13. கன்றிச் பினான்ஸ் லிமிடெட்
14. கிராமின் மைக்ரோ கிறடிற் கம்பனி லிமிடெட்
15. கொமர்சல் கிறடிட் பிஎல்சி
16. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
17. சிலோவ் பினான்ஸ் லிமிடெட்
18. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி
19. சிற்றிசன்ஸ் டிவலொப்மன்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
20. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் லிமிடெட்
21. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
22. செங்கடகல பினான்ஸ் கம்பனி பிஎல்சி
23. சொவ்றலொயிக் பினான்ஸ் பிஎல்சி
24. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
25. த பினான்ஸ் அன்ட் கரண்டி கம்பனி லிமிடெட் (*)
26. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
27. த மல்டி பினான்ஸ் கம்பனி லிமிடெட்
28. த ஸ்ராண்டட் கிறடிற் லங்கா லிமிடெட் (*)
29. நந்தா இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
30. பார்ட்லீட் பினான்ஸ் லிமிடெட்
31. பிம்புத் லங்கா இன்வெஸ்மன்ட் லிமிடெட்
32. பீப்பிள்ஸ் லீசிங் பினான்ஸ் பிஎல்சி
33. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
34. மர்ச்சன்ட் கிறடிற் ஒப் சிறிலங்கா லிமிடெட்
35. ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்
36. லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் கம்பனி லிமிடெட்
37. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி
38. ஸ்வர்ணமகால் பினான்சஷியல் ஸர்விஸஸ் லிமிடெட்

(*) இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவ முகவர்களால் முகாமைத்துவம் செய்யப்படுகின்றன.

### நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய விடயங்கள்

- மேற் கூறப்பட்ட நிறுவனங்கள் அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளை மதிநுட்பமாக நடாத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் பொதுமக்களின் வைப்புக்களைப் பாதுகாப்பதற்காக மத்திய வங்கிக்கு அவற்றை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், வைப்புக்களுக்கு உத்தரவாதம் அளிக்கவோ அல்லது இதில் ஏதாவதொரு நிறுவனம் ஒருபோதும் முறிவடையாது என்று உறுதிப்படுத்தவோ சட்டரீதியான அதிகாரம் மத்திய வங்கியிடம் கிடையாது. மத்திய வங்கி, அதனால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு வங்கி அல்லது ஒரு நிதிக் கம்பனி முறிவடையுமிடத்து வைப்பாளர் ஒருவருக்கு அவரின் மொத்த வைப்புக்களின் தொகையில் உயர்ந்த பட்சம் ரூபா 200,000 கொண்ட தொகையினை 2012 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் மீள்கொடுப்பனவு செய்யப்படுவதற்கு உத்தரவாதம் அளிப்பதற்காக வைப்புக் காப்புறுதி திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஏதாவதொரு நிறுவனமொன்றில் பணத்தை வைப்பிலிடும்போது தயவுசெய்து உங்கள் வைப்புக்களின் பாதுகாப்பு தொடர்பாக அதிக கவனம் செலுத்தல் வேண்டும்.
- ஒழுங்குபடுத்தப்படாத மற்றும்/ அல்லது மேற்பார்வை செய்யப்படாத நிறுவனங்களில் வைப்புக்களை மேற்கொள்வதன்மூலம் அவற்றிற்கு இரையாகாமல் உங்களுடைய கடின உழைப்பால் பெற்ற பணத்தை பாதுகாக்கும்படி பொதுமக்கள் வலிமையாக அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**இலங்கை மத்திய வங்கி**

தொ.பேசி.: 2477100, 2477105, 2477120, 2477129 தொ.நகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk

தொ.பேசி.: 2477500, 2477504 தொ.நகல்: 2477738, மின்னஞ்சல்: secdsnbfi@cbsl.lk

CENTRAL BANK OF SRI LANKA 60 growth & stability 1950 - 2010

# இலங்கை யுத்தக்குற்றவாளி கனடாவிலிருந்து மாயம்

கனடாவில் மறைந்து வாழ்ந்த 30 யுத்தக்குற்ற சந்தேக நபர்கள் பட்டியலில் இடம் பெற்றிருந்த இலங்கை குத்துச்சண்டை வீரர் ஒருவர் தற்போது கனடாவில் இல்லையென கனேடிய எல்லை சேவை முகவரகம் அறிவித்துள்ளது.

விக்டோரியாவில் கடந்த 1994 ஆம் ஆண்டு நடந்த பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் குத்துச் சண்டையில் பங்குபற்ற வந்த இளந்தாரி தேவாகே குலதுங்க முதலாவது போட்டியில் தோல்வி கண்ட பின் காணாமல் போய் விட்டார்.

றொறன்ரோவில் இவர் இருப்பதை கண்டுபிடித்த கனேடிய அகதிகள் குடிவரவு சபை இவர் மனித குலத்துக்கு எதிராக குற்றங்களை அதாவது சித்திரவதை, பொதுமக்களை கொலை செய்தமை தொடர்பில் இலங்கையில் தேடப்பட்டு வருவதாக தெரிவித்தது.

எனினும் இலங்கையரான குலதுங்க கனடாவில் தற்போது இல்லை என கனேடிய எல்லை பாதுகாப்பு முகவரகம் கூறியதை கனேடிய அரசாங்கமும் உறுதி செய்துள்ளது.

கனேடிய சமஷ்டி அரசு ஜூலை 31 இல் 30 யுத்தக்குற்ற சந்தேக நபர்களின் பெயர்களை வெளியிட்டது.

கனடாவில் சட்டத்துக்கு மாறாக வாழ்வோருக்கு நாம் ஒரு செய்தியை உறுதியாக கூறுகின்றோம். இவர்களை கனடாவிலிருந்து வெளியேற்றும் முயற்சியில் நாம் பின்னடையமாட்டோம் என கனேடிய பொது பாதுகாப்பு அமைச்சர் கூறினார். (ஸ்ரீ-2)

# போலி ஆவணம்மூலம் இந்தியாவிலிருந்து இலங்கைவர முயன்றநபர் கைது

தூத்துக்குடியிலிருந்து போலி ஆவணம் மூலம் கப்பலில் இலங்கைவர முயன்ற இளைஞர் கைது செய்யப்பட்டார்.

இலங்கையைச் சேர்ந்த வைகுந்தன் என்பவர் 2009 இல் குடும்பத்துடன் சென்னை வந்து நீலாங்கரையில் வசித்து வருகிறார். மேலும் தன்னை அவர் இலங்கை அகதி என பதிவு செய்து கொண்டுள்ளார்.

இவருக்கு கட்டார் நாட்டில் வேலை கிடைத்ததைத் தொடர்ந்து இலங்கை யினூடாக அங்கு செல்ல முடிவெடுத்தார். இதற்காக கடந்த வெள்ளிக்கிழமை மாலை கொழும்புக்கு பயணிகள் கப்பலில் செல்ல, தூத்துக்குடி வ.இ.சி துறைமுகம் வந்தார். இதன்போது அவரின் கடவுச்சீட்டு உள்ளிட்ட ஆவணங்களை அதிகாரிகள் சரி பார்த்தனர்.

அதில் சந்தேகம் ஏற்படவே விசாரணை நடத்தினர். இதன்போது விருதுநகர் மாவட்ட பொலிஸ் குற்றப்பதிவேடு ஆவண காப்பகத்திலிருந்து வழங்கப்பட்டதாக் கூறி போலி தடையில்லா சான்றிதழ், போலி இருப்பிடச் சான்றிதழை இவர் வைத்திருந்தது தெரியவந்தது.

இது குறித்து குடியுரிமைப் பிரிவு அதிகாரி ஜெயச்சந்திரன், தெர்மல் நகர் பொலிஸில் புகார் செய்தார். இதையடுத்து, போலி ஆவணம்மூலம் இலங்கைவர முயன்ற வைகுந்தனை பொலிஸார் கைது செய்ததோடு போலி சான்றிதழ்களைத் தயாரித்து கொடுத்தவர்கள் குறித்து அவரிடம் விசாரணை நடத்தி வருகிறார்கள். (ஸ்ரீ-4)

# அலிஓடை கிராமமக்கள் சொந்த இடங்களில் மீள்குடியேற்றம்

(மட்டக்களப்பு)

நாட்டில் நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்த குடும்பிமலை கிராம சேவகர் பிரிவின் அலிஓடை கிராமமக்கள் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

சந்திவெளி கலாசார மண்டபத்தில் இவர்களது பெயர்கள் பதிவு செய்யப்பட்டதன் பின்பு 37 குடும்பங்களைச் சேர்ந்த 212 பேர் இவ்வாறு குடியமர்த்தப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

அலிஓடை பகுதியில் வெடிபொருட்களை அகற்றும் பணிகள் தாமதமானதால் மீள்குடியேற்ற பணிகள் தாமதமானதாக தெரிவிக்கப்படுகிறது.

அலிஓடை பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து வந்தாறுமூலை மற்றும் சித்தாண்டி உள்ளிட்ட பகுதிகளில் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் வீடுகளில் இதுவரை இவர்கள் தங்கியிருந்தனர்.

இவ்வாறு மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள மக்களுக்கு சமையல் பாத்திரங்கள் மற்றும் ஆறு மாதங்களுக்கு தேவையான உலர் உணவுப் பொருட்கள் என்பனவற்றை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

# சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைக்க மேலும் இரு நாட்கள் கால அவகாசம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருப்போர் ஆயுதங்களை ஒப்படைப்பதற்கு மேலும் இரண்டு நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைப்பதற்கு வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் நேற்று முன்தினத்துடன் நிறைவடைந்திருந்தது. எனினும், குறித்த காலப்பகுதியில் மிகவும் சொற்ப அளவிலான ஆயுதங்களே ஒப்படைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

எனவே ஆயுதங்களை ஒப்படைப்பதற்கு துணை இராணுவக் குழுக்கள் உள்ளிட்ட அமைப்புக்களுக்கு மேலும் இரண்டுநாள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக கிழக்கு கட்டளைத் தளபதி பொனிபஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஆயுதங்களை ஒப்படைக்கத் தவறியோருக்கு மேலும் ஓர் சந்தர்ப்பம் வழங்கும் நோக்கில் இந்த மேலதிக கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த கால அவகாசத்தின் பின்னர் கிழக்கு மாகாணம் முழுவதிலும் பாரியளவில் தேடுதல் வேட்டைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-4)

நிதானமாக ஆலோசியுங்கள்.
ஆனால் துணிவுடன் செயல்படுங்கள்.
- சார்லஸ் கோல்ட்டன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## இடமாற்ற விடயங்களில் நிதானமாகச் செயற்பட வேண்டும்

வடக்கு மாகாண சபையில் உள்ள அமைச்சுக்களின் செயலாளர்களின் இடம்மாற்றம் தொடர்பான செய்திகள் வடபகுதி மக்களிடையே குழப்பங்களை ஏற்படுத்தி வருகின்றன.

எழுத்து மூலமான இடமாற்றங்கள் வழங்கப்படவில்லை ஆயினும் இடமாற்றம் தொடர்பில் ஊடகங்களில் வெளிவருகின்ற செய்திகள் குழப்பம் தருவனவாக இருப்பதை ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

அந்த வகையில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவனை ஆளுநரின் செயலாளராக நியமித்தல் என்ற செய்தி கல்விப்புலத்தில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதெனலாம்.

தற்போது வடபுலத்தில் பாடசாலைகளின் புனரமைப்பு முதல் பல்வேறு செயற்றிட்டங்கள் நடைமுறையில் உள்ளன.

இத்திட்டங்களை விரைவாகச் செய்து முடிக்க வேண்டிய கடப்பாடும் கல்விச் சமூகத்திற்கு உண்டு.

இந்நிலையில் வட பகுதியின் கல்விப்புலம் பற்றிய ஆழமான அனுபவத்தைக் கொண்டுள்ள செயலாளர் இளங்கோவனை சடுதியாக வட மாகாணக் கல்வி அமைச்சில் இருந்து இடமாற்றம் செய்யும்போது, அதனால் வடபுலத்துப் பாடசாலைகளின் அபிவிருத்திப் பணியின் தொடர்ச்சியான செயற்பாட்டில் ஓர் இடைவெளி ஏற்படவே செய்யும்.

பாடசாலைகளின் அபிவிருத்தி என்பது தொடர்ச்சியானதும் எக்காலத்திற்கும் உரியது என்ற கருத்துக்கு மாற்றுக் கருத்து இல்லை.

ஆனால், வடபகுதியின் சமகால நிலை என்பது வித்தியாசமானது.

வன்னிப் பாடசாலைகளை எடுத்துக் கொண்டால், அங்கு புதிதாகக் கட்டிடம் அமைத்து புதிய தளபாடங்களை வழங்கி புதிதாகப் பாடசாலையை ஆரம்பிக்கின்ற நிலைப்பாடே காணப்படுகின்றது.

எனவே இத்தகையதோர் அசாதாரண சூழ்நிலையில் பாடசாலைகளில் மீள்கட்டுமானப் பணிகளை சிறப்பாக முன்னெடுத்த வடக்கு கல்வி அமைச்சின் செயலாளரை இடமாற்றம் செய்வதென்பது எவ்வகையிலும் பொருத்தமானதல்ல.

அதேபோல் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக இருக்கின்ற ரவீந்திரன், வடபகுதியின் சுகாதாரப் பணிகளை முன்னெடுப்பதில் சிறப்பாகச் செயலாற்றுபவர் என்ற நன்மதிப்பைக் கொண்டவர்.

இவரை இடமாற்றம் செய்து அவரின் இடத்திற்கு தென்பகுதியைச் சேர்ந்த ஒருவரை செயலாளராக நியமிப்பது பொருத்தமல்ல.

ஆக, வடக்கு மாகாண சபைக்கான தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இல்லாத நிலையில் அமைச்சுகளின் அனுபவம் மிக்க செயலாளர்களை இடமாற்றம் செய்வதன் மூலம் நேர்க்கணிய விளைவுகளைப் பெற முடியாது என்பதால் இதுவிடயங்களில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலையிட்டு நிலைமைகளைச் சரிப்படுத்த வேண்டும் என்பதுடன் வடக்கு மாகாணத்தில் வடபகுதியைச் சேர்ந்தவர்களே உயர் பதவிகளில் இருக்கக் கூடியதான திட்டங்களையும் செயற்படுத்த வேண்டும் என்பது பொதுவான கோரிக்கையாகும்.

# தமிழர்களுக்கு எதிரான போர்க்குற்றவாளிகளை சர்வதேச நீதிமன்றில் தண்டிக்க வேண்டும்

## தி.மு.க. வலியுறுத்தல்

ஐ.நா. விசாரணைக்குழு அறிக்கையில் தெரிவித்துள்ளபடி இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான போர்க்குற்றவாளிகளை சர்வதேச நீதிமன்றத்தில் தண்டிக்க நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று அனைத்து கட்சி கூட்டத்தில் தி.மு.க. வலியுறுத்தியுள்ளது.

நாடாளுமன்ற கூட்டத் தொடரை சுமுகமாக நடத்துவது குறித்து விவாதிக்க மக்களவை தலைவர் சபாநாயகர் மீரா குமார் தலைமையில் அனைத்து கட்சி கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய தி.மு.க. நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர். பாலு இலங்கை தமிழர் பிரச்சினையில் அந்நாட்டு இராணுவம் ஈவிரக்கமற்ற முறையில் கொடுமையாக நடந்து கொண்டுள்ளது. இலங்கை தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட போர்க்குற்றங்கள் பற்றி ஐ.நா. விசாரணைக்குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐ.நா. அறிக்கையின்படி போர்க்குற்றங்கள் புரிந்தவர்கள் மீது சர்வதேச நீதிமன்றத்தில் தண்டிக்க நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் துன்புறுத்தப்படுவதை தடுக்க நிரந்தர தீர்வு காண வேண்டும். கச்சதீவை மீட்பதற்கான நடவடிக்கைகள் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட வேண்டும் என்றார். (ஸ்ரீ-4)

# நாடளாவிய ரீதியாக டெங்கு நோயின் தாக்கம் தீவிரம்

## சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கடந்த மாதம் அதிக எண்ணிக்கையான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி 3 ஆயிரத்து 697 பேர் வரை கடுமையான டெங்கு தொற்றுக்கு உள்ளான நிலையில் இனங்காணப்பட்டனர்.

இது தவிர கடந்த ஜனவரி மாதம் 13 ஆயிரத்து 975 நோயாளர்கள் இனங்காணப்பட்டதோடு சிகிச்சை பலனின்றி 112 மரணங்களும் சம்பவித்ததாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்திலேயே அதிக அளவில் டெங்கு தொற்று தாக்கம் நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கொழும்பு மாவட்டத்தில் இந்த வருடம் இதுவரை 5 ஆயிரத்து 454 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் 51 மரணங்களும் இடம்பெற்றன.

கம்பஹா மாவட்டத்தில் அந்த தொகை 2 ஆயிரத்து 31 ஆக காணப்படுகிறது.

மரண எண்ணிக்கையும் 16 என தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

அத்துடன் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் 651 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டனர்.

இதன்போது 9 மரணங்கள் சம்பவித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## அநுராதபுரம் வைத்தியசாலையின் வைத்தியர்கள் தொழிற்சங்க நடவடிக்கை

அநுராதபுரம் வைத்தியசாலையின் வைத்தியர்கள் தொழிற்சங்க நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

வைத்தியசாலையின் கட்டடத் தொகுதியில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும் என வலியுறுத்தி இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் டாக்டர் உபுல் குணசேகர தெரிவித்தார்.

குறித்த கட்டடத் தொகுதியில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாக கடந்த ஜனவரி மாதம் முதல் சுகாதார அமைச்சிற்கு அறிவித்து வருகின்ற போதிலும் இதுவரையில் எவ்வித தீர்வும் பெற்றுக் கொடுக்கவில்லை என அவர் தெரிவித்தார்.

குறித்த வைத்தியசாலையின் வைத்தியர்கள் சுட்டிக்காட்டுகின்ற பிரச்சினைகள் தொடர்பாக பிரதி சுகாதார அமைச்சர் லலித் திஸாநாயக்க தெரிவிக்கையில்,

இந்தப் பிரச்சினை தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார். (ஸ்ரீ-4)

## குற்றச்செயல்களுடன் தொடர்புடையோரை உடன் கைது செய்யுமாறு உத்தரவு

(கொழும்பு)

எந்தவொரு குற்றச்சாட்டுக்கள் இடம்பெற்றாலும் அதனுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைது செய்வதற்கு தாமதிக்க வேண்டாமென பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்ககோன் பொலிஸ் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

அவ்வாறு சந்தேக நபர்களை உடனடியாக கைது செய்வதனூடாக குற்றங்கள் அதிகரிப்பதனை குறைக்க முடியுமென சுட்டிக்காட்டிய அவர் குற்றவாளிகள் நீண்டகாலம் மறைந்து சுதந்திரமாக நடமாடுகின்றமையே குற்றங்களை அதிகரிப்பதற்கான முக்கிய காரணமென தெரிவித்துள்ளார்.

அதேபோன்று குற்றங்களை குறைப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறு ஆலோசனை வழங்கியுள்ள பொலிஸ்மா அதிபர் விசேடமாக இரவு வேளைகளில் நடமாடும் சேவைகளை நடத்துவதற்கும் அதிகாரிகளுக்கு வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

## புலமைப்பரிசில் கருத்தரங்கு

(கோப்பாய்)

கோப்பாய் கோட்ட பாடசாலைகளில் அணிய ரீதியாக எதிர்வரும் 8.9.10 ஆகிய திகதிகளில் தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை கருத்தரங்கு நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்தோடு இலவசமாக இதற்கான கையேடுகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கோட்டக்கல்விப் பணிப்பாளர் வே.பால சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### இயற்கையுடன் போர் செய்



இடையறாத முயற்சியின் மூலம் நம்மை நாடி வரும் கஷ்டங்களை வெல்ல முடியும். நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். உன்னை வலிமை உள்ளவனாக நினைத்தால் வலிமை படைத்தவனாகிறாய்.

வாழ்க்கையில் கீழ்ப்படிவதற்கு கற்றுக் கொள். கட்டளையிடும் பதவி தானாக உன்னை வந்த டையும்.

அடக்கப்படாத மனம் நம்மைக் கீழ் நோக்கியே இழுத்துச் செல்லும். அடக்கப்பட்ட மனம் நமக்குப் பாதுகாப்பளிப்பதுடன் விடுதலையும் தரும்.

அளவற்ற ஆற்றல், பெரும் ஊக்கம், அளவு கடந்த அஞ்சாமை, அளவில்லாத பொறுமை ஆகியவை நமக்குத் தேவை.

இயற்கையை எதிர்த்துப் போராடி வரவேண்டும். இயற்கையோடு எப்போதும் போர் செய்வதே மனித முன்னேற்றத்தின் படிக்கற்களாகும்.

இரக்கத்தால் பிறருக்கு நன்மை செய்வது நல்லது. ஆனால் ஈசனது படைப்பானது அனைத்து உயிர்களுக்கும் பணி செய்தல் மிக நன்றாகும்.

மனித வடிவம் கொண்ட ஒவ்வொரு உயிரையும் வழிபடுங்கள். இறைவனை அனைத்து வடிவத்திலும் வழிபடுவதே நன்மை பெற நல்ல வழியாகும்.

# யாழ்ப்பாண தேர்தல் மாவட்டமும் குறைந்து வரும் பாராளுமன்ற பிரதிநிதித்துவமும்



பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை Ph.D.Durham
முன்னாள் துணைவேந்தர், வாழ்நாள் பேராசிரியர்.

*வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட இக் கட்டுரை வலம்புரியில் 04.06.2011 அன்று வெளியாகி இருந்தது.*

*யாழ். மாவட்டத்திற்கான பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்ட நிலையில் அது தொடர்பான விளக்கத்தைத் தரும் இக் கட்டுரையின் முக்கியத்துவம் கருதி மீள்பிரசுரம் செய்யப்படுகின்றது. (ஆ-ர்)*

கட்டுரை விரிவாக்கம் பெற்று மீள் பிரசுரமாகிறது.

பாராளுமன்றத்தில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தின் பிரதிநிதித்துவம் படிப்படியாக குறைந்து வருவதும், இதனால் இம்மாவட்டத்தின் முக்கியத்துவம் கரைந்து செல்வதும் மற்றும் பல்வேறு தகுதிகளை இழக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளதும் பெரும் கவலைதரும் நிலையாக இருக்கின்றது. கடந்த மூன்று தசாபதங்களாக இடம்பெற்ற யுத்தத்தாலும், பொருளாதாரம் சுருக்கமடைந்ததாலும், சமூகத்தளம்பலாலும் பெரும் எண்ணிக்கையான மக்கள் இம் மாவட்டத்தைவிட்டு பல நாடுகளுக்கும், உள்நாட்டில் பிரதானமாக பெரிய கொழும்பு பகுதிக்கும் இடம்பெயர்ந்தனர். வெளிநாட்டு/உள்நாட்டு இடப்பெயர்வுகளாலும் மேலும் யுத்தத்தினால் ஏற்பட்ட காலத்துக்கு முந்திய மரணங்களா லும்மக்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையினர் முழுமையாக தங்களை வாக்காளராகத் பதியாமல் விட்டதாலும் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தின் வாக்காளர் எண்ணிக்கையில் பெரு வீழ்ச்சி கண்டுள்ளது. இதன் விளைவாக மாவட்டத்தின் பாராளுமன்றப் பிரதிநிதிகள் எண்ணிக்கையில் பெருவீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம் என்னும் பொழுது இன்று யாழ்ப்பாணம், கிளிநொச்சி நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கியதாகும். மேலும் முன்னைய தேர்தல் தொகுதி களான ஊர்காவற்றுறை, வட்டுக் கோட்டை, மானிப்பாய், காங்கேசன்துறை, யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய, உடுப்பிட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கிளிநொச்சி ஆகியவற்றை உள்ளடக்கியது. இவ் முன்னைய பாராளு மனறத் தொகுதிகள் இன்று தேர்தல் நிர வாகத்திற்காக வாக்களிப்புப் பிரிவுகளாகச் செயற்படுகின்றன.

2010ஆம் ஆண்டிற்குரிய வாக்காளர் பட்டியற்படி யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம் 484791 வாக்காளர்களைக் கொண்டுள்ளது. இத்தொகை 2009 ஆம் ஆண்டு இருந்த வாக்காளர் எண்ணிக்கையிலும் பார்க்க 331214 வாக காளர்களைக் குறைவாகக் கொண்டுள்ளது. சில குறித்த ஆண்டுகளில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் இருந்த வாக்காளர் எண்ணிக்கைகள் கீழ்த் தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | எண்ணிக்கை |
|---|---|
| 1963 | 337174 |
| 1986 | 580798 |
| 1995 | 596373 |
| 2008 | 721359 |
| 2009 | 816005 |
| 2010 | 484791 |

இலங்கையில் 1946 (L.M.de silva)தேர்தல் நிர்ணய ஆணைக்குழு 1959 (W.Thalgodapitiya) தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக்குழு 1976 Noel Tittawella (தேர்தல் நிர்ணய ஆணைக்குழு)ஆகிய ஆண்டுகளில் இடம்பெற்ற தேர்தல் தொகுதி நிர்ணயங்கள் மக்கள் தொகை (1946 இலும் 1959இலும 75000 மக்களுக்கு ஒரு அங்கத்தவர் பின்னர் 1976 இல் 90000 மக்களுக்கு ஒரு அங்கத்தவர்) பரப்பு அடிப்படையில் (1000 சதுர மைலுக்கு ஒரு அங்கத்தவர் என்ற அடிப்படையிலும் தொகுதி நிாணயம் இடம்பெற்றதுடன் மீள்தொகுதி நிரணயம் செய்யும்வரை பிரதிநிதி களின் எண்ணிக்கையில் மாற்றம் இருக்காது.

1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இரண்டாவது குடியரசு யாப்பின் புலத்தில் 1981 இல் G.P.A Silva தொகுதி நிர்ணயத்தின் படி 22 தேர்தல் மாவட்டங்கள் உருவாக்கப்பட்டன. இதில் வாக்காளர் எண்ணிக்கையில் 160 அங்கத்தவர்களும் மாகாண/மாவட்ட ஒதுக்கீட்டு அடிப்படையில் (4x9=36) அங்கத்தவர்களும் (அட்டவணை2) ஆக 196 அங்கத்தவர்கள் கொண்ட பாராளுமன்றம் உருவாக்கப் பட்டது. இவ் அடிப்படையில் தேர்தல் ஒன்றும் இடம்பெறவில்லை. 1988 ஆம் ஆண்டு Heevi Rodrigo ஆணைக் குழுவின் சிபார்சில் 22 தேர்தல் மாவட்டங்களும் 10 இற்கு மேற்பட்ட அங்கத்தவா களை தெரிவு மாவட்டங்களை வலயங்களாகவும் பிரிக்கப்பட்டன. கொழும்பு தேர்தல் மாவட்டம் 3 வலயங்களாகவும் ஏனைய பெரிய மாவட்டங்கள் இரண்டு வலயங்களாக பிரிக்கப்படடு மொத்தமாக 15 வலயங்கள் உருவாக்கபபட்டன. எனினும் இத்திட்டம் கைவிடப்பட்டு தேசியப பட்டியல் முறை அறிமு கப்படுத்தப்பட்டும் மேலதிகமாக 29 அங்கத்தவர்கள் சேர்க்கப்பட்டு பாராளு மன்றத்தில் மொத்த அங் கத தவர் எண்ணிக்கை 225 ஆக அதிக ரிக்கப்பட்டது. தகுதி காண்வெட்டுப புள்ளி ஆரம்பத்தில் 12.5% இருந்தது. பின்னர் இவ் வெட்டுப் புள்ளி விகிதம் 5% குறைக்கப்பட்டது. மொத்தம் 225 அங்கத்தவர்களில் 196 பேர் தொகுதிவாரியாகத் தெரிவு செய்யப்படுவர். 29 பேர் தேசிய ரீதியில கட்சிகள் பெற்ற வாக்குகள் வாக்கு அடிப்படையில் கட்சிகளால் நியமிக்கப்படுவர்.

160 பாராளுமன்ற பிரதிநிதித்துவம் 22 தேர்தல் மாவட்டங்களுக்கு வாக்காளர் எண்ணிக்கை அடிப்படையில் பகிரப்படுகின்றன. மொத்த அங்கத்தவர் எண்ணிக்கையில் (160) இல் மாற்றம் ஏற்படாது.வருடா வருடம் மாவட்ட வாக்காளர் எண் ணிக்கை மாற்றங்களின் அடிபபடையில் 22 தொகுதிகளிலிருந்து தெரிவு செயயப்பட வேண்டிய அங்கத்தவர் எண்ணிக்கை வருடா வருடம் ஒதுக்கப்படும். மாவட்டங்களின் வாக்காளர் எண்ணிக்கையில் மாற்றங்கள் ஏற்படும் போது அங்கத்தவர் எண்ணிக்கை கூடலாம் அல்லது குறையலாம் என்பது முக்கியமானதாகும். மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட ஒதுக்கப்பட்ட அங்கத்தவர் (36) எண்ணிக்கையில் மாற்றம் இருக்காது.

### வாக்காளர் எண்ணிக்கையின் திடீர்க்குறைவு:

2010ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் 2009இல் இருந்த 331214 வாக்காளர்கள் நீக்கப்பட்டதற்குக் காரணம் என்ன? 1990 ஆம் ஆண்டுகளிலும், 2000 ஆம் ஆண்டுகளிலும் யுத்தம், இடமபெயர்வுகளையும் இடப்பெயர்வுக ளையும கருத்திற் கொண்டு வாக்காளர் பட்டியலில் உள்ளவர்களை நீக்காது, புதிய பதிவுகளை உள்வாங்கித் தயாரிததனர். இதனால் இடம் பெயர்ந்தவர்கள், மரணித்த வர்கள் தொடர்ச்சியாக வாக்காளர் பட்டியலில் இருந்து வந்தனர். (புதன் வளரும்)

**தேர்தல்தொகுதி /வாக்களிப்புப் பிரிவுகள் அடிப்படையில் 1963ஆம் ஆண்டு– 1986ஆம் ஆண்டு– 2010 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியல் விபரங்களும் மற்றும் வேறுபாடுகள் எண்ணிக்கையிலும் விகிதத்திலும் கீழே தரப்படுகின்றன.**

| | | ஆண்டு | | | |
|---|---|---|---|---|---|
| தேர்தல்தொகுதி | 1963 | 1986 | 2010 | 1986 – 2010 வேறுபாடு எண்ணிக்கை | விகிதம் |
| ஊர்காவற்றுறை | 31785 | 49081 | 21459 | -27622 | -56.2 |
| வட்டுக்கோட்டை | 36935 | 54896 | 44196 | -10700 | -19.5 |
| காங்கேசன்துறை | 35309 | 60214 | 67898 | +7684 | +12.8 |
| உடுவில்/மானிப்பாய் | 33280 | 58320 | 49280 | -9040 | -15.5 |
| யாழ்ப்பாணம் | 28473 | 48016 | 30308 | -17700 | -36.9 |
| நல்லூர் | 31864 | 59004 | 40938 | -18066 | -30.6 |
| கோப்பாய் | 33091 | 56450 | 50653 | -57971 | -18.3 |
| உடுப்பிட்டி | 34275 | 51509 | 37239 | -14270 | -27.7 |
| பருத்தித்துறை | 22972 | 39549 | 33511 | -6030 | -15.3 |
| சாவகச்சேரி | 30452 | 50428 | 48002 | -2426 | -4.8 |
| கிளிநொச்சி | 18738 | 53331 | 61217 | +7886 | +14.8 |

| தேர்தல் மாவட்டம் | ஒதுக்கப்பட்ட ஆசனங்கள் | | தேர்தல் மாவட்டம் | ஒதுக்கப்பட்ட ஆசனங்கள் | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | 2 | | மட்டக்களப்பு | 1 | |
| ஹம்பகா | 1 | மேல் மாகாணம் | திகாமடுல்லை | 2 | கிழக்கு மாகாணம் |
| கழுத்துறை | 1 | | திருகோணமலை | 1 | |
| கண்டி | 1 | | புத்தளம் | 2 | வடமேல் மாகாணம் |
| மாத்தளை | 1 | மத்திய மாகாணம் | குருநாகலை | 2 | |
| நுவரெலியா | 2 | | அநுராதபுரம் | 2 | வடமத்திய மாகாணம் |
| காலி | 1 | | பொலநறுவை | 2 | |
| மாத்தறை | 1 | தென் மாகாணம் | பதுளை | 2 | ஊவா மாகாணம் |
| அம்பாந்தோட்டை | 2 | | மொனராகலை | 2 | |
| யாழ்ப்பாணம் (கிளிநொச்சி) | 1 | வட மாகாணம | இரத்தினபுரி | 2 | சப்ரகமுவ மாகாணம் |
| வன்னி (மன்னார், வவுனியா, முல்லைத்தீவு) | 3 | | கேகாலை | 2 | |

# நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்ட பரீட்சார்த்திகள்

### யாழ்ப்பாண மாவட்டம்

**நேர்முகப்பரீட்சை நேரம் மு.ப.9.00 மணி**

கி.கோபாலகிருஷ்ணன்-திருநெல்வேலி, ஆ.கோகுலன்- ஊர்எழு கிழக்கு, வா.கணேசானந்தம்-துன்னாலை, இ.செந்தில்மாறன்-நாவலர் வீதி, ச.தர்சினி-திருநெல்வேலி வடக்கு, பா.தங்கவேலு-தும்பளை, இ.சர்மிலா-ஐயனார் கோவிலடி, யாழ்ப்பாணம், பி.தர்ஷினி-தும்பளை, சு.மயூரன் -உரும்பிராய், பு.தங்கவேலாயும்-சங்கானை, பா.முகுந்தன்-இமையாணன் கிழக்கு, சி.ரஜீவ்-நீர்வேலி வடக்கு, வ.அமிர்தலிங்கம்-நாரந்தனை வடக்கு,

நி.சிங்கராஜா-தாவடி தெற்கு, த.பரராஜசிங்கம்-நீர்வேலி வடக்கு, பா.உபேன்ரா-கந்தர்மடம், ஞா.தேவராசா-கோப்பாய் தெற்கு, ப.பஞ்சலிங்கம்-யாழ்ப்பாணம், சி.ரகேகன்-கொக்குவில் கிழக்கு, கி.டிலோஜனா-கல்வித்திணைக்களம், வடமாகாணம், அ.பிரியதர்சினி-மல்லாகம், சி.துரைசிங்கம்-சுன்னாகம் தெற்கு, ப.ரூபேந்திரன்-சுண்டுக்குளி,

பா.சிவநந்தினி-கொக்குவில், ஞா.ஞானசம்பந்தன்-புத்தூர் கிழக்கு, சி.கந்தசாமி-யாழ்ப்பாணம், கே.ஆனிதா-சுழிபுரம், ர.ராமதாஸ்-வல்வெட்டித்துறை, சு.கலைவினோதன்-சாவகச்சேரி, த.மருதராஜன்-மானிப்பாய், ச.ரட்ணசிங்கம்-அளவெட்டி வடக்கு, சு.நல்லையா - சங்கானை, செ.மாலதி-இளவாலை, பி.வேலாயுதம்........., த.ஆர்த்தி-யாழ்ப்பாணம், கு.வீரசிங்கம்-சங்கானை, க.லோகேஸ்வரன்-நீர்வேலி வடக்கு,

கி.அருந்தவராஜ்-புதுக்குடியிருப்பு, ஞா.கயூரன்-யாழ்ப்பாணம், அ.செந்தூரன்-உடுவில் கிழக்கு, த.பசுபதி-பருத்தித்துறை, க.மணிமாறன்-சுதுமலை வடக்கு , சி.பிரணவசொரூபி-சுன்னாகம், பா.பத்மநாபன்-ஆனைக்கோட்டை, இ.சிவகரன்-உள்ளூராட்சி அமைச்சு வடமாகாணம், க.நித்தியா-வரணி, உ.இராஜரட்ணம்-கரவெட்டி, மா.சுபாகரன்-திருகோணமலை, க.சிவரஞ்சினி-புலோலி தெற்கு, மா.ஜெனிற்றா-சுழிபுரம்,பா.சின்னையா-கரவெட்டி, நா.ராமேஸ்வரன்-சுழிபுரம்,லோ.கி.ஆனந்-ஆனைக்கோட்டை,

யோ.நிமலன்-கொக்குவில் கிழக்கு, இ.சஞ்சீவ்-அல்வாய், பா.மயூரன்-கொக்குவில் கிழக்கு, கு.பாலமுரளி-பருத்தித்துறை, ப.தபோதினி-நவாலி வடக்கு, வை.தர்சினி-சுன்னாகம், வ.யோகநாதன்-யாழ்ப்பாணம்,

**நேர்முகப்பரீட்சை நேரம் பி.ப.1.00 மணி**

அ.சா.துளயா-திருநெல்வேலி கிழக்கு, க.கமலபாபு-வவுனியா, இ.றமணி-அல்வாய் மேற்கு, க.துஷ்யந்தினி-உடுப்பிட்டி, சி.சிறிராகுலன்-மீசாலை வடக்கு,ப.காண்டிபன்-கட்டைப்பிராய், பே.நிவேதிகா-அரியாலை, க.துளசி-நீர்வேலி, ம.சுதாகர்-பருத்தித்துறை, இ.மதன்-திருநெல்வேலி கிழக்கு, தி.இராகினி-வரணி, இ.செந்தில்-இளவாலை, கு.துஷ்யந்தி-கொக்குவில், கு.சத்தியகுமார்-பருத்தித்துறை, செ.செந்தூரன்-பிரம்படி ஒழுங்கை, அ.சிவஞானசேகரன் - நவாலி தெற்கு, வராகி-புலோலி, இ.நவரூபன்-தெல்லிப்பளை, ப.தர்மகுமாரன்-நீர்வேலி,சி.அகிலன்-கரவெட்டி, கி.கணபதிப்பிள்ளை-புத்தூர்,சி.தீபக்-பண்டத்தரிப்பு, ந.சயந்தன்-வட்டுக்கோட்டை,

ச.கோகுலதாசன்-மானிப்பாய், கோ.அன்ரோஜீகன்-யாழ்ப்பாணம்,க.பரசுதா-திருகோணமலை, ப.சேயோன்-சுன்னாகம், தெ.இதயதாரணி-நெல்லியடி,தெ.தேவசியானி-பருத்தித்துறை,தி.கஜேந்திரன்-மாதகல், ச.நி.கமலராஜன்-யாழ்ப்பாணம், அ.லி.ரஜனிகாந்-மிருசுவில், ர.பகீரதி-புலோலி தெற்கு, அ.சுரேஸ்காந்-கொடிகாமம்,

ஞா.ஆதவன்-அச்சுவேலி,ஐ.சுயெஸ்கா-யாழ்ப்பாணம், ம.குமுதினி-சுன்னாகம், இ.கந்தசாமி -வரணி,சி.சுஜீவா-யாழ்ப்பாணம், த.பிரதீபன்-சாவகச்சேரி, இ.இரகுபாலன்-வட்டுக்கோட்டை,ந.பிரதீபன்-யாழ்ப்பாணம்,சு.குலலி-கொக்குவில்,ந.வ.சர்லின்-யாழ்ப்பாணம், இ.கமலதாசன்-கரவெட்டி, சி.திலீபன்-கரவெட்டி, மோ.ராஜினி-யாழ்ப்பாணம், ர.கிரிதரன்-யாழ்ப்பாணம்,சி.இந்திரகுமார்-புலோலி, உ.சுதர்சினி-கல்வியங்காடு,கு.அற்புதுரை-வேலணை, மதுமிதா-கரவெட்டி,

வே.நித்தியகீர்த்தி-புலோலி, க.மோகனராஜ்குமார்-உடுவில் தெற்கு,சுரேகா-கோண்டாவில்,சே.அகல்யா-கந்தர்மடம், த.கீதலதா-யாழ்ப்பாணம்,வி.விஜிதன்-வவுனியா,மு.றேவதி-திருநெல்வேலி, சி.சந்திரரூபன்-அச்சுவேலி,

### மன்னார் மாவட்டம்

**நேர்முகப்பரீட்சை நேரம் மு.ப 9.00மணி**

சி.இராஜேஸ்கண்ணா-மன்னார், மொ.அ.மு.மொகமட்-அக்குனவில.

ஹ.ம.ஸஹிபு-பத்துர ஓயா, மு.நி.முகமட் அனிபா-பாலாவி, மொ.ஐ.மொ.பர்வீஜ்-புத்தளம், அ.பிரதாப்-உப்புக்குளம் வடக்கு, தி.திவாகரன்-சின்னங்கட்டை, அ.சு.மொகமட் நேரோஸ்-பாலாவி, ரி.சாகுல் ஹமீட்-சிலாவத்துறை, க.இ.அல்வின்-எருக்கலம்பிட்டி, செ.அ.அன்னை திரேசா-நானாட்டான், அ.ஜோதினி-வட்டக்கண்டல்,ச.ரவிசங்கர்-கிரான் பசார், பு.ஜீ.ஆனந்தகுமார்-எழுத்தூர்,

அ.சு.நஸ்ரினா பேகம்-பாலாவி,இ.கைலாசபதி-உப்புக்குளம், அ.ஜெ.யூ.கொ.தயாநிதி-பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,மன்னார், ஆ.மொ.ரசாளி-பள்ளிவாசல்துறை, பு.சிவகௌரி-கிரான்பாஸ், அ.சீமான்-நீர்ப்பாசனத்திணைக்களம், வடமாகாணம், கிளிநொச்சி, மொ.அ.மொ.முபாரக்-பள்ளிவாசல் துறை,ரி.மொ.முகுசீர்-சிலாபத்துறை, நி.நஸ்ருள்ளா-ஹஜிராவத்தை,அ.யா.எனில்டா-நானாட்டான்,கு.மை.கு.நிசாந்தினி-உயிலங்குளம்,

மொ.டா.மொ.நசீம்-பள்ளிவாசல் துறை, க.மொ.ஷிபான்-பாலாவி,ம.ஜெபநேசன்-மன்னார்,ப.ஜெ.ராஜ்சிறில்-மன்னார், லி.அ.லி.உர்ஹமன்-புத்தளம், அ.ஜெயசீலன்-மன்னார், மொ.க.ரம்சீன்-புத்தளம், லி.வசந்தராஜா-மன்னார்,எ.றொ.கிருசாந்தி-மன்னார்,மொ.சு.மொ.சஜீவ்-புத்தளம்,அ.மேரிசிபானி குறூஸ்-பேசாலை,பா.விஜயராஜ்-மன்னார், பி.செ.யூ.ஜெனஸ் பிரியா-மாவட்ட சிறுவர் நன்நடத்தை அலுவலகம் கச்சேரி, மன்னார்,

கு.ம.மரியகொரட்டி-வங்காலை, அ.பெ.சகாயம்-தாழ்வுப்பட்டு, வ.து.ஸ்வகீன்மதி-பேசாலை, அ.மேரி எருப்பிரஷ்யா-சிலாபத்துறை, மொ.ஜ.மொ.ஜெயசீலன்-பாலாவி, செ.சாந்தினி-கீரிமலை, நி.செபஸ்டியான்-பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை பி.றீகன் - மன்னார், ம.செல்வராஜ்-மன்னார், சி.ஜெயக்குமாரி-உப்புக்குளம்,

ஜோ.பி.செபமாலை-அடம்பன்,சி.சபேசன்-எழுத்தூர், பொ.ஜெகதீபா-மன்னார், போ.சா.டெ.பொர்சிலா-நானாட்டான், சி.சிராஜிதீன்-பாலாவி,இ.ட.ஜெயசீலன்-சிலாபத்துறை, செ.லோமா-சாவற்கட்டு,எ.வி.ட.மெ.அஸ்வினி டயஸ்-தலைமன்னார், பீ.கு.ப.லக்ஷன்-பேசாலை, ம.இராசநாயகம்-முருங்கன், அ.ஜான்சி லோகு-பேசாலை, ச.லோ.எமில்ராஜ் லோகு-சிலாபத்துறை,

### கிளிநொச்சிமாவட்டம்

**நேர்முகப் பரீட்சை நேரம் 4.00 பி.ப**

பு.நாதன்-பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் பணிமனை,கிளிநொச்சி, க.சந்திரகுமார்-திருவையாறு, த.கஜேந்திரன்-இராமநாதபுரம், செ.சதீசன்-மீசாலை கிழக்கு, பா.வசந்தன்-கரப்பன்காடு, ச.சுகந்தினி-பூநகரி, ப.கோபிகிருஷ்ணா-வட்டக்கச்சி,க.தட்சனாஜினி-திருநெல்வேலி, யோ.சோமசுந்தரம்-கொக்குவில் மேற்கு,அ.சத்தியன்-ஏழாலை மத்தி, ர.சர்மிளா-பரந்தன், க.பிரபாகரன்-திருவையாறு, தி.பாலச்சந்திரன்-தருமபுரம், வ.ரஞ்சன்-தோணிக்கல், சி.சிவராஜ்-முல்லைத்தீவு,

ந.கார்த்திகா-பரந்தன்,பொ.சிவகுமார்-ஈச்சமோட்டை,ச.சிவத்திலகன்-பூநகரி, க.சசிகுமார்-ஸ்கந்தபுரம், ச.பார்த்தீபன்-திருவையாறு, அ.வாசுகி-கிளிநொச்சி,பி.லிசோதா-முரசுமோட்டை,அ.தமிழரசி-மே/பா எஸ்.சதீஸ்குமார், கட்டடங்கள் திணைக்கள விடுதி, கண்டி வீதி, இ.உதயசெல்வி-திருகோணமலை, ப.பர்மிளா-வட்டக்கச்சி,சி.சுபேந்திரன்-விஸ்வமடுக்குளம், த.சர்மிளா-உருத்திரபுரம்,

ஆ.பங்கயற்செல்வி-பிரதம செயலாளர் செயலகம்,வடமாகாணம், ச.ரமேஸ்குமார்-மானிப்பாய், இ.ரமேஸ்-பூநகரி, ப.சுஜீவன்-வட்டக்கச்சி, க.கடம்பசோதி-கனகபுரம், சு.வசந்தரூபி-உருத்திரபுரம், நி.வனஜா-மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, வடமாகாணம், த.சந்திரிக்கா-மிருசுவில், ம.தமிழினி-வேப்பங்குளம், பி.வினோதினி-ஆனந்தபுரம் கிழக்கு, கோ.அன்புராஜ்-பண்டாரிக்குளம், வி.தக்சிலாநிதி-புளொரிடா மைத்திரி,வலயக்கல்வி அலுவலகம், கிளி நொச்சி, ஜெ.புஸ்பாவதி-புதுக்குளம் வவுனியா, ச.ஜெனிதா-அரியாலை

இ.துஷிந்தன்-திருவையாறு,உ.றாதிகா-பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,கிளிநொச்சி,நி.யசோதா-மே/பா சுந்தரலிங்கம், சன்னதி வீதி,பத்தமேனி, அச்சுவேலி, கோ.பாலவேணி-கண்டாவளை, கோ.நிரஞ்சனன்-பம்பைமடு,ப.பார்த்தீபன்-தோனிக்கல், த.சிறிரூபன்-வவுனியா, கி.கௌசிகா-ரம்பைக்குளம்,வி.சுவெந்தினி-ஆடியபாதம் வீதி,சு.சங்கீதா-ரம்பைக்குளம்,கு.அகிலன்-வட்டக்கச்சி,ப.ஜெசூரன்-கனகாம்பிகைகுளம், சு.சுகநீதன்-பூநகரி,

செ.சந்திரேஸ்வரி-கிளிநொச்சி, ய.சுவர்ணாபளை,அ.ஜேசுதாசன்-சுங்கானை, பா.தேவரதன்-பூநகரி,பி.சுகந்தினி-கிளிநொச்சி, சி.உதயரேகா-மானிப்பாய், வி.வசந்தன்-வன்னியேரிக்குளம், ந.பிரசாந்தன்-யாழ்ப்பாணம், சி.அரியதாசன்-வந்தாறுமூலை, ச.காந்திமதி-பரந்தன், பி.உதயவிஜயகுமாரி-கிளிநொச்சி, க.கஜேந்தினி-வட்டக்கச்சி, க.மயூரதன்-ராமநாதபுரம்,

த.ரஜனிகாந்-ஸ்கந்தபுரம், தி.ஏரின் க்ளரிஸ்ரா-கிளிநொச்சி,நீ.சசிக்குமார்-பூநகரி, வி.சாரூபன்-வவுனியா,கோ.ஜிநோதினி-பளை,கு.குலேந்திரராஜா-பூநகரி,உ.யோகராசா-சாவகச்சேரி,சோ.சுகந்தினி-கிளிநொச்சி, நா.சோமசுந்தரராஜன்-கிளிநொச்சி, ஜெ.சதுஜா-சாம்பல்தீவு, கை.துஸ்யந்தன்-பரந்தன்

### முல்லைத்தீவு மாவட்டம்

**நேர்முகப் பரீட்சை நேரம் பி.ப. 1.00**

அ.சசிகுமார்-முல்லைத்தீவு,யோ.உசாந்தன்-வவுனியா,சு.உதயசீலன்-ஆனைக்கோட்டை, ப.திலீபன்-திருகோணமலை,ம.அமிர்தா-முள்ளியவளை, ச.சுதர்சன்-மல்லாவி,தி.குமுதினி-துன்னாலை,செ.சதீஸ்வரன்-முள்ளியவளை,வைரஜனிக்காந்தன்-முல்லைத்தீவு,செ.வாகினி-முல்லைத்தீவு, ச.சுதாகரன்-முல்லைத்தீவு

அ.ரி.அப்துல்ரகுமான்-முல்லைத்திட்டம், இ.தனுஜா-வவுனியா, ந.நிரோகினி-பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், ந.கௌரி சங்கரசர்மா-சிவன்கோவிலடி, சி.விஜிந்தன்-வவுனியா, இ.சிறிதரன்-முள்ளியவளை, ப.சேவியர் செல்வராஜா-வவுனியா, மை.நிசாந்தினி-கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம், ச.சுமந்திரன்-வவுனியா, கு.குணசிங்கம்-திருநெல்வேலி, செ.தமிழ்வாசன்-முள்ளியவளை, பி.பிரதீஸ்கரன்-ஒட்டிசுட்டான், ரா.அற்புதா-மல்லாவி,

இ.ராகவன்-முள்ளியவளை,தி.மதுவாணி-வவுனியா,ஏ.ஜீவராசா-வவுனியா,யோ.கீதா-யோகபுரம்,கோ.தியாகராஜா-நெடுங்கேணி, ச.சா.ஹமீது-முல்லையூர்,த.அமிர்தலிங்கம்-முல்லைத்தீவு,யோ.சுதாகர்-முல்லைத்தீவு, அ.கனகசிங்கம்-வவுனியா,ரெ.வி.வினிபிற்றா திலகேஸ்வரி-முல்லைத்தீவு,இ.சுதர்தன்-பூந்தோட்டம்,த.உதயன்-முல்லைத்தீவு, ம.கருணாகரன்-தண்ணீரூற்று,கி.சுதர்சன்-வவுனியா, க.விஜிந்தன்-முல்லைத்தீவு, து.சந்திரமோகன்-வவுனியா,வி.சரண்யா-அலம்பில், செ.ஜெசிகுமார்,முள்ளியவளை, பா.ஜமுனா-துணுக்காய்,ம.விஜயகுமார்-ஒட்டிசுட்டான், ச.புஸ்பலலிதா-யோகபுரம்,ப.நிருஜா-ஒட்டிசுட்டான்,சி.சிந்துஜா-பருத்தித்துறை, இ.குணாகரன்-வவுனியா,கு.ரபீசன்-முள்ளியவளை, ச.சதீஸ்வரன்-முள்ளியவளை, ம.சுகீதரன்-வவுனியா,வி.சசிரேகா-வவுனியா,க.மயூரதன்-முள்ளியவளை,ந.நாகராசா-கணுக்கேணி மேற்கு,தி.இரவீந்திரன்-முத்தையன்கட்டு, க.சுதர்சன்முள்ளியவளை,த.ஜெகதீஸ்வரன்-முள்ளியவளை,க.பிரசாந்தி-உக்கிளம்குளம், சு.சுகந்தினி-மாங்குளம்,

### வவுனியா மாவட்டம்

**நேர்முகப்பரீட்சை நேரம் பி.ப. 2.30**

த.தர்மேந்திரா-வவுனியா,ந.ரஜீஸ்-நெலுக்குளம்,த.சுஜீவன்-வேப்பங்குளம்,ம.கேசவன்-வவுனியா,இ.சஞ்சீவன்-கொழும்பு06, சி.அச்சுதன்-வவுனியா, கே.கிருஷ்ணராஜ்-பூவரசங்குளம்,கி.சர்மிளா-பூவரசங்குளம்,க.இந்துஜன்-நெலுக்குளம், பி.இந்திரராஜ்-பூந்தோட்டம்,

ந.ஜெயகரன்-தோணிக்கல்,சி.ஜனன்-உக்கிளான்குளம்,ர.பிரசாந்தி-வேப்பங்குளம்,சி.கஜேந்திரன்-நெலுக்குளம், சி.கோகுலவாணி-மகாரம்பைக்குளம், சி.கஜேந்திரன்-குருமன்காடு, ம.ரஞ்சனா-இலுப்பையடி, ந.கரன்-வவுனியா, சி.தினேஸ்குமார்-தோணிக்கல், மா.சிறிக்காந்-தவசிக்குளம், ம.ஜனார்த்தனி-வேப்பங்குளம், ஜெ.சுகந்தினி-கணேசபுரம்

சு.சுமதி-பண்டாரிக்குளம்,சி.அருந்ததி-மன்னார்,பெ.பிராஜினி றொபின்சன்-வவுனியா, சி.சிவகரன்-வவுனியா,பா.பிரதீபன்-யாழ்ப்பாணம்,த.கனகரட்ணம்-வவுனியா, வே.ஆயகுலன்-குரவன்காடு,ந.சுவேதன்-தோணிக்கல், க.துஷ்யந்தன்-மகாரம்பைக்குளம், க.பத்மபிரியா-வவுனியா, அ.கோகிலாதேவி-தோணிக்கல்,கா.காந்தீபன்-பூவர்சங்குளம்,

செ.விமலராஜா-உக்கிளாங்குளம், சு.துஷாலினி-திருநாவற்குளம்,சி.உதயனன்-மகாரம்பைக்குளம்,சி.தட்சாயின்-வவுனியா, ச.சோபனா-வவுனியா,த.ரஜீவன்-புளியங்குளம்,இ.சுதாகரன்-படாரிக்குளம்,சி.மேகலா-நெலுக்குளம்,து.ஜெயந்தன்-பூந்தோட்டம், சி.சுரெந்திரகுமார்-நெலுக்குளம், சி.மோகனச்செல்வன்-பாசையூர்,வ.தயாபரன்-உக்களாங்குளம்,ச.ஜீவசாந்தினி-வவுனியா,அ.தவீஷன்-தோணிக்கல்,

கீ.சசித்ரா-குரமன்காடு, ம.குகபாலினி-வவுனியா, உ.நிரோஷினி-வவுனியா, ப.சத்தியசீலன்-பூந்தோட்டம், ம.ஜெயப்பிரகாஷ்-கூமன்குளம், கி.கயல்விழி-வவுனியா, சி.சுகீர்தன்-ஆசிக்குளம், ஐ.பர்ஷானா-பட்டாணிச்சூர், சி.சத்தியகீர்த்தி-பூந்தோட்டம், அ.காயத்திரி-வவுனியா, மு.சதீஸ்-வவுனியா, தி.சிவகரன்-நெலுக்குளம்.

---

## 'வேம்பூ' மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் தமிழ் மன்ற வெளியீடான, வேம்பூ சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு கல்லூரியின் மேபிள் தம்பையா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது

இந் நிகழ்வில் யாழ். பல்கலைக் கழகத் தமிழ்த் துறைப் பேராசிரியர் என்.சிவலிங்கராஜா, உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியர் சரஸ்வதி சிவலிங்கராஜா ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொள்வர்.

ஆசியுரையைக் கல்லூரி அதிபர் திருமதி க.பொன்னம்பலமும் நூலின் வெளியீடு, மதிப்பீடு சார்ந்த உரைகளை யாழ். பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் இ. விசாகரூபனும் வழங்குவர்.(ச)

## கௌரவிப்பு விழா

யூன் மாதம் எதென்ஸ் நகரில் நடைபெற்ற மாற்றுவலு உள்ளவர்களுக்கான சர்வதேச ஒலிம்பிக் போட்டியில் இலங்கை சார்பாக யாழ்ப்பாணம் சிவபூமி மனவளர்ச்சி பாடசாலையிலிருந்து 4X100 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்குபற்றி வெள்ளிப் பதக்கத்தை பெற்ற செல்வன் சி.துஷ்யந்தனை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகத்தினர் கௌரவிக்கும் நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரியின் கலையரங்கில் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. அந் நிகழ்வில் மாணவனை பாராட்டி பரிசில்கள் வழங்கப்படவுள்ளது. (எ)

## சமல் ராஜபக்ஷவின் வரு...

மீராகுமாருக்கு எதிராகவும் இலங்கையில் இருந்து வந்திருந்த சமல் ராஜபக்ஷவுக்கும் எதிராகவும் கடும் கோஷங்களை எழுப்பினார்கள்.

இதனால் மீராகுமாரால் வரவேற்புரையை வாசிக்க முடியாமல் போனது. அப்போது நாடாளுமன்ற உறுப்பினர் தம்பிதுரை தலைமையில் எதிர்ப்பு தெரிவித்த அ.தி.மு.க. உறுப்பினர்கள் போர்க்குற்றச்சாட்டில் சிக்கியிருக்கும் இலங்கை பிரதிநிதிகள் இந்திய நாடாளுமன்றத்தில் இருக்கக் கூடாது என்றனர்.

விருந்தினர்களை வரவேற்று உபசரிப்பதுதான் இந்தியர்களின் கலாசாரம் என்று மீராகுமார் கூறியதையடுத்து உறுப்பினர்கள் அமைதியாகினர். இந் நிகழ்வின்போது தி.மு.க. உறுப்பினர்கள் அமைதியாக இருந்தனர்.

அதேவேளை இலங்கை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தமிழகத்திற்கு வந்தபோது விமான நிலையத்திலேயே தடுத்து திருப்பி அனுப்பப்பட்டனர்.

ஆனால் சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களை மட்டும் இந்திய அரசு வரவேற்று உபசரிப்பது தமிழகத்திலுள்ள 7 கோடிதமிழர்களின் உணர்வுகளை புண்படுத்துவதாக உள்ளது என பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ் கண்டனம் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார். (எ-1)

## இலங்கையின் குரலுக்கு...

உதவுங்கள். இதைத்தான் நாம் சர்வதேச சமூகத்திடம் கேட்கின்றோம்.

அண்மைக்கால குற்றச்சாட்டுக்கள், அவர்கள் தாம் தெரிவு செய்தவர்களிடமிருந்து வாக்கு மூலங்களை பதிவு செய்ததை காட்டுகின்றன. இது மனித உரிமைகளுக்கான போராட்டமா? என நாம் கேட்கின்றோம்.

ஜோஹனஸ்பேக் ரைம்ஸில் எழுதிய ஒரு கட்டுரையில் லூயிஸ் ஆபர் இலங்கையில் ஆட்சிமாற்றப்பட வேண்டும் என கூறியுள்ளார். இலங்கைக்கு ஒருபோதும் வராத ஒருவர் அத்திலாந்திக் சமுத்திரத்திற்கு அப்பால் இருந்து சொல்வதை நீங்கள் நம்புவீர்களா?

மக்களின் நலனை உறுதி செய்வதில் அரசாங்கம் முழுமுயற்சியில் ஈடுபட்டுள்ளது. எனவே எம் மீது யாரும் அழுத்தம் கொடுப்பதை நாம் விரும்பவில்லை. வடக்கில் அண்மையில் நடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது நச்சுத்தனமான பிரசாரம் செய்யப்பட்டது எனக் கூறப்பட்டது. ஆனால் அரசாங்கப்பக்கத்தில் இல்லாத கட்சிகளே அதிக வெற்றிகளைப்பெற்றன.

தேர்தல் முடிவுகள் பல விடயங்களை தெளிவுபடுத்துகின்றது. இந்த ஜனாதிபதியின் தலைமையிலுள்ள அரசாங்கம் நடத்திய சகல தேர்தல்களிலும் அரசாங்கம் வெற்றிபெற்றது. அரசாங்கம் பெறும் வாக்குகள் தொடர்ந்து அதிகரித்துச் செல்கின்றன என அமைச்சர் பீரிஸ் மேலும் கூறினார். (எ-8)

## வடக்கில் 377 பட்டதாரிகள்...

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டத்தில் பெயர் குறிப்பிடப்பட்டவர்களுக்கு இந்நேர்முகப்பரீட்சை 6ஆம் திகதி காலை 9 மணிமுதல் குறிப்பிட்ட நேரங்களில் கிளிநொச்சி பிராந்திய ஆணையாளர் அலுவலகம், கச்சேரி ஒழுங்கை, கிளிநொச்சிலன்றமுகவரியிலும்நடைபெறும் எனவே பெயர்குறிப்பிட்ட குறித்த தினத்தில் மேற்படி முகவரிக்கு,

பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் (புகைப்படப் பிரதியுடன், திருமணமான பெண் நேர்முகதாரியாயின், விவாகச் சான்றிதழ் (புகைப்படப் பிரதியுடன், தேசிய அடையாள அட்டை (புகைப்படப் பிரதியுடன்), கல்விச்சான்றிதழ் (க.பொ.த. (சா/த), க.பொ.த (உ/த), பட்டச்சான்றிதழ் (புகைப்படப்பிரதியுடன்) கிராமசேவை யாளர் / பிரதேச செயலாளர் ஆகியோரால் உறுதிப்படுத்தப்பட்ட நற்சான்றிதழ் / வதிவிடச் சான்றிதழ் (மூலப்பிரதியுடன்), அங்க வீனம் உற்றோர் எனின் அது பற்றிய மருத்துவச் சான்றிதழ், கடந்த மூன்று வருடங்களுக்கான வாக்காளர் டாப்பின் மூலப்பிரதி அல்லது கிராம சேவையாளரால் வழங்கப்பட்டு உதவி அரசஅதிபரால்மேலொப்பமிடப்பட்ட வாக்காளர் டாப்பில் மூன்று வருடங்களுக்கு மேலாக பதிவு செய்யப்பட்டுள்ளதென்றபடிவத்தின் மூலமான உறுதி உரைக் கடிதம் ஆகிய ஆவணங்களுடன் சமுகம் தருமாறு வடமாகாண பொது நிர்வாக பிரதிப் பிரதம செயலாளர் தி.இராசநாயகம் அறிவித்துள்ளார்.

இதில் யாழ்ப்பாணத்திலிருந்து 120 பேரும், மன்னார் 60, முல்லைத்தீவு 59, வவுனியா 60, கிளிநொச்சி 78 என்றவாறு நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விபரங்களை வலம்புரி காரியாலயத்தில் பார்வையிடமுடியும். (எ)




## புலிகள் சரணடைவது...

விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களான புலம்பெயர்ந்த தமிழர்களினால் கூறப்படும் பொய்யான குற்றச்சாட்டுக்கள் இந்த அறிக்கை வெளியீட்டுடன் முடிபுக்கு வந்துவிடும் என அவர் கூறினார்.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் உட்பட பல அரசியல் தலைவர்கள் கலந்து கொண்டனர். (எ-8)

## ஐரோப்...

சேர்த்துவருகின்றது. பிரிட்டன் கடந்த 6ஆம் திகதி தான் புதுப்பித்த பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் தமிழீழ விடுதலைப்புலிகளை மீண்டும் உள்ளடக்கியமை குறிப்பிடத்தக்கது. (எ-8)

## சனல் 4க்கு பதில...

பாதுகாப்பு அமைச்சின் வழிகாட்டலின்கீழ் விடுதலைப்புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போர் தொடர்பான அனுபவங்களை கொண்டதாக குறித்த ஆவணப்படம் அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மற்றும் இராணுவம், வான்படை, கடற்படை ஆகியன மனிதாபிமான நடவடிக்கையின் போது எவ்வாறு செயற்பட்டன என்பது தொடர்பான விடயங்களும் இந்த ஆவணப் படத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த வீடியோவின் பிரதியும், மனிதாபிமான நடவடிக்கை தொடர்பான அறிக்கையும்கொழும்பிலுள்ளவெளிநாட்டுத்தூதரகங்களுக்கும் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளுக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளது. (எ-8)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.08.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.